958

புதுமை

ஆசிரியர்
கோசல்ராம்

1959
19703

PUTHUMAI செப்டம்பர் 1 1959 விலை 25 காசு

உலகப் பிரசித்திப் பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக்-பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES
DRAWING FRAMES
FLY FRAMES
RING SPINNING FRAMES
REELING MACHINES
BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - SEP 1959
MADRAS

ENQUIRIES SOLICITED:

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, Coimbatore. (South India.)

Telephone: 409 & 1406 *Telegrams: "TEXTOOLCO"*

த. பெ. நெ 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

★

அலுமினிய பாத்திரங்கள். சமையல் பாத்திரங்கள், எனமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத்திரவியங்கள், பவுண்டன் பேனா, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிரான்ஞ்:

போன் : **333**

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

★

ஏஜன்ட்ஸ் :

போன் : **31752** த. பெ. நெ. **2345**

S. சந்தோஷ நாடார் & சன்ஸ்

1/4, ஈவனிங் பஜார் :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

புதுமை
ஆசிரியர்: கோசல்ராம்

இந்த இதழில்

மணி: 3 செப்டம்பர் 1959 ஓசை: 2

இராஜினாமாவா?...இல்லை?... ... 4
உணவும், ஊழலும் ... 5
கழகப் பித்தம் தெளியுமா? ... 8
இப்படியும் நடக்கலாம்? ... 9
அன்பிற்குரியவள் ... 10
பழரசம் ... 17
மூன்று கணவர்கள் ... 19
மரகதம் ... 22
நாலு வேலி நிலம் ... 23
சினிமாச் செய்திகள் ... 25
எனையறியாயோ, மூட மனமே ... 27
கிணற்று நீர் ... 30
விடிவெள்ளி ... 33
என்னேடி உன் போக்கு? ... 44
முழு நிலவு ... 45
பிறப்பும், வளர்ப்பும் ... 52
பாரதி அடித்த பயமெனும் பேய் ... 61
பூக்கன்னம் ... 64
உபதேசி ... 65
அஸ்தமனம் ... 71
தமிழில் சிறுகதைகள் ... 76
ஸ்தல ஸ்தாபன ஆட்சி ... 81
குடும்ப விளக்கு ... 84
பக்தன் பாரதி ... 88
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ... 91
பாட்டன் பாரதி ... 94

முகப்பு: 'விடிவெள்ளி'யில் ஓர் காட்சி.

இராஜினாமாவா?... இல்லை?...



[திரு ஜெயின், பார்லி... காங்கிரஸ் கட்சியின் பலத்த எதிர்ப்புக் காரணமாக பதவி நீங்கினார் என்று ...ல்லியில் 'விஷயமறிந்த' வட்...ங்கள் கூறுகின்றன.]

புதுமை

உணவும்—ஊழலும்

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்—வெறும்
சோற்றுக்கோ வந்ததிப் பஞ்சம்"—என்று

நெஞ்சம் குமுறி முழங்கினான், செஞ்சொற் கவிஞன் பாரதி.

ஆம்; வெறும் சோற்றுக்குத் தான் இன்று பஞ்சம்!

அந்நியர் ஆட்சியில் அல்ல, அடிமைத்தளை அறுத்திட்ட புண்ணியர் செங்கோலில்!

ஏகாதிபத்தியச் சுரண்டல் காலத்தில் ஏற்படும் தொல்லையல்ல; ஏழைகள் துயர் மாற்ற இருபத்தி நான்கு மணி நேரமும் உழைக்கிறோம் என்று பேசும் பொது மக்கள் தலைவர்களின் அரசாங்கத்திலே நேரிட்டுள்ள சங்கடம்!

நெருங்கினால் விலகும் 'கானல் நீராக' ஓடுகின்ற விலைவாசி உயர்வுகள், நெஞ்சம் குமுறி நிற்கும் சாதாரணக் குடிமகனை நெருப்பாக எரிக்கின்றன! யாரை நோவது? அவனே, 'இந்நாட்டு மன்னன்' ஆயிற்றே!

அவன் இந்நாட்டு மன்னனாகி- ஆண்டுகள் 12 பறந்துவிட்டன! 12 ஆண்டுகளுக்குப் பிறகும் பஞ்சம்!

'உணவுப்பொருள் விலைவாசிகளின் உயர்வை எதிர்த்து உண்ணாநோன்புகள்! மறியல்கள், கைதுகள்!' — செய்தித் தலைப்புகளை அடைக்கும் சோகச் சொற்றொடர்கள்!

'கள்ள மார்க்கெட்காரர்களுக்குக் கடும் எச்சரிக்கை!'

'பதுக்கல், சமுதாய விரோதிகளின் செயல்!'—இவைபோன்ற அமைச்சர்களின் ஓயாத மூச்சடைக்கும் பேச்சுக்கள்!

சோக நாடகத்தின் சிகரம்போல, நாலரை ஆண்டுகளாக நாற்காலியைத் தேய்த்த நமது மதிப்பிற்குரிய மத்திய உணவுத்துறை அமைச்சரின் வெளியேற்றம்!

'இதை அவர் என்றோ செய்திருக்கலாம் — எவ்வளவு சீக்கிரம் போனாரோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது!' என்று அமைச்சர்பிரானை வழியனுப்பும் கண்ணீர் வடியாத, புன்னகை பொங்கும் உரைகள்!

'எரியும் வீட்டிலே பிடுங்கியது இலாபம்' என்ற வழியில், பலாப் பழக்கடை பனியா, "வெளியே விழுந்த இலை'யில் என் பங்கு என்ன?' என்று நாக்கைச் சப்புக் கொட்டும் நகைச்சுவைக் காட்சி!

இதுதான்—நமது நாட்டிலே இன்று வந்துள்ள -- சோற்றுக்கு வந்துள்ள 'பஞ்ச நாடக'த்தின் கதைச் சுருக்கம்!

* * *

உணவுப்பிரச்னையில், 'வாடும் வயிறு'களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சில புள்ளி விவரங்கள்—

1955–56-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் அதிகமாகப் பாசனவசதி பெற்றவை, சுமார் 160 இலட்சம் ஏக்கர்கள்!

இரண்டாவது திட்ட முடிவில் இன்னும் அதிகமாக சுமார் 194 இலட்சம் ஏக்கர்கள் பாசனவசதி பெறும்!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்தாவது ஆண்டில்—1955–56ல் உணவுப் பொருள் உற்பத்தி சுமார் 653 இலட்சம் டன்கள்!

நிர்ணயித்த இலட்சியத்தை விட சுமார் இலட்சம் டன்கள் அதிகம்!

இரண்டாவது ஐந்தாண்டு முடிவில்—ஒவ்வொரு ஆண்டிற்கும் உற்பத்தி செய்ய வேண்டிய இலட்சிய எல்லை—சுமார் 805 இலட்சம் டன்கள்!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயம், நீர்ப்பாசனம் ஆகிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை, ரூ 645 கோடி!

மேற்கொள்ளப்பட்ட, பெரிய, நடுத்தர, சிறிய திட்டங்கள் சுமார் 468!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய முன்னேற்றம், நீர்ப்பாசனத்திற்கு அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ 1,330 கோடிகள்!

தலையைச் சுழலவைக்கும் இந்தப் புள்ளி விவரங்கள், நமது மனத்தையும் பூரிக்கச் செய்கின்றன—ஒப்புக்கொள்கிறோம்!

'சோதனைகளிடையே நமது சாதனைகள், இமயம் போல உயர்ந்தவை: எந்த நாட்டின் சாதனைகளோடும் சமமாக வைத்து எண்ணக் கூடியவை!' உண்மைதான்!

ஆனால்...இந்தச் சாதனைகள்,—நூற்றுக்கணக்கான அணைக்கட்டுகள். இலட்சக்கணக்கான ஏக்கர்களில் அதிக விளைச்சல்...கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு ...நமது வேதனைகளை எந்த அளவிலே தீர்த்திருக்கின்றன என்பது தான் கேள்வி!

'சோற்றுக்காகவே சுதந்திரம்!' என்று சுருக்கமாகப் பேசினார் மகாத்மாஜி.

'அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெற்றது, இந்தியாவிற்கு முன்னேறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. பசியிலிருந்து விடுதலை பெறுவதோ, இந்தியாவிற்கு முன்னேறுவதற்கு வழிகளைத் திறக்கும். அதன்படி, இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களுக்கு, உண்பதற்குப் போதுமான உணவு கிடைப்பதற்கு முதல் முதலாக வாய்ப்புகள் ஏற்படும். அவர்களில் அநேகருக்கு, தேசிய சுதந்திரத்தால் அவர்கள் எதிர்பார்த்த நன்மைகளில் மிகப் பெரிய காரியம் கைகூடிய மகிழ்ச்சி ஏற்படும்' என்று விளக்கமாகக் கருத்துரை வழங்கினார், திரு. டக்ளஸ் என்ஸ்மிங்கர் என்ற அமெரிக்க நிபுணர்!

முன்னேறக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியும் கூட, திட்டமிட்டுச் செயல் புரிந்தும் கூட—நாட்டிலே நாம் பார்ப்பது—ஆயிரக்கணக்கான நியாயவிலைக் கடைகள்! அவைகளுக்கு அருகிலேயே அநியாய விலை அங்காடிகள்! அரைமைல் நீளக் 'க்யூ' வரிசைகள்! அடிவயிறு ஒட்டிப் போனவரின் முணு முணுப்புக் கீதங்கள்!

அப்படியென்றால்—புள்ளி விவரங்கள் பொய்யா? கோடிக்கணக்கான ரூபாய்கள் ஆற்றிலே கொட்டிய பணமா?

அல்ல...அல்ல...தலைவர்கள் மூளையைக் குடைந்து திட்டங்களை உருவாக்கி, அமுல் நடத்தியதும் கோடிக்கணக்கிலே செலவிட்டதும் பொய்யல்ல!

பஞ்சம் தீரவில்லை, பசி மாறவில்லை—அதுவும் பொய்யல்ல!

* * *

முயற்சி இருந்தும் தோல்வி வந்தது ஏன்?' என்பது இன்றுகேள்வி—காங்கிரஸ்பார்லிமெண்டரிகட்சி இக் கேள்வியைத் தீவிரமாகக் கேட்க ஆரம்பித்தாலும், ஸ்ரீ ஜெயின் தனது உணவுக் கொள்கை வெற்றிபெற வில்லை என்று உணர்ந்து கொண்டதாலும், தனது பதவியையே இராஜினாமா செய்ய வேண்டி நேரிட்டு விட்டது!

உணவுப்பிரச்சனையில், தேசியத் தலைவர்களில் இருந்து தேசத்தின் குடிகள் வரை சிந்திக்கவேண்டிய கேள்வி!

நிர்வாகத் திறனிலும், துணிச்ச

லாகச்செயலாற்றுவதிலும் சிறந்தவர் என்று புகழ்வாய்ந்தவர் பட்டீல் நமது 'உணவுப்பிரச்னை' என்னும் கட்டுக் கடங்காத மதயானையை அடக்க மனம் கொண்டு அங்குசம் ஏந்தியுள்ள இந்தப்பொன்னுனபொழுதில்நாம் ஆராய வேண்டிய அவசர வினு!

* * *

உணவுப் பிரச்னையைத் தீர்க்க நாம் செய்ய வேண்டிய முதல் செயல்—கட்சி வித்தியாசம் மறந்த, இணக்கமான சிந்தனை.

செய்கிருேமா? இல்லையே?

'சுதந்திராக்கட்சி'யின் சிற்பி, ராஜாஜி தேசத்திலே சிலரால் அவர்இன்னும்பாராட்டப்படுவது, பிறர் சொல்லிக் கொண்டிருந்த, 'கண்ட்ரோல் ஒழிப்பை' காரியமாக்கிக் காட்டிய காரணத்தால்!

இன்று—'அரசாங்க கண்ட்ரோல்'களை இறுக்கமாக, கண்டிப்பாக அமுல் நடத்துவதே பிரச்னை தீர வழி,—அதைச் செய்ய முடியவில்லை, எனவே பதவி நீங்குகிறேன். !' என்று வெளியேறும் 'நேரெதிர்' கருத்துக் கொண்ட திரு. ஜெயினுக்குப் 'பூச்சுற்றி புகழ் பாடி' 'பலாப் பழக்கடை'க்குச் சரக்கு 'கான் வாஸ்' செய்கிருர் என்ருல், எங்கே இருக்கிறது நாணயம்?

'உணவுப் பிரச்னையைப் பயன் படுத்திஇருக்கிறஅரசாங்கத்தைக் கவிழ்க்க முனைவது' என்று எதிர்க்கட்சியினர் செயல்படுகிருர்கள், உ.பி. யில், பீகாரில், மேற்கு வங்கத்தில்!

இந்தப் பிரச்னையிலும் எதிரா?

ஜெர்மனி தாக்கியபொழுது, 'கன்ஸர் வேடிவ்'களின் கழுத்தை தொழிற்கட்சி அறுத்ததாக வரலாறு இல்லை!

இரஷ்யா தாக்கினல்—குடியரசுக் கட்சிக்கு, ஜனநாயகக் கட்சி அமெரிக்காவில் குழி வெட்டக் கிளம்பாது!

ஆனல், 'உள்ளிருந்தே கொல்லும் பசிப்பகை'க்கு எதிராகப் போராடும் ஆளும் கட்சிக்கு அடியிலே வெடிவைக்கும் விந்தை நமது நாட்டிலே நடக்கிறதே!

* * *

உணவு—பிரச்னையே அல்ல!

கட்சிகளை மறந்து, எல்லோரும் ஒன்ருக நின்ருல்!

கோடிக்கணக்கான மக்களைத் தரிசாக இருக்கும் இலட்சக் கணக்கான ஏக்கர்கள் பக்கமாக, இரவோடு இரவாகச் சட்டம் செய்து திருப்பி விட்டால்!

கங்கையையும் காவிரியையும் இணைத்தால்—

பெரும் திட்டம் மாத்திரம் தீட்டாது, ஆங்காங்கே பூமித்தாயின் வயிற்றில் புதிய கிணறுகளை, குழாய்க் கிணறுகளை, வடி, முனைக் கிணறுகளை, ஆர்ட்டிஷியன் கிணறுகளைத் தோண்டினல்—

இராஜ்யத்திற்குக் குறைந்தது ஒரு இரசாயன உர உற்பத்தி ஆலையாவது துவங்கினல்—

நிர்வாகத் தடைகளைப் பொடி செய்தால்; நிர்வாக ஊழலை ஒழித்துக்கட்டினல்; நிலச் சட்டங்களை ஆறப் போடாது அமுலாக்கி நிச்சயமற்ற நிலையை; நீக்கினல் கூட்டுப்பண்ணைகளை ஏட்டிலே நீக்கி, புதிய முறையில் நாட்டிலே கண்டால்; எல்லாவற்றிற்கும் மேலாக—அயராது, தளரா[illegible] உழைத்தால்; பொது நலம் கருதி உழைத்தால்,

உணவு—பிரச்னையே அல்ல!

* * *

'இதென்ன நடக்காத காரியங்களைப்பட்டியல் போட்டுக் காட்டுகிறீர்கள்?' என்று கேட்கிறீர்களா?

'முடியாது என்ற சொல் முட்டாள்களின் அகராதியில் தான் உண்டு!' என்ருன்நெப்போலியன்.

'இப்படை தோற்கின், எப்படை ஜெயிக்கும்?' என்பதே நமது கேள்வி:

இரஷ்யா, செய்ததை ஏன் இந்தியா செய்ய முடியாது? சீனு சாதித்ததைப் பாரதம் ஏதனல் வெற்றி கொள்ள முடியாது! எந்த விதத்திலே அமெரிக்கர்களுக்கு நாம் தாழ்ந்தவர்கள்?

இதை எண்ணியும் நமது நரம்புகள் முறுக்கேறி, செயல்படத்

தொடங்காவிட்டால்—

பஞ்சம் தலைவாசலைத் தட்டும் பொழுது, சரித்திரம் நம்மை வேறு வழிகளில் அழைத்துச் செல்லும்!

உற்பத்தி 'செய்; அல்லது ஒழிந்து போ!' (Produce or perish) என்று முழங்கும்!

கழகப் பித்தம் தெளிந்ததா ?

உதிரிகளுக்கு உதை!

காங்கிரஸிற்கு வெற்றி மாலை!—இது தான் புதுவை மக்கள் சிந்தித்துத் தந்துள்ள சிறந்த தீர்ப்பு!

நூற்றுக்கு எண்பது பேர் வாக்குச் சாவடிக்குச் சென்று வழங்கியுள்ள முடிவு!

* * *

இல்லாத ஊருக்கு வழி சொல்லிக் கொண்டிருக்கும் பிரிவினைப் பித்தர்கள், சென்னை நகராண்மைக் கழகத் தேர்தலிலே சிறிது வெற்றியைச் சுவைத்தவுடனே போதை தலைக்கேறி தேசத்தின் கொடியைக்கூட அவமதிக்கத் துணிந்து, இனி நடக்க விருக்கும் தேர்தல்களிலெல்லாம் தி. மு. க. தான் வெல்லும் என்று முரசுகொட்டினுர்கள் அந்தப் பித்தர்களின் சித்தம் தெளிய, ஒரு தொகுதியில் கூட ஜாமீன்தொகை கூடத் திரும்பி வர இயலாத நிலையில், 27 இடங்களிலும் 27 படுதோல்விகளை வழங்கியிருக்கின்றனர் புதுவை மக்கள்!

கன்னடர் கை கொடுக்காத, ஆந்திரர் ஆதரிக்காத, மலையாளத்தார் மனமொப்பாத, தமிழர்களே பெரும்பாலும் தலையசைத்து ஒப்பாத திராவிட நாடு வேண்டும் என்று வீண் கிளர்ச்சி செய்வோர்களின் அரசியல் சுடுகாடாக புதுச்சேரி மாறிவிட்டது!

பழைய சரித்திரத்தில் இல்லாத, நவீன சரித்திர ஒற்றுமை உணர்விற்கு எதிரான, பொருளாதார நீதியிலே சாத்தியமற்ற, திராவிடம், 'வேண்டாம்' என்று காரை கல்லறை கட்டி விட்டது!

'அறிவகம்' அசையவில்லை ; அண்ணு பேசவில்லை ; தம்பிகள் மூர்ச்சை இன்னும் தெளியவில்லை!

நீண்ட சிந்தனைக்குப் பிறகு மூர்ச்சை தெளிந்து ஒரு 'போஸ்டரை' ஒட்டி நாடகமாடுகிருர்கள்!

'முயற்சி உடையார், இகழ்ச்சி அடையாராம்!'

இம்முறை அவர்கள் முயலவில்லையா? இல்லை, அடைந்தது, இகழ்ச்சியாகத் தெரியவில்லையா?

அதேபோல், முதுமொழிகளை முன்னேற்றக் கழகத்தினரின் தனிச் சொத்து என்பது தப்புக் கணக்குப் போடுகிருர்களா?

மக்கள் மன்றம் அடுக்குமொழிக்காகவோ, அழகுப் போஸ்டர்களுக்காகவோ மனம் மாருது என்பதை உணர்வார்களாக!

* * *

கழகத்தோடு ஒப்பிட்டால் 'காம்ரேடு'களின் நிலை பரவாயில்லை—என்ருலும், கேரளத்திலே காங்கிரஸ் ஆட்சியாளர் ஜனநாயகத்தையே கொலை செய்து விட்டார்கள்!' என்று அபாண்டமாகப் பேசி, புதுச்சேரியைத் தங்கள் 'இரண்டாவது கேரளா'வாக மாற்றிக் கொள்ள மனப்பால் குடித்த மாஸ்கோ பக்தர்களுக்கும், 'நாற்காலி யோகம்' அடிக்க வில்லையே!

34 இடங்களில் போட்டியிட்டு-அதுவும்—காம்ரேடுகள் என்று சொல்லிக் கொள்ளாமல், 'மக்கள் முன்னணி' என்ற மாறு வேடத்தில் போட்டியிட்டு-13 இடங்களில்தான் அவர்களும் வெற்றி பெற்றிருக்கிருர்கள்!

கேரளா, நாட்டு மக்களின், ஜனநாயக வாதிகளின் கண்களைத் திறந்து விட்டன என்பதை நிதரிசனப்படுத்தி விட்டன, புதுவை முடிவுகள்!

'ஜனநாயகமா! சர்வாதிகாரமா! என்று சிந்தித்து,'பாரத ஜனநாயகமே' வேண்டும்; மாஸ்கோ மாடல்' சர்வாதிகாரிகளும் வேண்டாம்!' என்று அழுத்தம், திருத்தமாகப் புதுவை மக்கள் முழக்கம் இட்டிருக்கிருர்கள்!

மக்கள் சீர்தூக்கி. சிந்தித்து வழங்கியுள்ள ஜனநாயகம் வேண்டும் என்ற எதிர்பாராத தீர்ப்பு—ஸ்தாபனத்திற்காக அறிவிக்கப்பட்டதே தவிர, தனி நபர் யாருக்காகவுமல்ல.

'பெருமை பேச வேண்டாம், பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்!' மக்கள் யாரோ ஒருவர் பெரிய மந்திரியாவதற்கோ அல்ல-ஒரு சிலர் மந்திரியாவதற்காகவோ, ஓட்டளிக்கவில்லை. ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்றும் நாட்டுப் பிரிவினை வேண்டாமென்றும் தெரியப்படுத்தும் நாணயத்துடன் புதுவைக் காங்கிரஸ்காரர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நாடும் நாமும் எதிர் பார்க்கிருேம்.

இப்படியும் நடக்கலாம்



அன்புக்குரியவள்

எம்.கே.சங்கரன்

மாப்பிள்ளை அழைத்து ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற ரதத்தில் கம்பீரமாக வீற்றிருந்தான் மணமகன் சேகர். புது மனைவியை அடையப் போகும் மகிழ்வு அவன் முகத்தில் தேஜஸைப் பரப்பி இருந்தது. இன்னும் சற்று நேரத்தில் சந்திராவின் கரங்களைப் பற்றி விடுவான். பிறகு, சந்திரா அவனுக்கு உரியவளாகி விடுவாள்!

பாவம்! சுந்தரத்தின் மனத்தில் வேதனை அழுத்தியது. ஏக்க அலைகள் அவன் நெஞ்சை அரித்தன. முந்திய நாள் வரை சந்திராவின் கல்யாணம் சிறப்பாக நடைபெற முழு மனத்துடன் வேலை செய்தான் சுந்தரம். இன்று ஏன் அவன் மனம் இப்படி அலைபாய வேண்டும்?

கூட வந்து கொண்டிருந்த பாஸ்கருக்குச் சுந்தரத்தின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பாஸ்கரன் சுந்தரத்தின் பால்ய நண்பன். இப்பொழுது மதுரையில் உத்தியோகம் பார்க்கிறான். சந்திராவின் கல்யாணத்திற்காக லீவு எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.

வந்ததும் டவுனுக்குச் சென்று சுந்தரத்தைச் சந்தித்து, "இதெல்லாம் என்ன சுந்தரம்! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! உங்கள் காதல் விஷயம் என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

"எல்லாம் ஜாதகம் பண்ணின கோளாறுதான் பாஸ்கரன்! எனக்கும் சந்திராவுக்கும் ஜாதகம் பொருந்தவில்லை" என்று பதிலளித்து விட்டான் சுந்தரம்.

பாஸ்கரனால் இதை நம்ப முடியவில்லை. ஊரார் கூட கல்யாணம் நின்று போனதற்குக் காரணம் ஜாதகம் தான் என்றனர். ஆனால் உங்களுக்குள் ஏதோ கோளாறு இருக்க வேண்டும் என்று பாஸ்கரன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

சுந்தரமும் சந்திராவும் கொண்டிருந்த இணையற்ற நட்பை நன்றாகத் தெரிந்தவன் பாஸ்கரன். தவிர, அவர்கள் இருவரும் முறையாகக் கல்யாணம் செய்துகொள்ளும் உரிமை பெற்றவர்கள். ஆம், சந்திரா சுந்தரத்தின் மாமா பெண், சந்திரா பிறந்த அன்றே 'சுந்தரத்துக்குத்தான்' என்று பெரியவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. முந்திய தடவை பாஸ்கரன் திருநெல்வேலிக்கு வந்த போதுகூட அந்த உரிமையில் தான் இருவரும் நடந்து கொண்டனர். ஆனால் இன்று அந்த நிலைமை மாறக் காரணம்?

"பாஸ்கரன்! காதலின் சக்தி கல்யாணத்திற்குப் பின்னும் நீடித்திருக்குமா?" — திடீரென்று பாஸ்கரனிடம் ஒரு கேள்வியைப் போட்டான் சுந்தரம்.

"இதென்ன பைத்தியக்காரத்தரமான கேள்வி! காதலின் சக்தி செத்த பிறகும் கூட நீடித்திருக்கும்" என்றான் பாஸ்கரன்.

"இதெல்லாம் கதைகள் தான். காதல் கல்யாணத்திற்குப் பிறகு அழிந்து விடுகிறது. பக்கத்து வீட்டு ராமு சந்திராவின் சிநேகிதி கமலாவைக் காதலித்தான், உனக்குத் தெரியுமா?"

பாஸ்கரன் சுந்தரத்தின் முகத்தை உன்னிப்பாய்க் கவனித்தான். கொஞ்சம் கொஞ்சமாகச் சுந்தரத்தின் வாயிலிருந்தே விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு விட்டான்.

கல்யாணம் நின்று போனதற்குக் காரணமே அந்தக் கமலாவும் ராமுவும் தான். ராமு, கமலா இவர்களின் காதல் ஒரு பெரிய கதை. அவர்கள் காதலை அழித்து விட எத்தனையோ சக்திகள் திரண்டு வந்தன. கமலாவின் தந்தையே அவர்கள் காதலுக்கு முதல் எதிரியாக இருந்தார். கமலாவுக்கு எத்தனைபேர் தடைகள் விதித்தும் ரகசியமாக ராமுவைச் சந்தித்து வந்தான். இரு குடும்பங்களுக்கும் பெரிய அடிதடி சண்டைகள் கூட நிகழ்ந்தன. முடிவு..? கமலாவின் தந்தை அவர்கள் காதலுக்குப் பணிய வேண்டிய ஆயிற்று. வெற்றியுடன் கமலாவின் கரம்பற்றி

விட்டான் ராமு. ஆனல் பிறகு தான் அவர்கள் வாழ்க்கை தடம் புரள ஆரம் பித்தது. ராமுவுக்கும் கமலாவுக்கும் துளிகூட ஒத்துக் கொள்ளவில்லை. தினமும் அவர்களுக்குள் மனத்தாங் கல் தான். கமலா கோபித்துக் கொண்டு தகப்பனுர் வீட்டுக்குப்போய் மாதக் கணக்கில் தங்கிவிடுவாள். இவர்கள் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் தானு என்று சந்தேகப்படுமளவிற்கு அவர்கள் நடந்து கொண்டனர்.

பக்கத்து வீட்டிலிருந்து இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரத்தின் மனத்தில் ஒருவிதத் திகில் பற்றிக் கொண்டு விட்டது. காதலுக்காகத் தீவிரமாகப் போராடி வெற்றி கண்ட அவர்கள் வாழ்க்கையே கலகலக்க ஆரம்பித்து விட்டதே, தங்கள் வாழ்க் கையும் பிற்காலத்தில் இம்மாதிரி செல் லக்கூடுமோ என அஞ்சினுன். எனவே இது விஷயமாக அவன் தீவிர ஆராய்ச்சி செய்தான். பக்கத்து வீட்டு நிகழ்ச்சிகள் அவன் ஆராய்ச்சிக்கு உருக்கொடுத்துக் கொண்டிருந்தன. தவிர, பல காதலர்கள் கல்யாணத்திற் குப்பின் அமைதியின்றி வாழ்வதையும் பலர் மூலம் அவன் கேள்விப்பட்டான். கல்யாணத்திற்கு முன் காதலியைப் பார்க்க வேண்டும், அவளிடம் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வம் பொங்கிக் காதலை வளர்க்கி றது. கல்யாணத்திற்குப் பிறகோ, சில் லரை மனஸ்தாபங்கள் கூடப் பெரிதா கப் பட்டு விடுகிறது. சாதாரண மனை வியைக் கணவன் கடிந்து கொண்டால் அவள் 'கணவன் தானே' என்று சகித் துக் கொள்வாள். ஆனல்:காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவன் லேசாகக் கோபித்துக் கொண்டாலும் அவள்மனத்தில் பெரிய புயல் உருவெ டுத்து விடுகிறது. தூரத்திலிருக்கும் பொழுது ஜோதியாகத் திகழ்ந்த காதல், கல்யாணம் செய்து நெருக்கம் ஏற்படுத்திக் கொண்ட பிறகு நெருப் பாக மாறிவிடுகிறது. சுந்தரத்தின் மன தில் இவ்வித சிந்தனைகள் உருவெடுத் துக் கொண்டிருந்தன.

இந்தச்சந்தர்ப்பம் பார்த்து சுந்தரத்திற் கும் கமலாவுக்கும் ஜாதகம் பொருந்த வில்லை என்ற பிரச்னை எழுந்தது. இத னல் இயற்கையாகவே அவர்கள் கல் யாண விஷயம் கலகலக்க ஆரம்பித்து விடடது. சுந்தரத்தின் வீட்டுக்கு வந்தி ருந்த சந்திரா, "ஜாதகம் பொருந்தாமல் போய்விட்டதே" என மிகவும் கவலைப் பட்டாள்.

"சந்திரா, இப்போது நாம் கொண்டி ருக்கும் இந்த அன்பு கல்யாணத்திற் குப்பின் நீடித்திருக்குமா?" என்று அவளிடம் கேட்டான் சுந்தரம்.

இந்தச் சமயம் பார்த்துப் பக்கத்து வீட்டில் பெரிய கூக்குரல் எழுந்தது. வழக்கம் போல் ராமுவுக்கும் கமலா வுக்கும் பெரிய சண்டை! இதைப் பார்த்து விட்டு வந்த சந்திரா சுந்தரத் திடம் பதில் பேசமுடியாமல் திணறி னுள். இருவரும் நீண்டநேரம் சிந்தித் தனர். தங்கள் அன்பைச்சகோதர அன் பாக மாற்றிக் கொள்வது என்று பிர திக்ஞை செய்து கொண்டனர்.

இவைகள் அனைத்தையும் கேட்ட பாஸ்கரன், "ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டாய், சுந்தரம்! இனி சந்திரா மீது உனக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்ருன்.

"எந்த உரிமையும் எனக்கு வேண் டாம். என்மீது கொண்டுள்ள அன்பை அவள் மறக்காமலிருந்தால் அதுவே போதும்."

"உன் மீது அன்பு செலுத்த இனி அவள் யார்?"

"அவள் யார்?" — சுந்தரம் ஒரு கணம் திகைத்துப் போய் விட்டான்.

பாஸ்கரனுக்குச் சுந்தரத்தைப் பார்க் கப் பரிதாபமாக இருந்தது. ரதம் கல் யாண வீடு போய்ச் சேர்ந்தது. முகூர்த் தத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மெதுவாக, "பாஸ்கரன்!" என்று அழைத்தான் சுந்தரம். பாவம்! அவன் முகம் அளவற்ற கவலையால் சாம்பிப் போய் இருந்தது." என் மனம் ரொம் பவும் வேதனை அடைகிறது பாஸ்கரன்! இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட முடி யுமா?" என்று கேட்டான்.

"இதென்ன சுந்தரம் திடிரென்று இப்படிச் சொல்கிருய்? இனி அது முடி கிற காரியமா?"

"என்னை என்னுலே புரிந்து கொள்ள முடியவில்லை, பாஸ்கரன்! இந்தக் கல் யாணம் நடக்கக் கூடாது என்று ஏதோ

ஒன்று என்னிடம் சொல்வது போல் இருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரம் சென்றால் நான் ஏதாவது உளறிக் கொட்டி ரகளை பண்ணி விடுவேனோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது."

"மனத்தைக் கொஞ்சம்சாந்திப்படுத் திக்கொள், சுந்தரம். தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது. இனி கவலைப் படுவதில் பயன் என்ன?"

இருவரும் மணப் பந்தலில் அமர்ந் தனர். சந்திராவின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டு விட்டான். மங்கல அரிசியை மணமக்கள் மீது தூவிவிட்டு, பக்கத்தில் பார்த்தான் பாஸ்கரன். அருகிலிருந்த சுந்தரத்தைக் காணவில்லை. கல்யாணச் சந்தடியில் எப்படியோ நழுவிவிட்டான். கல்யாண வீடு முழுவதும் தேடி விட்டு டவுனிலுள்ள சுந்தரத்தின் வீட்டுக்குச் சென்றான் பாஸ்கரன்.

சுந்தரம் வீட்டில் தான் இருந்தான். அவனைத் தவிர வேறுயாரும் அங் கில்லை. எல்லோரும் கல்யாண வீட்டுக் குப் போயிருந்தார்கள். சுந்தரம் ஒரு படுக்கையில் குப்புற விழுந்து குழந்தை மாதிரி தேம்பி அழுது கொண்டிருந் தான்.

பாஸ்கரன் அவன் அருகில் அமர்ந்து, "சுந்தரம், நீசுத்தக்கோழை! இப்படிப் பட்டவன் அன்றே மறுத்திருக்க லாமே!" என்றான். சுந்தரத்தின் கண் களில் நீர் அதிகமாகியதே தவிரக் குறையவில்லை.

பாஸ்கரன் மதுரை சென்று விட் டான். சந்திராவும் புது வாழ்வைத் தொடங்க தன் கணவனுடன் மதுரைக் குப்போய்விட்டாள். பசுமைசூழ்ந்திருந்த சுந்தரத்தின் வாழ்வில் பாலை குடி கொண்டுவிட்டது. உயிரில் பாதியை இழந்து விட்டுப் பிணம் போல் நடமாடி னான். அவன் உடம்பில் ஒவ்வோர் அணுவிலும் சந்திராவின் குரல் தான் ஒலித்தது.

ஒரு மாதம் கழித்து சந்திரா திருநெல் வேலிக்கு வந்தாள். வந்த அன்றே சுந் தரத்தைப் பார்க்க டவுனுக்கு ஓடோ டியும் வந்து விட்டாள். சுந்தரம் மகிழ்ச்சி யால் பூரித்துப் போய்விட்டான். 'என் சந்திரா என்னை மறக்கவில்லை. மறக்க வும் மாட்டாள்' என்று இதயம் பொங் கினான். அன்றே அவன் பாஸ்கரனுக்கு 'தூரத்தில் ஏற்றிய தன் அன்பு தீபம் ஜோதியாய்ப் பிரகாசிக்கிறதே தவிரக் குறையவில்லை' என்று கடிதம் எழுதி னான். சந்திரா தங்கிய அந்த ஒருவார மும் இன்ப நாட்களாகவே இருந்தது சுந்தரத்திற்கு.

சுந்தரத்திற்குக் கல்யாணம் செய்யத் திட்டமிட்டபோது அவன் அவ்வளவு எளிதாகச் சம்மதிக்கவில்லை. சந்திரா வின் ஸ்தானத்தில் வேறு எந்தப் பெண்ணையும் வைக்க அவள் மனம் துணியவில்லை.

சுந்தரத்திற்குத் திடிரென்று விஷஜு ரம் வந்தது இரண்டு மாதங்கள் அதன் பிடியில் சிக்கி, மரண வாயில் வரை சென்று விட்டான். அவன் நல்ல காலம் ஜுரம் தணிய ஆரம்பித்துக் கொண்டி ருந்தது.

இந்தச் சமயத்தில் சந்திரா வந்திருப் பதாக அவன் கேள்விப் பட்டான். ஒரு வாரத்திற்கு முன்பே வந்து விட் டாள் என்பதைக் கேட்ட போது அவன் மனம் சுருங்கி விட்டது. 'ஒரு வாரமாகியும் சந்திரா தன்னைப் பார்க்க வரவில்லையே! சந்திரா என்னை மறந்து விட்டாளா?" என ஏங்கினான்.

"அம்மா சந்திராவை நான் பார்க்க வேண்டும். அழைத்து வர மாட் டாயா?" என்று தன் தாயிடம் சொன்னான்.

"சுந்தரம் இம்மாதிரி சமயங்களில் அவளாகவல்லவா உன்னைப் பார்க்க வர வேண்டும்? நாம் போய் அழைத்து வருவதாவது" என்றாள் அவன் தாயார்.

"அம்மா, என்ன இருந்தாலும் சந்திரா நம் பெண்தானே சும்மா அழைத்து வா" என்றான்.

வேறு வழியின்றி ஜங்ஷனுக்குப் போய் சந்திராவை அழைத்துக் கொண்டு வந்தாள் சுந்தரத்தின் தா யார். சந்திராவின் குரல் வாசலில் கேட்டதுமே புத்துணர்ச்சி வந்தவன் போல் படுக்கையிலிருந்து எழுந்து உட் கார்ந்தான் சுந்தரம். "அத்தான்!" என்று அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள் சந்திரா. அவளை அன்புடன் வரவேற்று உட்காரச் சொன்னான் சுந்தரம். "மதுரையிலிருந்து நீ எப் போது வந்தாய்?" என்று கேட்டான்.

" வந்து....ஒரு வாரமாகிவிட்டது, அத்தான்! அன்பே உன்னைப் பார்க்க வர வேண்டுமென்றிருந்தேன்..ஆனால்..." சந்திரா திணறினாள்.

"இப்போதாவது வந்தாயே, அதுவே போதும்! உன் கணவர் வரவில்லையா?"

"நான் மட்டும் தான் வந்தேன்."

பிறகு அவள் சுந்தரத்தின் உடல் நிலையைப் பற்றி விசாரித்தாள். ஆனால் அதில் ஆர்வமோ, அக்கரையோ இருந்ததாகக் காணப்படவில்லை. சம்பிரதாயத்திற்காகக் கேட்டது போல் இருந்தது. இது சுந்தரத்திற்குப் பெரும் குறையாகத் தோன்றியது. மேலும் சந்திரா அவனிடம் அதிகமாகப் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை.

சந்திராவைத் தேடிக்கொண்டு அவள் அப்பா திடீரென்று வந்தார். "சந்திரா, மதுரையிலிருந்து உனக்குக் கடிதம் வந்திருக்கிறது." என்று கூறி ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்தார். ஆவலுடன் அதை வாங்கிப் படித்தாள் சந்திரா. அவள் முகம் பரபரப்படைந்தது. "அப்பா, உடனே நான் மதுரை போயாக வேண்டும்" என்றாள்.

"என்னம்மா விஷயம்?" என்று கேட்டார் அவள் தந்தை.

"அவருக்குத் தலைவலியாம்! எழுதி இருக்கிறார்.

அவள் தகப்பனார் கடிதத்தை வாங்கிப் படித்தார். விஷயம் பிரமாதம் ஒன்றும் இல்லை. தலைவலி வந்து தற்பொழுது குணமாகி விட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. "சந்திரா தலைவலி தான் குணமாகி விட்டதாக எழுதி இருக்கிறாரே என்றார்.

"என்ன இருந்தாலும் அவரை நான் பார்த்தால் தான் என் மனம் சரிப்படும். நான் புறப்பட ஏற்பாடு செய்யுங்கள் அப்பா!"

அவள் தந்தையும் சுந்தரத்தின் தாயாரும் அவளை நிறுத்த எவ்வளவோ முயன்றனர். ஆனால் அவள் பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டாள்.

சந்திரா போய்விட்டாள். சுந்தரத்தின் உள்ளம் பொறாமையால் கொந்தளித்தது. சந்திரா தன்னை எவ்வளவு சீக்கிரமாக மறந்து விட்டாள். சின்னஞ்சிறு வயதிலேயே இணைந்து பழகிய தான் மரணப் படுக்கையிலிருந்தும் பார்க்க வேண்டும் என்ற அக்கறை அவளுக்கு ஏற்பட்டதில்லை. நேற்று வந்தவனுக்கு, லேசாகத் தலைவலி என்றதும் பதறியடித்துக் கொண்டு ஓடுகிறாள்! தன் மீது இல்லாத இத்தனை கரிசனம் அவளுக்கு அவன் மீது ஏன்?

சுந்தரத்தின் உடம்பு பூரண சுகம் அடைந்தது. மீண்டும் அவன் கல்யாணப் பிரச்னை தொடங்கி விட்டது. கல்யாணம் செய்து கொள்வதா, வேண்டாமா என்று குழம்பிக் கொண்டிருந்தான்.

சந்திரா வந்து ரொம்ப நாட்களாகி விட்டன. அவளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது சுந்தரத்திற்கு, அவளுக்கு கல்யாணமான பின் அவள் வீட்டுக்கு அவன் போகவே இல்லை. ஒரு முறை மதுரை போய் சந்திராவைப் பார்த்து வந்து விட்டாலென்ன என்றெண்ணியவன் மறு கணமே மதுரைக்கு வருவதாக சந்திராவுக்குக் கடிதம் எழுதி விட்டான். தன்னை வரவேற்ற சந்திராவும் அவள் கணவனும் ஸ்டேஷனுக்கு வருவார்கள் ராஜ உபசாரங்கள் செய்வார்கள் என்றெல்லாம் மனக் கோட்டை கட்டினான்.

ரயிலிலிருந்து இறங்கியதும் ஸ்டேஷன் முழுவதையும் நோட்டமிட்டான். யாரையும் காணவில்லை. அவர்கள் சந்தர்ப்பம் எப்படியோ என்றெண்ணிக் கொண்டான். சந்திராவின் வீட்டுக்குச் சென்றான்.

"வீட்டிலும் சந்திராவோ அவள் கணவனோ இல்லை. ஒரு கிழவி மட்டும் இருந்தாள். "நீங்கள் யார்? என்று கேட்டாள். அவனும் பதில் சொன்னான்.

'இன்னிக்கு ஏதோ புதுப் படம் வந்திருக்குதாம் அவங்க சினிமாவுக்குப் போயிருக்காங்க" என்றாள் அந்த வேலைக்காரக் கிழவி,

"நான் அனுப்பிய கடிதம் வந்ததா?"

'ஏதோ ஒரு கடுதாசி வந்தது. யாரோ வராங்கன்னு சொல்லிங்கிட்டாங்க. நீங்க பத்து மணிக்கு மேல் வாங்க"

முகத்தில் அடித்தது போலிருந்தது சுந்தரத்திற்கு. ஏமாற்றத்துடன் திரும்பி விட்டான். அப்படியே தன்

தன் நண்பன் பாஸ்கரனைப் பார்க்கச் சென்ருன்.

"ஏய் சுந்தரம்! எப்பொழுது வந்தாய்? ஒரு கடிதம் போடக்கூடாது? ஸ்டேஷனுக்கு வந்திருப்பேன்" என்று ஏக அமர்க்களத்துடன் வரவேற்ருன் பாஸ்கரன்.

"உனக்காவது கடிதம் எழுதினேனில்லை. சந்திராவுக்கு எழுதித் தொலைத்தேன்" என்று வெறுப்புடன் கூறினன் சுந்தரம்.

"சந்திரா ஸ்டேஷனுக்கு வந்தாளா?"

"வீட்டில் கூட ஒரு நாதியும் காணேம்" எல்லாரும் சினிமா பாக்கப் போய் விட்டார்களாம்"

"வரவேற்பு அவ்வளவு பலமாக இருந்ததா? சுந்தரம் நான் சொல்லுகிறேனே என்று வருத்தப்படாதே! நீ தூரத்தில் ஏற்றிய இந்த ஜோதியை அனுபவிக்க கொடுத்து வைத்தவன் நீயல்ல. அவள் அருகிலிருக்கிற சேகரன் தான்! சந்திரா இப்படி மறந்து விட்டாளே என்று நீ வருந்தினுல் அது பைத்தியக்காரத் தனம் தான்! என்று

அவள் இன்னொருவனைக் கைப்பிடித்து விட்டாளோ, அவன் தான் அவளுக்குச் சகலமும். தவிர, சேகரன் அவள் அருகிலேயே இருக்கிருன். அளவற்ற அன்பு செலுத்துகிருன். அவ்வளவு அன்பு செலுத்தும் கணவனிடம் தான் அவள் அன்பு செல்லுமே தவிர, தூரத்திலிருக்கும் உன்னிடம் துளிகூடச் செல்லாது. அது முறையுமல்ல. பேசாமல் நீ ஒரு கல்யாணம் செய்து கொள். அப்போது தான் இந்த நிலை உனக்குப் புரியும்,''

"ஆமாம், பாஸ்கரன்! கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறேன். இனியும் என்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருப்பதில்லை'' என்ருன் சுந்தரம்.

ஊர் திரும்பியதுமே சுந்தரம் கல்யாணத்திற்குச் சம்மதித்து விட்டான். முயற்சிகள் வெகு துரிதமாக நடந்தன. பெண் பார்த்து முகூர்த்தமும் வைக்கப் பட்டது.

கல்யாணத்தன்று சுந்தரம் வாசலில் நின்று எல்லாரையும் வரவேற்றுக் கொண்டிருந்தான். அவனுக்கு வேண்டியவர்கள் நண்பர்கள் வந்ததும் கூட அவன் மனம் நிறையவில்லை. இன்னும் யாரோ வராத குறை அவன் இதயத்தை உறுத்திக் கொண்டிருந்தது. கடைசியில் பாஸ்கரன் வந்தான். ஆவலோடு அவனை வரவேற்று விட்டு'' மதுரையிலிருந்து வேறு யாரும் வரவில்லையா?,, என்று கேடடான்.

"மதுரையிலிருந்து யார் வர வேண்டும்.''

"சந்திரா என் கல்யாணத்துக்கு வராமல் இருக்க மாட்டாள்.''

"உன் கல்யாணச் சந்தர்ப்பத்தில் கூட சந்திரா நினைவு உன்னை விடவில்லையே! நீ தான் சந்திரா சந்திரா என்று நினைக்கிருய்! அவளுக்கு உன் நினைவே கிடையாது. நான் வரும் போது சந்திராவைக் கண்டு விட்டுத்தான் வருகிறேன்.' கல்யாணத்திற்கு வரவில்லையா என்று கேட்டேன். அவளும் அவள் கணவரும் கொடைக்கானல் போகிருர்களாம். கொடைக்கானலில் கிடைக்கும் இன்பத்தை 'இழந்து விட்டு, உன் கல்யாணத்திற்கு வர அவளால் முடியுமா? பைத்தியக்காரா! நீ யார்? அவள் யார்?''

சுந்தரத்தின் முகம் சாம்பி விட்டது. "முகூர்த்தத்துக்கு நேரமாகி விட்டது. போய் அலங்காரம் செய்து கொள்'' என்ருன் பாஸ்கரன்.

ஒரு வருடத்திற்குப் பின் பாஸ்கரன் திருநெல்வேலிக்கு வந்தான். சுந்தரம் அவனைக் கண்டு தன் வீட்டுக்கு அழைத்துச் சென்ருன். பாஸ்கரனை உட்காரச் சொல்லி விட்டு "சரோஜா!'' என்று அழைத்தான். மறுகணமே அப்சரஸ் போல் எதிரில் வந்து நின்ருள் அவன் மனைவி சரோஜா.

"என் நண்பன் வந்திருக்கிருன். அழகாகச் சமையல் செய்'' என்று உத்தரவிட்டான்.

'சரி' என்று தலையசைத்து விட்டு வீட்டுக்குள் ஓடிப்போய் விட்டாள் சரோஜா.

"சுந்திரம் உன் வாழ்க்கை எப்படி?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

"ஆனந்தமான வாழ்க்கைதான் சுந்தரம்! சரோஜா ரொம்ப நல்ல பெண்! எனக்கேற்ற மனைவி! சரோஜாவைப் போல நல்ல மனைவியைப் பெறும் அதிர்ஷ்டம் யாருக்குமே இருக்க முடியாது', என்று தன் மனைவியைப் பற்றிப் புகழ்ந்த சுந்தரம் தன் வாழ்க்கையில் நிகழ்ந்த ரசமான சம்பவங்களைப் பேச ஆரம்பித்து விட்டான்.

"சந்திராவின் சமாச்சாரம் தெரியுமா?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

"இப்பொழுது அவளைப் பற்றி பேச்சு ஏன்? முதலில் என் வாழ்க்கையைக் கேள்''

"என்ன இருந்தாலும் அவள் உன் பழைய சிநேகிதி அல்லவா?''

"என் சிநேகிதி, காதலி, மனைவி எல்லாம் என் சரோஜாவே தான்!''

இந்தச் சமயம் சமையலறையில் 'ணங்' என்ற சப்தம் கேட்டது. பதறியடித்துக் கொண்டு சமையலறையை நோக்கி ஓடினுன் சுந்தரம்,

"வேறு ஒன்றுமில்லை. செட்டி கை தவறி விழுந்து விட்டது'' என்ருள் சரோஜா.

"நல்ல வேளை! நீ விழுந்து விட்டாயோ என்று பயந்து போய் விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் சுந்தரம்.

பாஸ்கரன் ஆச்சரியத்தில் பிரமித்துப்போய் விட்டான்.



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை. சங்கர்நகர். திருநெல்வேலி ஜில்லா

பருகுங்கள் பல்சுவை:

இங்கிலாந்தில் பிரதம மந்திரியாக இருந்த சர். வின்ஸடன் சர்ச்சில் ஒரு சமயம் தன் கட்சிக்காரரைத் தாக்கிப் பேசினார். எதிர் கட்சிக்காரரையும் தாக்கிப் பேசினார்.

அந்தச் சமயத்தில் சர்ச்சிலுக்கு மேதை பெர்னாட்ஷா, "என்னுடைய புதிய நாடகம் ஒன்றின் முதல் நாள் ஆட்டம் நடக்கிறது. அதற்கு இரண்டு டிக்கட்டுகள் அனுப்பியிருக்கிறேன். ஒன்று உங்களுக்கு இன்னொன்று உங்கள் நண்பருக்கு; அப்படி ஒருவர் இருந்தால்!" என்று கடிதம் எழுதியனுப்பினார்.

இந்தக் கடிதத்திற்கு சர்ச்சில் உடனே சுடச்சுட ஒரு பதில் எழுதினார். "உங்கள் புதிய நாடகத்தின் முதல் நாள் ஆட்டத்திற்கு என்னால் வர இயலாததிற்கு மிகவும் வருந்துகிறேன். தயவு செய்து இரண்டாவது நாள் ஆட்டத்துக்கு எனக்கு டிக்கட்டுகளை அனுப்புங்கள்... அப்படி ஒன்று நடக்குமானால்!"

* * *

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்பவர் பிரபல ரசாயன சாஸ்திரி. சிறந்த நீக்ரோ கமான் நிலக்கடலை சம்பந்தமாக அவர் செய்த ஆராய்ச்சி பற்றிச் செனேட் கமிட்டி முன்பாக அவர் பதில் கூற வேண்டி வந்தது.

"இந்த நிலக் கடலையின் ரகசியங்களை நீர் எங்கே கற்றீர்?" என்று கமிட்டியினர் கேட்டனர்.

"ஒரு பழைய புத்தகத்திலிருந்து."

"அது என்ன புத்தகம்?

"பைபிள்!"

"நிலக் கடலையைப்பற்றிப் பைபிள் என்ன சொல்லுகிறது?"

"அது ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நிலக் கடலையைப் படைத்த கடவுளைப்பற்றி அது சொல்லுகிறது. அதை என்ன செய்வது என்பதை எனக்குக் காட்டிக் கொடுக்கும்படி நான் கடவுளை வேண்டிக் கொண்டேன். அவரும் அப்படியே காட்டிக் கொடுத்தார்" என்றார் ரசாயன நிபுணர் சுடச்சுட!

* * *

ஒரு சமயம் காந்தி ஜயந்தியன்று காந்திஜீக்குப் பண முடிப்பு அளிப்பதற்காக பதின் மூவாயிரம் (13,000) ரூபாய் வசூலாகியிருந்தது. அந்தப் பண முடிப்பைச் சுட்டிக் காட்டி திருமதி சரோஜினி நாயுடு, "இதைத் தங்களிடம் கொடுக்காமல் நான் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்று காந்திஜியைக் கேட்டார்.

அதற்கு மகாத்மா காந்தி, "இந்த மாதிரி வேலைக்குத் தாங்கள் மிகவும் லாயக்கானவர்தான் என்று தெரிந்து கொள்வேன்!" என்று சுடச்சுடச் சொல்லிச் சிரித்தார். கூட இருந்தவர்களும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

* * *

பிரபல நாவலாசிரியை மேரி கொரெல்லி என்பவள் திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே காலம் கழித்தாள்.

ஒரு சமயம் அவளை 'கோனஸ்' என்ற பத்திரிகாசிரியை, "நீ ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?" என்று கேட்டாள்.

"கல்யாணமா! எதற்காகக் கல்யாணம்? நான் செல்லமாக ஒரு நாயையும், ஒரு கிளியையும், ஒரு பூனையையும் வளர்க்கிறேன். ஒரு கணவன் செய்கிற காரியங்களை அவை மூன்றும் செய்து விடுகின்றன. காலை முழுவதும் நாய் குரைக்கிறது. பகல் முழுவதும் கிளி திட்டுகிறது. இரவு முழுவதும் பூனை வெளியேபோய்விடுகிறது" என்று

மேரி கோரெல்லி சுடச்சுட பதிலளித்தாள்; கோனஸ் கொல்லென்று சிரித்து விட்டாள்!

* * *

'பேனைச் சக்கரவர்த்தி' 'கல்கி' அவர்கள் சிலோனுக்கு விசேட அழைப்பின் பேரில் புறப்பட்டார். சிலோனுக்குப் போவதென்ருல், 'பாஸ் போர்ட் விசா வாங்க வேண்டும்,பாஸ்போர்ட்டுக்கும், விசாவிற்கு முள்ள வித்தியாசம் என்ன என்பதைப் பற்றி ஆராய்ந்து, தலை வலியை உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் இலங்கையை வெற்றி கொள்ளச் சென்ற வீரத் தமிழர்களைப் போலவே உடம்பில் குத்துக் காயங்களுடன் புறப்பட வேண்டும். அம்மை, ஊசி காலரா ஊசி குத்திக் கொள்ளவேண்டும். இத்தகைய வைபவங்களுடன் புறப்பட்டார் ஆசிரியப் பெருந்தகை கல்கி!

நீங்கள் தான் 'கல்கி' யா என்று வரவேற்று, அவரிடம் சுகாதார அதிகாரி சில கேள்விகளைக் கேட்டார். 'கல்கி' அவர்களும் வழக்கம்போல ஹாஸ்யமாகவே சுடச்சுட பதிலளித்தார்.

"உங்களுக்கு வைசூரி உண்டா ?"

"இல்லை !"

"பிளேக் ?"

"இல்லை!"

"காலரா !"

"அதுவும் இல்லை சார் !"

"டைபாயிடு, நிமோனியா, வாதம், காக்கை வலிப்பு..."

"இல்லை சார் ! இல்லை !"

சுகாதார அதிகாரி சோர்ந்து போய் 'கல்கி' யின் கையைப் பிடித்து நாடியைப் பார்த்துக் கொண்டே, "சுரம் கிரம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார்.

"சுரம் ஒன்றுமில்லை சார் ! கிரம் ஏதாவது இருக்கிறதா என்று கையைப் பிடித்துப் பார்த்த நீங்கள் தான் சொல்ல வேண்டும்" என்ருர் கல்கி சுடச்சுட! அங்கிருந்த எல்லாரும் குலுங்கச் சிரித்தார்கள்!

* * *

போலீஸ் கமிஷ்னர் கல்கியாரிடம் சில கேள்விகள் கேட்டார். கல்கி அவர்களும் மிகவும் நகைச்சுவை ததும்பப் பதிலளித்தார்.

"எங்கே போகிறீர்?"

"இலங்கைக்கு."

"எதற்காக?

"சிலோனை வாரிச்சுருட்டி எடுத்துக் கொண்டு வருவதற்காக."

"அடாடா! வந்து என்ன செய்யப் போகிறீர்கள்?

"விரித்துக் கொண்டு படுக்கப் போகிறேன்."

"சரி! நீர் எந்த வருஷம் பிறந்தீர்?"

"1935...ல்"

"எங்கே பிறந்தீர்?"

"ஒரு இருட்டறையில்."

"சாட்சி உண்டா?"

"கிடையாது."

"வருந்துகிறேன்."

"நீர் எப்போதாவது விபத்தில்!"

"1950—ல்"

"எங்கே?"

"காஷ்மீரில் நடந்த விமான விபத்தில் இறந்து விட்டதாக!"

"பிறகு இங்கே எப்படி வந்தீர்?"

"இந்திய சர்க்கார் விமான விபத்தைப் பற்றி விசாரிக்க கமிஷன் ஒன்று நியமித்தார்கள். கமிஷன் விசாரித்து, விபத்து என்றுமே நேரிடவில்லை. என்று முடிவு செய்தது, நானும் அந்த முடிவை ஏற்றுக் கொண்டு உயிருடன் இங்கே வந்தேன் என்ருர்" ஆசிரியர் கல்கி. போலீஸ் கமிஷனர் உள்பட அங்கிருந்த எல்லாரும் வயிறு வலிக்கும்படி சிரித்து விட்டார்கள்.

* * *

ஜனதிபதி ஐசன்ஹோவர் ஒரு விசேஷ கூட்டத்திலே கலந்து கொண்டார். நீண்ட நேரமாக கூட்டம் நடந்து கொண் டிருந்தது. ஒன்பது பேர்கள் பேசியாயிற்று. அப்போதான் கூட்டத் தலைவர் மக்களுக்கு ஐசன்ஹோவரை அறிமுகப் படுத்தினர்.

ஐஸன் ஹோவர் எழுந்தார் "தோழர்களே! ஆங்கிலத்திலேஎதைச் சொன்னலும் முற்றுப் புள்ளிகள் (புல்ஸ்டாப்) உண்டு. இந்தச் சந்தர்ப்பத்திலேநானே அந்த முற்றுப் புள்ளி!" என்று சுடச்சுடக் கூறிவிட்டு உட்கார்ந்துவிட்டார். அன்றைய தினம் அவர் கையைக் குலுக்கிப் பாராட்டாத வரே கிடையாது!



"சுந்தரி! இதோ, பார்: மூன்று வகன்கள் வந்திருக்கின்றன மூன்று ஜாதகங்களும் உன் ஜாதகத்தோடு நன்றாகப் பொருந்தியிருப்பதாகத் தெரிகிறது. மூன்றுக்கும் போட்டோவும் வைத்திருக்கிறேன். என்ன, நான் சொல்வது புரிகிறதா?"

"உம்!"

"இதோ, இந்த போட்டோவில் இருப்பவன் பெயர் கருணாகரன்; சுமாரான வேலையிலிருக்கிறான்; ரொம்ப இளகின மனசாம்: ஏழை, எளியவர்கள் சமூக சேவை என்று கிளம்பி விடுவானாம். அப்புறம். அந்தப் படம் ஜகந்நாதன் என்பவனுடையது; நல்ல உத்தியோகம்; கைநிறையச் சம்பளம்; நெருங்கின உறவுக்காரர் என்று யாரும் கிடையாது. மூன்றாவது, நரசிம்மன்; பையன் பார்க்க லட்சணமாக, ஏதோ வேலையிலிருக்கிறான்; ஆனால், மகா முன்கோபியாம். யோசித்துப் பார்த்து உன் முடிவைச் சொல், அம்மா! இன்றைக்கு நல்ல நாள்; ஏதாவது ஒன்றைத் தீர்மானம் செய்து விடுவது நல்லது."

பாண்டுரங்கம் பேசியபடியே, துண்டைப் பிரித்துத் தோள்மீது போர்த்துக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார்.

சுந்தரி என்ற திரிபுரசுந்தராம்பாள் கையில் மூன்று புகைப் படங்களுடன் நடுக்கூடத்தில் சிந்தனை செய்த வண்ணம் நின்றிருந்தாள்.

போனமாதமே வரன் நிச்சயமாகும் போலிருந்தது; ஆகியிருக்கும்—சுந்தரி மறுத்திராவிட்டால். காரணம், அப்பாவும் அம்மாவும் மற்றவர்களுமாகச் சேர்ந்து செய்த கோட்டாதான். அந்தப் பையன்—இல்லை; அவர்—பெயர் என்ன? திரிமூர்த்தியா?

"நல்ல பெயர்ப் பொருத்தம்! சௌபாக்கியவதி திரிபுர சுந்தராம்பாளை, சிரஞ்சீவி திரிமூர்த்திக்கு என்று கல்யாண; பத்திரிகையில் போட்டாலே நன்றாக இருக்கும்." என்று அம்மா சொல்லவில்லையோ? இவர்கள் கேலிக்குப் பயந்துதானே சுந்தரி பிடிவாதமாக, 'முடியாது' என்று தலையசைத்து விட்டாள்.

ஆனால், இன்று மாலைக்குள் அப்பாவுக்கு முடிவு சொல்லியாக வேண்டுமே!

சுந்தரி. புகைப் படங்களுடன் தன் அறைக்கு வந்து சேர்ந்தாள்.

கருணாகரனுக்கும் சுந்தரிக்கும் திருமணமாகி மூன்று மாதங்களாகி விட்டன. சென்னையில் இருவரும் குடித்தனம் நடத்தத் தொடங்கி விட்டனர்.

ஒரு பெண்ணுக்கு மூன்று கணவன்மார் தேவை:
அன்பு பொழிய ஒருவன்; ஆதரவு நல்க ஒருவன்:
அடித்து நொருக்க ஒருவன்! —அமெரிக்கப் பொன்மொழிகள்.

கருணைகரன் சுந்தரியின் மேல் அன்பைப் பொழிந்தான். ஆனாலும், அவளுக்கு ஒரே ஒரு குறை. சமூக சேவை, சமூக சேவை என்று இரவு-பகல் பாராமல் கணவன் எந்நேரமும் அலைந்து திரிந்தால், எந்தப் பெண்தான் பொறுத்திருப்பாள்?

கணவன் அன்புக்கு மட்டுமே தான் உரிமை யுடைவள்; அவன் ஆதரவு முற்றும் தனக்கே கிட்டவில்லை என்பதை உணர்ந்து கொண்டாள் சுந்தரி.

அன்று நடு ராத்திரி இருக்கும். யாரோ படபட வென்று கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தவள் சுந்தரி தான். அவசரமாகக் கருணைகரனை அழைத்துப் போனார்கள். பிறகு அவன் மறுநாள் மாலைதான் வந்து சேர்ந்தான்.

ஆழ்வார்ப் பேட்டைக்கு அருகில் உள்ள சேரியில் எதிர்பாராத விதமாகத் தீப்பற்றிக் கொண்டதாம். அதிகாரிகளை யெல்லாம் சந்தித்து, நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டு வந்தானும், சுந்தரியின் அன்புக் கணவன்.

“நான்தான் உனக்கு முன்பே சொல்லியிருக்கிறேனே, சுந்தரி: என் அன்பு முழுவதும் உனக்குத்தான். ஆனால், எல்லோரைப்போல, சினிமா நாடகம் என்று வெட்டிப் பொழுது போக்க எனக்கு நேரமுமில்லை; யோக்கியதையுமில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்: என்னளவு எந்தக் கணவனும் மனைவி மீது அன்பு கொண்டிருக்கமாட்டான் சரி, நான் வரட்டுமா? சில சினிமா தோழர்களைப் போய் அவசரமாகச் சந்திக்க வேண்டும்: ஒருவர் குடிசை இழந்தவர்களுக்குப் புதுக் குடிசைகள் போட்டுத் தருவதாகச் சொல்லி யிருக்கிறார்; இன்னொருவர் புதிய துணிமணிகள் வாங்கித் தருகிறார்; மூன்றாமவர், தலைக்கு நூறு ரூபாய் பணமாகவே தருகிறார். நான் போய்த்தான் ஏற்பாட்டைக் கவனிக்க வேண்டும்.” கதவைத் தாள் போட்டுக்கொள். சொல்லியபடியே, உடை மாற்றிக்கொண்டு, வெளியே புறப்பட்டு விட்டான் கருணைகரன்.

தனக்கு வந்த ஆத்திரத்தில் ‘படார்’ என்று கதவை ஓங்கி அறைந்தாள் அவள்.

‘சட்’டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள் சுந்தரி. சே! இவ்வளவும் கற்பனைதானா? நல்ல காலம்! கருணைகரனாவது, கர்ணகரேமாவது!

ஜகந்நாதனோடு வாழ்க்கையைத் துவங்கிய சுந்தரிக்கு, வெகு சீக்கிரத்திலேயே அலுப்புத் தட்டிவிட்டது. சை! என்ன மனிதர் இவர்? பணத்தால் என்னென்ன செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்யத் தவறவில்லை அவள் கணவன். ஆனால், அந்தப் பெண், அவனுடைய அன்புச் சொல் ஒன்றுக்கு ஏங்கி நின்றாள்; அதுகூட வேண்டாம், உரிமையோடு கோபித்துக் கொண்டு இரண்டு திட்டுத் திட்டினாலும், அடிச்சாலும் ஏற்றுக்கொள்ள ஆவலோடு காத்திருந்தாள்.

பக்கத்து வீட்டிலே குடியிருந்த அந்தப் பெண் பங்கஜம்— என்ன சொல்வாள் பெருமை யடித்துக் கொள்கிறாள்! குழம்பிலே ஒருநாள் கூடக் கொஞ்சம் உப்புப் போட்டு விட்டாளாம். அவள் கணவன் ‘பளா’ரென்று அரைந்து விட்டாரும்! “அப்புறம், அவள் கண் கலங்க நின்றதைப் பார்த்தபோது, இனிமேல் தினமும் உப்பு அதிகப்படியாகப் போட்டால் என்ன என்று தோன்றிற்று! என்றல்லவா அவள் சொன்னாள்.?

சுந்தரியும் தான் உப்புப் போடாமலே சமைத்து வைத்தாள்; படி உப்பைக் கொட்டிப் பார்த்தாள். ஊஹூம்; னும்’ அவள் கணவன் ஜகந்நாதன் கவலையே படவில்லை. மறுநாளே சமையற்காரி ஒருத்தியை ஏற்பாடு செய்து விட்டான்!

புதிய தீர்மானம் ஒன்றைச் சுந்தரி செய்து கொண்டாள். அன்று எப்படியாவது கணவனேடு சண்டை போட்டு விடுவது. ஆமாம்; வருவது வரட்டும்!

ஜகந்நாதன் வீட்டுக்கு வந்ததுமே, சுந்தரி தன் நாடகத்தை ஆரம்பித்தாள். கண்ணீரை வருவித்துக்கொண்டே கழுத்துச் சங்கிலி காணுமற்போன கதையைச் சொன்னுள். 'போனல் போகிறது, அழுதே! இதற்காகவா இப்படி அழுகிருய்? புதிதாக ஒன்று, நல்ல மோஸ்தரில் பண்ணிக் கொண்டால் போயிற்று! இல்லே, கடைக்குப் போய் வாங்கி வந்து விடலாம்; கிளம்பு!'' என்றுனே அவன்.

'எனக்குச் சங்கிலியும் வேண்டாம்; சங்கடமும் வேண்டாம். நான் இப்போதே என் பிறந்த வீட்டுக்குப் போகிறேன்,'' என்று சுந்தரி கண்ணீருக்கிடையே விம்மினுள்.

''என்னது; பிறந்த வீட்டுக்குப் போகிருயா? ஏன், இங்கு இருக்க ராணியம்மாளுக்குப் பிடிக்க வில்லேயோ? போவதாயிருந்தால், ஒரேயடியாகப் போய் விடு; இங்கே திரும்பி வரும் எண்ணம் வேண்டாம்!'' என்றெல்லாம் ஜகந்நாதன் கர்ஜிக்கவில்லே. மாருக, ''உன் இஷ்டம் போல் செய், சுந்தரி. இரண்டாம் வகுப்புக்கு டிக்கெட் வாங்கினல் போதுமா? இல்லே, முதல் வகுப்புக்கே வாங்கலாமா? நானே உன்னேக் கொண்டு விட்டுத் திரும்பி விடுகிறேன்,'' என்றுதான் சொன்னுன்.

'தடால்' என்று அவள் மயங்கி விழுந்தாள்.

நாற்காலியோடு சுந்தரி பின்னல் சாய்ந்து விட்டாள்; வேறென்றுமில்லே. ஜகந்நாதனுமில்லே; ஜகத்ரட்சனுமில்லே. எல்லாம் மனக் கரங்கள் போடும் இழைக் கோலம். காற்றடித்ததும் கலேந்து விடும்.

மறுபடியும் சிந்தனே செய்யச் சுந்தரிக்கு விருப்பம் இல்லே; ஏன் பயமும் கூட.

நரசிம்மன் பெயருக்கு ஏற்றபடி நரசிம்மாவதாரமாகவே இருப்பானே என்னமோ? சுந்தரி செய்த சின்னஞ் சிறு தவறை எல்லாம் பூதக் கண்ணுடி வைத்துப் பார்த்து, சீறி விழுந்தா னென்ருல்!

ஒரே கணத்தில் முடிவுக்கு வந்தாள் அவள்.

''அம்மா, அம்மா!''

''என்னடி! அப்பா சொன்னது ஞாபகம் இருக்கிறதா? இல்லே, இதற்கும் ஏதாவது நொண்டு நொசுக்குச் சொல்லப் போகிருயா!''

''இல்லே, அம்மா; போன மாதம் ஒரு—ஒரு—ஜாதகம் வரவில்லேயா?''

''யாரு, திரிமூர்த்தியா? நீதான் வேண்டா...''

''அப்போ சொன்னேன்; இப்போ இல்லே.''

சுந்தரியின் தாயார் லட்சுமிக்கு ஒரே ஆச்சரியம், தன் காதுகளேயே அவளால் நம்ப முடியவில்லே.

''இதென்னடி இது! திடீரென்று நினேத்துக்கொண்டு குதித்தால் நடக்கிற காரியமா? அந்தப் பிள்ளேயாண்டானுக்கு, அப்பா அப்பவே சௌகரியப்படவில்லே என்று எழுதி விட்டாரே!''

''யார் சொன்னது?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் பாண்டுரங்கம்.

தாயார், மகள் இருவரும் திடுக்கிட்டார்கள்.

''திரிமூர்த்திக்கு நான் 'வசதிப்படாது' என்று எழுதவில்லேயே! 'ஒரு மாதம் போகட்டும்' என்று சொல்லியிருந்தேன். எனக்குத் தெரியுமே, நம்ம சுந்தரி கெட்டிக்காரி என்று,''

லட்சுமியம்மாள் தொடர்ந்தாள்: ''ஏன்! அந்தப் பிள்ளேயாண்டானுக்குத்தான் என்ன குறைவு! கண்ணுக்கும் நன்ருக இருக்கிருன்; கை நிறையச் சம்பாத்தியம். பெரிய குடும்பம். போய் அடிபட்டால், நம் குழந்தைக்குத் தான் நல்லது...''

சௌபாக்கியவதி திரிபுரசுந்தராம்பாளின் மழை. இதிலெல்லாம் ஈடுபடவேயில்லே; சிரஞ்சீவி திரிமூர்த்தி மற்ற மூவரின் குணங்களேயும் கொண்டுள்ள பெரு மூர்த்தியாக இருப்பான். இருக்க வேண்டும்—என்று வேண்டிக் கொண்டிருந்தது.



சினிமா விமர்சனம்

பக்ஷிராஜாவின்

மரகதம்

"சிவாஜி கணேசனும் பத்மினியும் ஒரு படத்தில் சேர்ந்து நடிக்கிறார்கள் என்றால் படத்தின் நடிப்பு அம்சம் முக்கால் பாகம் பூர்த்தியான மாதிரி." இந்த எண்ணம் "மரகதம்" தமிழ்ப் படத்தைப் பார்ப்பவர்களுக்கு நிச்சயமாக ஏற்படும்.

கருங்குயில் குன்றம் ஜமீன்தாரை யாரோ கொலை செய்து விடுகின்றனர். அப்பழி அவரது தம்பி மீது சுமத்தப் படுகிறது. தம்பி மார்த்தாண்டன் தப்பியோடி, தன் மகன் அலமுவுடன் தலைமறைவாய் வாழ்கிறான். மார்த்தாண்டனின் மைத்துனன் உண்மைக் கொலையாளிகளை கண்டுபிடிக்கிறான். அதற்குப் பரிசாக அவன் அலமுவைப் பெறுகிறான்.

மூலக்கதை. **டி. எஸ். டி. சாமியால் எழுதப்பட்டது.**

முன்னாளில் புகழ் பெற்றிருந்த நவீனக்கதை இப்பொழுது புகழ்பெறப் போகும் படமாய் வெளியிட்டிருக்கிறார் டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு. மூலக் கதை சிற்சில மாறுதல்களுடன் திரைக் கதையாக்கப்பட்டுள்ளது. கதைப் போக்கு தெளிவாய் இருக்கும்படி டைரெக்ஷன் நன்கு அமைந்திருக்கிறது. பிற்பகுதியை விட முற்பகுதி தெளிவாய் உள்ளது.

காதல் ஜோடிகளாகத் தோன்றும் சிவாஜி கணேசனும் பத்மினியும் நடிப்பின் மூலம் நம் உள்ளம் கவருகின்றனர். காதல் காட்சிகள் அழகாகத் தயாரிக்கப்பட்டுள்ளன, சிவாஜி சமையற்காரனாகவும் தோன்றி ஹாஸ்யமாக நடித்திருக்கிறார். தான் யாரென்றும், தன்னைச் சந்தித்தவர் தந்தைதான் என்பதையும் தன் தாயிடமும், காதலனிடமும் சொல்ல முடியாத—தர்மசங்கடமான கட்டங்களில் பத்மினி தம் முழுத்திறமையையும் காட்டி நடித்திருக்கிறார்.

வேஷம் பொருந்தப்பட்ட பாலசந்தர் தம் பாகத்தை ஒரு குணசித்திரமாய் நடிப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார். கற்பக வல்லியாக நடிக்கும் சந்தியாவின் நடிப்பும் நன்றாயிருக்கிறது. துரைராஜ், பாலய்யா, சந்திரபாபு, ஞானம், முத்துலட்சுமி, கன்னையா, நாராயணபிள்ளை முதலியோர் படத்தில் ஹாஸ்யச் சுவையை வழங்குகின்றனர்.

படத்தில் இனிய சங்கீதத்திற்கும் நடனத்திற்கும் குறைவேயில்லை. பத்மினியின் நடனம் பலே ஜோர். லக்ஷ்மீ ராஜம், பேபி சரஸ்வதி ஆடியுள்ள நடனம் விறு விறுப்பாய் உள்ளது. "கண்ணுக்குள்ளே உன்னைப் பாரு" என்ற பாட்டு இனி ரஸிகர்களின் வாய்க்குள்ளே புகுந்து கொள்ளும். பாட்டுகள் இனிய மெட்டுகளில் அமைந்துள்ளன. டி. எம். சௌந்தரராஜன், ஜெயலக்ஷ்மி இவர்களின் பின்னணிப் பாடல் குறிப்பிடத்தக்கவை. திடுக்கிடச் செய்வதாக காட்டுமிருகங்களின் சண்டைக் காட்சி யொன்றும் படத்தில் உள்ளது. இது போல் படத்தில் பொழுது போக்கு அம்சங்கள் நிறைய உள்ளன.

வசனங்களை முரசொலி மாறன் பொருத்தமாய் எழுதியிருக்கிறார். காட்சி சோடனைகள் நன்றாயுள்ளன. ஒளி, ஒலி போன்ற ஸ்டுடியோ வேலைகளும் திறம்படச் செய்யப்பட்டுள்ளன.

மொத்தத்தில், "மரகதம்" அனைவரும் விரும்பக்கூடிய ஒரு நல்ல பொழுது போக்குப் படம்.

"நிழல்"

"நாலு வேலி நிலம்" —ஒரு கிராம சித்திரம்.

"கிராமத்திற்குப் போ!" என்று முன்பு காந்திஜி சொல்லிவந்தார்; இப்பொழுது தலைவர்களும் சொல்லி வருகிறார்கள். ஆனால், நகரத்திலுள்ள சுகங்களை விட்டுப் போக யாருக்கு மனம் வருகிறது? எனவே, அவர்கள் "நாலுவேலி நிலம்" தமிழ்ப் படத்திற்கு போனால் போதும்; ஒரு கிராமத்திற்குப் போன உணர்ச்சியைப் பெறுவர். இப்படத்தில் ஒரு கிராமம் தத்ரூபமாய் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தப் படுகிறது.

பரம்பரை மிராசுதாரான வீரசாமி வாள்சுத்தியாருக்கு புதுப் பணக்காரரானபஞ்சாயத்து போர்டுத் தலைவர் கண்ணுசாமி மீது அசூயை ஏற்படுகிறது. அதன் விளைவாக, அவர் அக்கப்போர் அய்யா பிள்ளை மூலம் சூழ்ச்சி செய்து, கண்ணுசாமி தம் நிலங்கள் பூராவையும் இழந்து ஒட்டாண்டியாகும்படிச் செய்கிறார். கடைசியில் தம் தவறுக்காக வருந்தி, கண்ணுசாமியின் மகளுக்கும், வீராசாமியின் மகனுக்கும் திருமணம் நடைபெறுகிறது.

தி. ஜானகிராமனால் எழுதப்பட்ட இது ஒரு சுவரஸ்யமான கதைதான். ஆனால் சில நம்பமுடியாத சம்பவங்களும் சேர்ந்திருக்கின்றன. படத்தின் கதை துரித நடையில் முன்னேறுகிறது. டைரெக்ஷன் பொதுவாக நன்றாயிருக்கிறது; ஆனால், காதல் காட்சி மட்டும் கொஞ்சம் சப்பென்றிருக்கிறது.

வசனங்கள் இயற்கை மெருகுடன் விளங்குகின்றன. பாட்டுகள் குறிப்பிடவேண்டிய ஒரு சிறந்த அம்சமாக விளங்குகிறது. சங்கீத டைரக்ஷனை கே. வி. மஹாதேவன் திறம்படச் செய்துள்ளார்- பாட்டுகள் ஒவ்வொன்றும் மணியாய் அமைந்துள்ளன. கலியாணத்தின் போது ஆடப்படும் நடனம் நூதனமாய் அமைந்துள்ளது.



சகஸ்ரநாமம் வீராசாமியின் பாத்திரத்தைப் பிரமாதமாய் நடித்திருக்கிறார். அவருக்குத் துளியும் சோடையில்லை என்று சொல்லும்படி எஸ். வி. சுப்பையாவும் அபாரமாய் நடித்துள்ளார் பண்டரீபாய்க்கு அதிக வேலையில்லை; உள்ளவரையில் நன்கு நடித்திருக்கிறார்.

எஸ். என். லட்சுமி வீராசாமியின் மனைவியாய் தோன்றி சவுக்கடி அடிக்கிறார். வி. ஆர். ராஜகோபால், மைனு வதி தோன்றும் காதல் கட்டம் சுமார் என்றாலும், மற்றபடி நன்கு நடித்திருக்கின்றனர். ஆர். முத்துராமன், தேவிகா இவர்களது பாகம் கதையில் நன்கு பொருந்த வில்லை. அவர்களது நடிப்பும் சுமாராகவே இருக்கிறது. மற்றவர்கள் நடிப்பு சாதாரணம்.

படத்தின் ஆர்ட் டைரக்ஷனைக் கலா சாகரம் ராஜகோபாலும், ஒளிப்பதிவை நிமாய்கோஷும், ஒலிப்பதிவை பி. வி. கோடீஸ்வரராவ் ஜி. மோகன் ஆகியோரும் திறம்படச் செய்துள்ளனர்.

இனிய சங்கீதம், நல்ல நடிப்பு, விறுவிறுப்பான கதைப் போக்கு ஆகிய அம்சங்கள் பொருந்திய "நாலு வேலி நிலம்" படாடோபமற்ற ஒரு நல்ல தயாரிப்பு; ரஸிகர்களின் நல்லாதரவைப் பெறக்கூடிய படம்,

—"நிழல்."

'ராஜசேவை'யில் என். டி. ராமாராவ், சௌகார் ஜானகி.

சினிமாச் செய்திகள்

மும்மொழிக்குப் 'பரிசு'

தமிழ் நாட்டில் சென்ற சில மாதங்களில் வெளிவந்த படங்களில் பண வசூலிலும் ஓட்டத்தில் முதன்மையாக நிற்கிறது 'கல்யாணப் பரிசு'. ரஸிகர்களின் ஏகோபித்த ஆதரவு இதற்கு 150 நாட்களுக்கு மேலும் நீடிக்கும் என்பது உறுதி. மனித இதயத்தைத் தொட்டு உலுப்பும் சம்பவங்கள் பல கதையில் அமைந்துள்ளதே காரணம். மேலும் நடிப்பு, டைரக்ஷன், ஜோடனை எல்லாமே முதல்தரம். இதையே ஹிந்தியிலும் எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அத்துடன் நாகேஸ்வர ராவைக் கதாநாயகனாகக் கொண்டு தெலுங்குப் படம் தயாராகி வருகிறது. ஹிந்தியில் ராஜ்கபூரும், சுசித்ராவும் பிரதம பாகத்தில் நடிப்பார்கள்.

* * *

காவேரியின் கணவன்

பெயர் வைக்காமல் படம் பிடித்து கடைசியில் நாமகரணமிடுவதும், மாற்றுவதும் படவுலகில் சர்வ சகஜம். அருணசலட் ஸ்டுடியோவில் தயாராகி வந்த 'டாக்டரை'க் காவேரியின் கணவனாக மாற்றியிருக்கிறார்கள். சூர்ய கலா, வளையாபதி முத்துக் கிருஷ்ணன் சௌகார் ஜானகி, ஆகிய நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன.

ஸ்ரீ ஏ. கே. வேலன் டைரக்ஷன் செய்கிறார்.

* * *

போலியா, அசலா ?

யார் பெற்ற பிள்ளை எப்படி யிருப்பானோ வென்று, 'உத்தமி பெற்ற ரத்தினத்'தை நல்லவனாகவே அமரா புரொடக்ஷன்ஸார் தயாரித்து வருகின்றனர். இந்தப்படம் இந்த மாதத்தில் வெளிவந்துவிடும். பாலாஜி, மாலினி; பண்டரிபாய், கண்ணம்பா, சகஸ்ர நாமம், ராஜம், குலதெய்வம் ராஜ கோபால் முதலியோர்கள் நடிக்கிறார்கள். ஸ்ரீ திருமுகம் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கிறார். 'உத்தமி பெற்ற ரத்தினம்' போலியா அசலா என்பதை விரைவில்தான் காணப் போகிறீர்களே !

* * *

நவரச 'ஜாம்'

நவரசங்கள் என்றால் என்னென்ன என்பதை 'ராஜ சேவை' என்ற படத்தைப் பார்த்தால் தெரிந்து கொள்ள லாமாம், வீரம், காதல், சோகம், அப்புறம்... படத்தைத்தான் பார்க்க வேண்டும். ஸ்டண்ட் சோமு இரண்டு வருடம் என். டி. ராமராவுக்கு வாள் பயிற்சி அளித்திருக்கிறார். வீரத்தைக் கரைத்துப் புகட்டி யிருக்கமாட்டாரா.

பி. எஸ். வீரப்பா, கண்ணம்பா, டி. ஆர். ராமசந்திரன், கிரிஜா இவர்களுடன் ராமராவின் ஜோடியாக சௌகார் ஜானகி நடிக்கிறாள். காதல் காட்சிக்கும் சிகரம்போல் குசலகுமாரி நடனம் 'கவர்ச்சிகர'மாக இருக்கும். ஸ்வஸ்தி ஸ்ரீ பிக்சர்ஸின் இந்த அற்புத படத்தை ஸ்ரீ காமேஸ்வரராவ் டைரக்ட் செய்கிறார். இன்னொன்றை விட்டு விட்டேனே, 'சீன் ஜோடனைகள்' மிக மிகப் புதுமாதிரியா இருக்கும்.

* * *

எல்லாம் 'புதிசு'

தமிழ்ப் பட உலகில் ஏதாவது புதுமையைப் புகுத்த முடியுமா வென்று எல்லோரும் மண்டையைப் போட்டுக் குடைந்து கொள்கின்றனர். பிரயோசனம்? 'யானைப் பாகன்' என்ற வனாந்திரக் காட்சிகளைப் பிரதானமாகக் கொண்ட படத்தை எம். எம். ஏ. ஸி. பிக்சர்ஸ் எடுக்கிறார்கள். புது முகங்களே இதில் தலைகாட்டுவர். தமிழ்,

தெலுங்கு, ஹிந்தி மும்மொழிகளிலும் தயாரிக்கப் போகிறார்கள். கதாநாயகன் யார் தெரியுமா? ஆசிய அழகுப் போட்டியில் வெற்றி பெற்றவரே கதாநாயகன், டைரக்ஷன் சின்னப்ப தேவர்.

* *

பாப்பா அரிச்சந்திரன்

மனிதர்கள் நடித்த அரிச்சந்திரன் படத்தை நாம் பார்த்திருக்கிறோம். அதையே பொம்மைகளைக் கொண்டு விளக்கும் குழந்தைகள் படமாக, தமிழ் நாடு டாக்கீஸ் ஸ்ரீ எஸ். சௌந்தர ராஜன் ஏற்பாடு செய்திருக்கிறார். தமிழ் நாடு டாக்கீஸ் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் போது இதைப் பற்றி அறிவித்தார். 'மல்லியம் மங்களம்' உங்களை எல்லாம் பார்த்துக் குலாவி மகிழத் துடிக்கிறாளாம், விரைவில் வருவாள் ரஸிகர்களின் ஆவலைத் தீர்க்க.

* * *

விழித்திடு பாப்பா!

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் பல படங்களுக் கிடையே குழந்தைகளுக்காகவும் படம் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார். 'தூங்காதே, தம்பி தூங்காதே' என்பதுதான் படத்தின் தலைப்பு! ஒரு படம் என்றால் கதை, தயாரிப்பாளர், டைரக்டர் எல்லாம் வேண்டுமே! இந்தப் படத்திற்கு சர்வம் ஸ்ரீஎம். ஜி. ராமச்சந்திரன் தான்.

* * *

சதங்கை ஒலிதான்

இந்திரா பிலிம்சார் எடுக்கும் 'கலீர் கலீர்' என்ற படம் துரிதமாகத் தயாராகி வருகிறது. டி. ஆர். மகாலிங்கம், அஞ்சலி தேவி, ஈ. வி. சரோஜா, எம். ஆர். ராதா, லக்ஷ்மி பிரமிளா, ஏ. கருணாநிதி முதலியோர் இதில் நடிக்கிறார்கள். கதை எல்லார்வியினுடையது. ஸ்ரீ ப. நீலகண்டன் டைரக்ட் செய்யும் இப்படத்திற்கு ஸ்ரீ கே.வி. மகாதேவன் இசையமைத்திருக்கிறார். உணர்ச்சியும் சம்பவங்களும் மிகுந்த கதை இது. ரஸிகர்களுக்கு விருந்தாக அமையலாம்.

* * *

புது படக் கம்பெனி

நடிகர் திலகம் ஸ்ரீ சிவாஜி கணேசனின் சகோதரர்களான ஸ்ரீ வி. சி. தங்கவேலு, ஸ்ரீ சண்முகம் இருவரும் ஸ்ரீ முத்துமாணிக்கம் என்பவருடன் சேர்ந்து ஸ்ரீபுரம் பிக்சர்ஸ் என்ற படஸ்தானத்தை ஆரம்பித்துள்ளனர். ஸ்ரீதர் எழுதிய ஒரு கதையை முதலில் படமாக்கப் போகிறார்கள். சிவாஜி கணேசன் தான் கதாநாயகன்.

* * *

உத்தம பத்தினி!

தன் கணவன் சுகமாக உயிர்வாழ வேண்டும் என்பதற்காக, அவனுக்கு ஒரு காதலியைத் தேடித் தந்து, அவர்கள் சந்தோஷமாக இருப்பதைக் கண்டு மகிழ்கிறாள் ஒரு பெண். நடக்கக் கூடிய காரியம் என்கிறீர்களா? ஜுபிடரின் 'அமுத வல்லி' அப்படிச் செய்கிறாள். டி. ஆர். மகாலிங்கத்தின் நல்ல பாடல்களை இப்படத்தில் கேட்கலாம். எம் என், ராஜம் அசல் உத்தம பத்தினியாக நடித்திருக்கிறார் இதில், தாம்பரம் லலிதா, எஸ். ஏ. நடராஜன், லக்ஷ்மிபிரபா, கருணாநிதி எல்லாரும் நடிக்கிறார்கள். ராசலோக காட்சியொன்று பிரமாதமாக இருக்கிறதாம். சேகர் டைரக்ஷனில் வளரும் இப்படத்தைச் சீக்கிரத்தில் கண்டு களிக்கலாம்.

* * *

சென்னையில் செய்திப் பட தியேட்டர்

செய்திப் படங்களை இது நாள்வரை மக்கள் பொதுப் படங்களுடனேயே பார்த்து வந்தனர். மேனாடுகளில் உள்ளது போல் செய்திப் படங்களையும் இதர துண்டுப் படங்களையும் காட்டுவதற்கென தனித் தியேட்டர் ஒன்று சென்னையில் இல்லையே என்ற குறை இருந்துவந்தது, இக்குறையை நீக்குவதற்கு இந்திய சர்க்காரின் பிலிம் பகுதியினர் இப்பொழுது முன் வந்துள்ளனர். ஏற்கனவே சென்னையில் அமைக்கப்பட்டுள்ள "பாலர் அரங்கத்தில்" இனி வாரத்திற்கு நான்குநாள் (திங்கள், செவ்வாய், புதன், வியாழன்) இந்திய சர்க்காரின் செய்திப் படங்களையும் மற்ற மூன்று நாட்கள் குழந்தைகளுக்கான படங்களையும் காட்டுவதற்கு ஏற்பாடாகி யிருக்கிறது. இக்காட்சிகளுக்கு குறைந்த கட்டணங்களே ஏற்படுத்தப் பட்டுள்ளது.

எனை அறியாயோ மூட மனமே!

"சீகம்பட்டி ராஜகோபாலன்"

சுவரோடு சுவராக ஒண்டிக்கொண்டிருந்த கடிகாரம் மூன்று தடவைகள் வாய்விட்டுக் குரலெழுப்பியது. இரவு மணி மூன்று.

"இந்து, தூங்கிவிட்டாயா?..."

'நான் ஒன்றும் தூங்கவில்லை...சும்மா கண்ணை மூடிக்கொண்டிருந்தேன்!...'

'ஆழ்ந்த சிந்தனையோ?...'

'ஆமாம்...'

'ஆத்மநாதன் சொன்னதைப் பற்றியா கொண்டிருக்கிறாய்?...'

'ஆமாம்.'

'இதில் யோசனை என்ன வேண்டிக் கிடக்குது... 'சரி' என்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே!'

'தீவிரமாக ஆலோசித்து முடிவுக்கு வராமல், 'திடுதிப்'பென்று எப்படி ஒத்துக்கொள்வது?...... எனது வாழ்க்கைப் பிரச்னை அல்லவா!...

'உனது வாழ்க்கையில் முக்யமான எனக்கு உண்டல்லவா!"

'ஆம்; உன்னோடு போராடி முடிந்த பிறகுதானே எனக்குத் தெளிவு பிறக்கும்...நீயில்லாமல் என்னால் எப்படி வாழமுடியும்?...'

'அப்படியானால் நான் செல்கிறபடி செய்கிறாயா?...'

'என்ன சொல்லப் போகிறாய்?...'

'உடனே ஆத்மநாதனிடம் சென்று உன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்து விடு!'

'நீ இப்படித்தானே சொல்வாய்! உன் யோசனையை உடனடியாக ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை!...'

'கடந்துபோன வாழ்க்கையை மறந்துவிடவில்லையே!...'

'இல்லை!'

'அப்பா உனக்காகப் பட்ட கஷ்டங்களெல்லாம் நினைவிருக்கிறதா?'

'இருக்கிறது!...'

'இதே ஆத்மநாதன் முன்பொரு நாள் உன்னைப் பெண் பார்க்க வந்தாரே! அப்போது உன் இதயம் அவருக்காக ஏங்கியதே!'

'யார் இல்லை யென்றார்கள்?'

'பிறகு ஏன் தயக்கம்? அவர் அழகர் செல்வந்தர்! போ! வலிய வரும் வளமான வாழ்வை ஏன் உதறித் தள்ளப்பார்க்கிறாய்? ஓடு!... ஒப்புக்கொள்! உம், போ!

'நீ பேசாமல் இருக்கப் போகிறாயா இல்லையா?'

'என்னால் எப்படிப் பேசாமல் இருக்க முடியும்?... நல்லதை எடுத்துச் சொல்லவேண்டியது என் கடமையல்லவா!... அதோ, பார்! ஆத்மநாதன் உன்னை அழைக்கிறார்!.....போ, என்ன வென்று பார்!...'

'முடியாது!...நான் எதற்காக போக வேண்டும்?...'

'எதற்காகவா?.....அவர் நோயாளி; நீ அவருக்காகச் சேவை செய்யவே நியமிக்கப்பட்டவள்... ஓ, அவருக்கு மட்டுமல்ல இங்கு வரும் எல்லா நோயாளிகளுக்குத்தமே!.....இந்த இடத்தில் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு இடமளிப்பதாக இருந்தால் தூய்மையான வெண்ணுடை உனக்குத் தேவையில்லை!... நீ நோய்வாய்ப்பட்டவருக்குச் சேவை செய்யும் 'நர்ஸ்' என்பதை நினைவில் வைத்துக்கொள்!... அதோ, மறுபடியும் அழைக்கிறார்!.... சென்று வா!...'

மனச்சாட்சி வென்றது; இந்துமதி எழுந்து சென்றாள், அந்த வார்டில் மூன்றாவது படுக்கையில் ஆத்மநாதன் படுத்திருந்தார். பக்கத்திற் சென்று பார்த்தாள். நிம்மதியான தூக்கம் போலும்! 'இந்து!' அவர் அதரங்கள் அசைந்தன. கனவோ?... இந்துமதியின் உள்ளம் நெகிழ்ந்தது. மெதுவாகக் கட்டிலில் அமர்ந்தாள். கண் கொட்டிடாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். சிறு குழந்தையைப்

"எத்தனை கோடி படை கொண்டு வந்தாலும் மாயையே! நீ
சித்தத் தெளிவெனுந் தீயின்முன் நிற்பாயோ?—மாயையே!"!

—பாரதி வாக்கு.

போலத் தூங்குகிறாரே! அவருடைய சுருளான கேசத்தை அன்போடு கோதிவிடவேண்டும் போலிருந்தது. அவளுக்கு. சே, என்ன நினைப்பு! ‘சரே’லென்று எழுந்தாள். மீண்டும் நாற்காலியில் வந்து அமர்ந்தாள். உள்ளத்தின் நிழல் விழித்துக்கொண்டது

‘ஏன் அதற்குள் திரும்பிவிட்டாய்?’

‘அவர் கனவு காண்கிறார்....ஆழ்ந்த நித்திரை.....தூக்கத்தில்தான் அவர் என்னை அழைத்தார்!’

‘பார்த்தாயா, நித்திரையிலும் அவர் கண்டு மகிழ்வது உனது உருவந்தான்!’

‘ஹூம்!...என்ன உருவமோ? ஏன் அழகை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும்!’

‘உன் அழகிற் கென்ன குறைவாம்?’ சற்று மாநிறம்; தாறுமாறான பல்வரிசை வாயவிட்டுச் சிரிக்க நாணுவாய்! அவ்வளவுதானே! மற்றபடி உன் அறிவும் குணமும் வேறு யாருக்கு உண்டு?’

நீ சொன்னால் போதுமா?...அன்று ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆத்மநாதன் என்னைப் பார்த்துவிட்டு அதே இடத்தில் கொஞ்சமும் இங்கிதமில்லாமல்...என்ன சொன்னார் தெரியுமா?’

‘தெரியும்! அவருடைய அழகில் மயங்கிய நீ இன்பக் கனவு காணும் போது அவர் அப்பாவிடம் சொன்னதைக் கதவிடுக்கு வழியாகப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தாயே! ‘என்னவோய், கிட்டாமணி! உமது பெண் நதி என்று வர்ணித்தீரே! நல்ல வேலை, பெண்ணைப் பார்த்தேனே, பிழைத்தேனே! உமது திசைக்கே ஒரு கும்பிடு’! என்று கூறியபோது நீ எப்படியெல்லாம் குமுறினாய்...! ஆத்மநாதனோடு சண்டை போட்டு விரட்டிய அப்பா அன்று படுத்தவர்—அதன் பிறகு எழவே இல்லை! கன்னியாகவே காலங் கழிப்பது என்று உறுதி பூண்டாம் ஆணினத்தின் மீது வெறுப்புக் கொண்டாய்...திருமண நினைவிற்குக் கல்லறை கட்டினாய்!..... ‘நர்ஸிங் கோர்ஸ்’ ஆதரவு தந்தது!’

‘இது எனக்கு எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது! அதை விட்டு...’

‘அடி, பைத்தியக்காரி! வாழ்க்கையின் ருசி என்னவென்று தெரியுமா உனக்கு? தெரிந்து கொள்ள வேண்டாமா! கல்யாணமாகிக் குடியுங் குடித்தனமுமாக வாழ்வதற்கு நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!’

‘அவர் ஏற்கனவே மணமானவர்!’

‘கல்யாணமானால் என்ன! ...அந்தப் புண்ணியவதிதான் போன வருஷமே மஞ்சள் குங்குமத்தோடு போய்விட்டாளே! குழந்தை-பிச்சுப் பிடுங்கல் என்று எதுவுமே இல்லை! அவர் கார் விபத்தில் அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு வந்தாலும் வந்தாள்; உனக்கு அடிக்கிறது, யோகம்! எந்த நேரமும் நோயாளிகளோடு—மருந்து வாசனையை நுகர்ந்து கொண்டு...என்ன வாழ்க்கை இது!... பேசாமல் அவரை மணந்து கொள்; ஆனந்தமாக வாழலாம்’

"இந்து! இந்து!" ஆத்மநாதனின் அழைப்பு இந்துமதியைக காந்தமென இனத்தது'

"இந்து! நீ தூங்கவில்லையா?" படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்ட ஆத்மநாதன் கேட்டார். இப்போது அவருக்கு நல்ல தெம்பு விந்து விட்டது. இன்னும் நான்கு நாட்களில் வீட்டிற்குப் போய்விடலாம்!

"நான் எப்படித் தூங்க முடியும்?... நோயாளிகளைக் கவனிக்க வேண்டாமா?"

"ஒகோ!...நான் மறந்தே போனேன் ... எல்லாரையும் நீ கவனிக்க வேண்டுமல்லவா!" அவர் சிரித்தார். பற்சுள் ஒளிவீசின.

"தாகமாக இருக்கிறது. இந்து!"

இதோ, கொண்டு வருகிறேன்..."

தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள் இந்துமதி. விரல்கள் உறவாடின. உணர்ச்சி அலைமோதியது.

"இந்...து!"—சொற்கள் தடுமாறின. அவள் உள்ளத்தில் புயல். தண்ணீர்க் குவளை அருகிலிருந்த ஸ்டூலில் போய் உட்கார்ந்து கொண்டது.

"இந்து! நீ எவ்வளவு...அழகாக... இருக்கிறாய்...!" அவளது கை ஆத்மநாதனின் கரத்தில் அடைக்கலம் பெற்றது. அவள் மனத்தில் கிளுகிளுப்பு; புதியதோர் உணர்வு; இதுவரை அனுபவித்திராதது, தன்னை மறந்து நின்றாள்.

"இந்து!... இந்து!... நம்முடைய உனக்குச் சம்மதந்தானே?..." நாணத்தோடு தலைகுனிந்தாள் இந்துமதி. அடுத்த கணம் ஆத்மநாதனின் அணைப்பில் அவள் பூவுடல் சிக்கிக் கொண்டது. வானுலக உச்சிக்குப் பறந்து செல்வது போன்ற பிரமை.

'தடால்' என்று ஏதோ கீழே விழுந்தது போன்ற சப்தம் கேட்டுச் சுய உணர்வு பெற்றாள் அவள். ஆத்மநாதனிடமிருந்து தன்னை விடுத்துக் கொண்டாள்.

"பாவி! நீ வஞ்சகன்! கயவன்! உனது முகத்தில் விழிப்பதே பாவம்!" விலகி ஓடினாள் இந்துமதி. திகைப்பும் ஏமாற்றமும் ஆத்மநாதனைச் சூழ்ந்தன.

ஏழாவது பெட்டில் படுத்திருந்த கிழவர் கீழே விழுந்து விட்டிருந்தார். அவரைத் தாங்கி எழுப்பி மறுபடியும் படுக்கையில் கிடத்தினாள் இந்துமதி.

நாற்காலி இந்துமதியை ஏற்றுக் கொண்டது. குளிர்ந்த நேரத்திலும் அவள் முகத்தில் முத்து முத்தாக வேர்வைத்திளிகள் அரும்பின.

'அவரை ஏன் அவ்வாறு உதறித் தள்ளித் திட்டிவிட்டு வந்தாய்?'

'அவனுடைய நோக்கம் எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. அவனுக்கு என் உள்ளம் தேவையில்லை; அன்பும் அடக்கமும் தேவையில்லை! என்னுடைய உடல்தான் தேவை! அவனது பசிக்குத் தற்காலிகமாக விருந்து வேண்டும்...அவ்வளவு தான்!'

'நீ என்ன சொல்லுகிறாய்?'

'அவன் ஒரு காமுகன்! அப்பப்பா! அவன் கண்கள்...கொடியவை! நல்ல வேளை, உன் பேச்சைக் கேட்டு வலையில் வீழ்ந்து விடுவதற்கு இருந்தேன்... நான் மட்டும் கொஞ்சம் தவறியிருந்தால்...

'தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய்!'

'நன்றாக உணர்ந்து—அறிந்துதான் சொல்கிறேன். தற்போதைய சூழ்நிலையில் என்னுடல் மீது ஏதோ ஒரு வகையான கவர்ச்சியைக் கண்டான். அதனால்தான் கல்யாணம் அப்படி இப்படி' என்று உளறினான்! அத்தனையும் பசப்பு மொழி!'

'நீ உலகம் புரியாதவள்! வாழ்நாள் பூராவும் இப்படியே தனிமையில் வெந்து மடியத்தான் போகிறாயா?'

'எத்தனை குறைபட்ட உயிர்கள் எனது பணிவிடையால் மகிழ்ச்சி அடைகின்றன. இதைவிட வேறென்ன வேண்டும்? வாழ்வின் அமைதியும் தாய்மையின் இன்பமும் அளிக்கும் இந்த வாழ்வே எனக்கு நிரந்தரமானது... இதிலிருந்து வழுக்கி விழுந்து புழுவாகத் துடித்து துன்பத்தால் வெந்து மடிய நான் தயாராக இல்லை! இதுவே எனக்கு வேண்டும். நீ இருந்தால் என்னை அலைக்கழித்து வேடிக்கை பார்ப்பாய்!...இதோ, ஒழிந்து போ!'

விடிவதற்கும் புள்ளினங்கள் கட்டியங்கூறின; இருள் மெதுவாக விடைபெற்றுச் சென்றது.

தண்ணீர்

ஹிந்தி மூலம்: பிரேம நாத் — தமிழாக்கம்: D. ராஜன்

ஜோக்கு தண்ணீர் குடிக்க செம்பை வாயினருகே கொண்டு போனான். தண்ணீரில் வீசிய கெட்ட வாடை குடலைப் பிடுங்கியது.

"இது என்ன? ஒரே கெட்ட வாடை வீசுது! இதுவா தண்ணீர்?" என்று அவன் கங்கியைக் கடிந்துகொண்டான்.

கங்கி எப்பொழுதுமே மாலைவேளைகளில் தண்ணீர் கொண்டு வருவாள். கிணறு வெகு தூரத்தில் இருந்தது. அடிக்கடி தண்ணீர் கொண்டு வரவும் முடியாது. நேற்று வந்த தண்ணீரில் நாற்றமில்லை. இன்று ஏன் 'குப்' பென்று வாடை வீசுகிறது? கங்கி செம்பை முகர்ந்து பார்த்தாள். ஒரே சகிக்க முடியாத நாற்றம். ஏதோ ஒரு பிராணி தண்ணீரில் விழுந்து செத்திருக்கு மென்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், அவள் மறுபடியும் வெளியே போய்த் தண்ணீர் கொண்டு வரவேண்டுமே! டாக்கூர் பண்ணைக்காரர் கிணற்றுக்குப் போக விடுவார்களா? தூரத்தில் ஆளைப் பார்க்கும் போதே அதட்டுவார்களே. மார்வாடியின் கிணறோ ஊருக்கு அப்பால் இருக்கிறது. அங்கே மாத்திரம் தண்ணீர் எடுக்க விடுவார்களா என்ன? இவைகளைத் தவிர ஊரில் வேறு கிணறுகளே கிடையாது.

ஜோக்குவிற்கு வெகுநாட்களாகவே உடம்பு சரியில்லை. சற்று நேரம்வரையில் தாகத்தை அடக்கிக் கொண்டு படுத்திருந்தான். பிறகு தாகம் தாங்காமல் போகவே, "மூக்கைப் பிடித்துக் கொண்டு இந்தத் தண்ணீரையே குடிக்கவா?" என்று கேட்டான்.

கங்கி அதைக் குடிக்கவிடவில்லை. கெட்ட தண்ணீரைக் குடித்தால் நோய் அதிகமாகு மென்பதைஅறிந்திருந்தாள். ஆனால், கெட்ட தண்ணீரைக் காய்ச்சிக் குடித்தால் கெடுதல் கிடையாது என்பதை அவள் அறிந்திருக்கவில்லை.

"இதையா குடிக்கப் போகிறே? எந்தப் பிராணி விழுந்து செத்ததோ தெரியவில்லை. கொஞ்சம் பொறு. கிணற்றிலிருந்து வேறு தண்ணீர் கொண்டு வருகிறேன்" என்றாள் கங்கி.

ஜோக்கு வியப்புடன் அவளையே பார்த்துக் கொண் டிருந்தான்.

"வேறு எங்கிருந்து கொண்டு வருவதாம்? பணக்காரர் கிணறு, ஸாஹு மார்வாடியின் கிணறு இந்த இரண்டைத் தவிர, வேறு நல்ல கிணறு எங்கே இருக்கு? ஒரு செம்பு தண்ணீர் எடுக்க விடமாட்டார்களா?" என்றாள் கங்கி.

"தண்ணீர் எடுக்கப் போனால் கை கால் ஒடியும். அப்புறம் பார்ப்பவர்கள் ஆசீர்வாதம் செய்வார்கள். டாக்கூர் தடியால் அடிப்பார். ஸாஹுகார் ஒரு ரூபாய் வட்டி வாங்குவதற்குப் பதில் ஐந்து ரூபாய் வட்டி வாங்கிவிடுவார்! அவர்களுக்கு ஏழைகளின் வேதனை

"மனிதரில் ஆயிரம் ஜாதி—என்ற வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை"
—பாரதி வாக்கு.

எங்கே தெரியப் போகிறது? நாம் இங்கே கிடந்து சாகிறோம். யார் வந்து இங்கே பார்க்கப் போகிறார்கள்! நம்ம கிட்டவே நெருங்கமாட்டார்கள்! அவர்கள் கிணற்றில் தண்ணீர் எடுக்கவா விடுவார்கள்?'' என்று பதில் கூறினான் ஜோக்கு.

அவனுடைய சொற்களில் கசப்பான உண்மை இருந்தது. இதற்குக் கங்கி என்ன சொல்ல முடியும்? ஆனாலும் அவள் பிடிவாதமாக அவனை அழுக்குத் தண்ணீரைக் குடிக்கவிடவில்லை.

இரவு ஒன்பது மணியிருக்கும். சோர்வுற்றுத் தொழிலாளர்கள் தூங்கி விட்டனர். டாக்கூரின் வீட்டில் சில 'சூரப்புலிகள்' கூடியிருந்தனர் தம் வீர தீரச் செயல்களை, இப்பொழுது போர்க்களத்தில் காட்ட வேண்டிய வாய்ப்பு இல்லாமையால் சட்ட நடவடிக்கைகளின் வாயிலாக நிலை நாட்ட எண்ணினார்கள்.



டாக்கூர் வெகு சாமர்த்தியமாக ஒரு குறிப்பிட்ட வழக்கில் அதிகாரிக்கு 'லஞ்சம்' கொடுத்தார். குற்றவாளிகள் ஒரு பிழையுமின்றித் தப்பிவிட்டனர். எத்தனை யூகமாக ஒரு பெரிய வழக்கின் 'நகலை' வாங்கிவந்துவிட்டார், தெரியுமா!

ஐம்பது நூறு வேண்டுமென்றார்கள், இல்லாவிட்டால் 'நகலை'க் கொடுக்க முடியாதென்றும் கூறினார்கள். டாக்கூர் ஒரு தம்பிடிச் செலவின்றிக் காரியத்தை முடித்துவிட்டார். எப்படியோ காரியத்தைச் சாதித்துக் கொள்வது கலை அன்றோ!

இப்பொழுதுதான் கங்கி கிணற்றினருகே தண்ணீர் எடுக்க வந்தாள். குப்பி விளக்கின் மங்கல் ஒளி கிணற்றண்டை வீசியது. கங்கி மறைந்து சரியான வேளையை எதிர் நோக்கியிருந்தாள். கிராமம் முழுவதும்தான் கிணற்றுத் தண்ணீரைக் குடிக்கிறது. ஒருவருக்கும் தடை எதுவும் கிடையாது; ஆனால் இந்த 'பாக்கிய' மற்றவர்கள் தான் தண்ணீர் எடுக்கக் கூடாது.

கங்கியின் உள்ளத்திலே கிளர்ந்தெழுந்த புரட்சி, பழைய சட்டதிட்டங்களையும், சமூகப் பழமையான கட்டுதிட்டங்களையும் தகர்த்தெறியத் தொடங்கியது.

'நாம் ஏன் சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாக இருக்க வேண்டும்? மற்றவர்கள் ஏன் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்? இங்குள்ளதைவிடத் தாழ்ந்தவர்கள் வேறெங்கே இருக்க முடியும்? இங்குள்ளவர்கள் யாராவது திருடினாலோ, மோசம் செய்து வழக்கில் சிக்கிவிட்டாலோ டாக்கூர் பணம் கொடுத்துத் தப்ப வைத்து விடுகிறாரே! அன்றைக்கு இடையர் மந்தையிலிருந்து ஓர் ஆடைத் திருடி மறுநாள் சுற்றம் சூழ அடித்து விருந்து சாப்பிட்டாரே! அவரை யாராவது அசைக்க முடிந்ததா? மளிகைக் கடைக்கார 'ஸாஹுஜி' நெய்யில் எண்ணெய் கலப்படம் செய்து விற்கிறாரே! நாங்கள் நெற்றி வியர்வை

நிலத்தில் சொட்ட அரும்பாடு படுகிறோம். கூலி கொடுக்க மனம் வருவதில்லே! அவர்கள் எங்களைவிட எவ்விதத்தில் உயர்ந்தவர்கள்? ஆம், வாய்ப் பேச்சினுல் அவர்கள் உயர்ந்தவர்கள் தான்! நாங்கள் ஒன்றும் தெருத்தெருவாகப் போய் நாங்கள் உயர்ந்தவர்களென்று 'டமாரம்' அடித்துக்கொள்ளவில்லே! எப்பொழுதாவது நான் ஊருக்குள் போனுல் அந்த உயர்ந்தவர்கள் எவ்வளவு ஆவலுடன் என்னே விழுங்கி விடுவதுபோல ஆசைக் கண்களால் பார்க்கிருர்கள், தெரியுமா! உம், உயர்ந்தவர்களாம்! உச்சாணிக்கிளையில் இருப்பவர்களாம்! இந்த வரட்டுக் கர்வத்திற்குக் குறைச்சல் இல்லே !''

கிணற்றை நோக்கி யாரோ வரும் ஓசை கேட்டது. கங்கியின் நெஞ்சு படபடத்தது. யாராவது பார்த்துவிட்டால் தலேதப்பாது. உதைத்து நொறுக்கி விடுவார்கள். அவள் கயிற்றையும் குடத்தையும் எடுத்துக் கொண்டு ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்துகொண்டாள். இந்த மங்கைமீது என்றுதான் அந்த உயர் குடி மக்களுக்கு இரக்கம் வந்ததாம்! அன்று கங்கியைச் செம்மையாக அடித்துப் போட்டுவிட்டார்கள்; எத்தனே மாதங்களாக அவள் இரத்தம் கக்கிக்கொண்டிருந்தாள். கூலி கொடுக்காவிட்டால் வேலே செய்ய முடியாது'' என்ருன். இதற்குத்தான் இந்தப் பூசை! உம், தம்மை உயர்ந்த 'சாதி' என்று சொல்ல வெட்கமாக இல்லேயா?

கிணற்றுப் பக்கம் இரு பெண்கள் தண்ணீர் எடுக்க வந்தார்கள். அப்பொழுது அவர்கள் பேசுவது கங்கியின் காதில் விழுந்தது.

'சாப்பிட வந்ததும் நல்ல தண்ணீர் கொண்டாஎன்று உத்தரவிடுகிருர்கள்.''

''நாம் சும்மா உட்கார்ந்திருந்தால் ஏன்தான் இந்த ஆண்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறதென்று தெரியவில்லே .''

''நாமென்ன அடிமைகளா? இரண்டு குடம் தண்ணீர் கொண்டு வர இந்த ஆண்களுக்குத் துப்பில்லே. இருட்டில் கூட நம்மை ஒரே விரட்டாக விரட்டுகிருர்கள்.''

''அடிமை இல்லாத என்னவாம்! உனக்குச் சோறு துணி கிடைக்கிறதா இல்லேயா? ரூபாய் ஐந்து பத்துன்னு வாங்கறயே? இப்ப அடிமை யாருன்னு உனக்குத் தெரியுதா?''

''கேலிப் பேச்சு வேண்டாம், அக்கா! நாள் பூரா ஓய்வு கிடையாது. இந்த வேலே வேறெங்காவது செய்தால் ஓய்வாவது உண்டு. இங்கே பம்பரம் போலச் சுற்றி உழைத்தால் ஒரு நல்ல பேச்சுக் கிடையாது !''

பெண்கள் சென்று விட்டனர். மரத்தின் மறைவிலிருந்து கங்கி கிணற்றடிக்கு வந்தாள். டாக்கூரின் கூட்டாளிகளும் போய் விட்டனர். கதவை மூடி விட்டு டாக்கூரும் தூங்கப் போனுர். கங்கி அமைதியுடன் மூச்சு விட்டாள். ஒரு காலத்தில் அமிர்தம் திருட ஓர் அரசகுமாரன் போனுனே, அவன்கூட இப்படி யோசித்திருக்க மாட்டான். பூனே மெதுவாகப் பதுங்கி வருமே அப்படிக் கங்கி மெதுவாக வந்தாள். முன்பு இப்படி இலேசில் வெற்றி ஏற்பட்டதில்லே. நாலா புறங்களிலும் பார்த்து விட்டுக் குடத்தில் கயிற்றுச் சுருக்கைப் போட்டாள். பார்த்தால் இலேசில் விடமாட்டார்கள். பரிவு காட்டும் பேச்சே கிடையாது! தெய்வங்களே வேண்டியவாறு குடத்தை இறக்கினுள். குடம் ஓசையின்றிக் கிணற்றில் முழுகியது- கொஞ்சங்கூட ஓசை வெளியே வரவில்லே. குடத்தை எப்படியோ சற்று வேகமாக இழுத்தாள். குடம் கிணற்றின் கைப்பிடிச் சுவர் வரைக்கும் வநதுவிட்டது. வலுவான உடற் கட்டுடைய மற்போர் வீரன்கூட அப்படியிழுத்திருக்க மாட்டான். கங்கி குடத்தை எடுத்துக் கிணற்றுச் சுவரில் வைக்க எண்ணும்போது திடீரென்று டாக்கூரின் வீட்டுக் கதவு திறந்தது. சிங்கத்தின் வாய்கூட அத்தகைய அச்சத்தை அளித்திருக்காது.

கங்கியின் கையிலிருந்த கயிறு அறுந்து விட்டது. கயிற்றுடன் குடம் பேரொலியுடன் கிணற்றில் விழுந்தது. சற்று நேரம் வரையில் தண்ணீர் கலகலத்தது.

''யாரது? உம், யாரது?'' என்று கூச்சலிட்டவாறு டாக்கூர் கிணற்றை நோக்கி வந்தார். கங்கி ஓட்டம் பிடித்தாள்.

கங்கி வீட்டையடைந்ததும் கணவன் ஜோக்கு அந்த அழுக்குத் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்.



3

நடந்த கதை...

மிகுந்த சிறப்புடன் விளங்கிய பாண்டியர் ஆட்சி வீழ்ச்சியுற்று, நாடு களப்பிரர்களின் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருந்த இருண்ட காலம். அடிமை வாழ்வு சிலருக்கு ஆனந்தம் அளித்தது. எனினும் அதை ஒழிக்கத் துடித்தவர்களில் முக்கியமானவன், செவ்விருக்கைநாடு இளம்வழுதி.

அவன் தனியாக மதுரை மாநகரை அடைந்து, களப்பிரர்களின் பிரதிநிதியான கூற்றன்நாயனுருக்கு எச்சரிக்கை ஓலை அனுப்புகிறுன். ஆபத்தில் சிக்குவதற்கிருந்த அவனுக்கு மங்கையர்க்கரசி அம்மையார் உதவிபுரிகிருள். மாமூலனுர் எனும் புலவரின் அறிமுகமும் எதிர்பாராத வகையிலே கிட்டுகிறது.

அதிகாலையில் ஆற்றின் பக்கத்தில் அழகி அமுதவல்லியைக் கண்டான். அவளுக்கு உதவி செய்ய நேரிடுகிறது.

இரண்டு வழிகளிலும் லாபம் பெற்று வாழ முயல்கிறவர், வரகுணத்தேவா. அவரிடம் உதவி பெறும் எண்ணம் வழுதிக்கு உண்டு. அவரைக் காண வீடு தேடிச் சென்றுன் அவன். அவனுக்கு நிகழவிருந்த விபத்திலிருந்து அவனை விடுவிக்கிருள், தேவர் மகள் திலகவதி.

பூங்குடி நாட்டைச் சேர்ந்த சாத்தன்கணபதியின் நட்பு வழுதிக்கு ஏற்படுகிறது. இருவரும் வீதி வழியே செல்லும்போது, களப்பிர வெறியர்கள் இரு கன்னியரைத் தாக்குவதைக் கண்டு வெகுண்ட இளம்வழுதி அவர்களுக்குப் பாடம் கற்பிக்கிருன். அவன் உதவியைப் பெற்ற கன்னியரில் ஒருத்தி அமுதவல்லி. இருவர் உள்ளமும் மற்றவரைப் பற்றி எண்ணித் துடிக்கத் தொடங்குகிறது.

மாமூலனுர் போன்ற புலவர்களும், அடியார்க்கு நல்லான் முதலிய துறவிகளும் கூடி ஆலோசனை நடத்தும் இடத்துக்குச் சாத்தன், வழுதியை அழைத்துச் செல்கிருன். அங்கும் மங்கையர்க்கரசி அவனுக்காகப் பரிந்து பேசுகிருள். பாண்டியர் பரம்பரையைச் சேர்ந்த இளம்வழுதி தன்னை அனைவருக்கும் அறிமுகப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு கிட்டுகிறது....வழியில் வரகுணத்தேவரின் பகைமையைத் தாண்டிவிடுவதற்கும் சந்தர்ப்பம்

வாய்க்கிறது!

அமுதவல்லியும் இளம்வழுதியும் காதல் வியாதியால் தவிக்கிறார்கள். கண்டு பழகி மனம் மகிழ்கிறார்கள்...'துடிப்பும் துணிவும் மட்டும்போதாது; பேராற்றல் படைத்த பெருவீரர்களின் துணையும் வேண்டும்' என்று மாமூலனார் உபதேசிக்கிறார். மங்கையர்க்கரசி உதவி புரிய முன்வருகிறாள்.

இருவரையும் சந்தித்துவிட்டுத் தனியாக வந்த வழுதி களப்பிரர்களால் தாக்கப்படுகிறான். வரகுணத்தேவரின் வண்டியில் வந்த திலகவதி, வீதியில் விழுந்து கிடந்த அவனை மாஞ்சோலை இல்லம் சேர்த்து, அன்போடு பணிவிடை செய்கிறாள். களப்பிரர்களின் கொடுங்கோல் முறை பற்றியும், மக்களுக்கு அச்சமூட்டுவதற்காக வெறி பிடித்த வீரர்கள் நாடெங்கும் சென்றிருப்பது பற்றியும் அவன் உணருகிறான். மதப்பற்று மிகுந்தவர்கள் களப்பிரரைக் கழுவேற்றத் துடிதுடிப்பதையும் அறிகிறான்.

1. இருளில் சென்ற இருவர்

எங்கும் இருள் தான் நிலைத்து நின்றது. குளிர் காற்று ஊசலிட்டுக் கொண்டிருந்தது.

இருட்டைக் கண்டு பயந்தும், குளிரினால் பாதிக்கப்பட்டும் நடுங்குவன போல அநேக வெள்ளிகள் துடித்தன, வானிலே. வானம் முழுவதும் நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்தன. மதிப்புத் தெரியாமல் எவனோ வாரி இறைத்து விட்ட வைர மணிகள் போல.

சாத்தன்கணபதி முன் சென்றான். இளம்வழுதி அவனுக்குப் பின்னால் நடந்தான். இருவரும் அடி எடுத்து வைத்தார்கள். 'இவன் என்னை எங்கே அழைத்துப்போகிறானோ? மங்கையர்க்கரசி குறிப்பிட்ட மனிதர் எப்படிப்பட்டவரோ? என்ன உதவி செய்வாரோ?' என்று அவன் மனம் அலைமோதியது. அதன் விளைவாக, 'நாம் இப்போது எங்கே போகிறோம்?' என்ற கேள்வி அவனிடமிருந்து பிறந்தது.

'நான் தான் அப்போதே சொன்னேனே! நமது குதிரைகளை நிறுத்தி வைத்திருக்கிற இடத்துக்கு நாம் போய்க் கொண்டிருக்கிறோம்' என்றான் சாத்தன்.

'அதைக் கேட்கவில்லை நான்' என்று சற்றே சிடுசிடுப்பாகப் பேசினான்வழுதி. 'யாரையோ பார்த்துப் பேசினால், தேவையான உதவி எல்லாம் கிடைத்துவிடும் என்று பிராட்டியார் சொன்னார்களே? அவர் எங்கே இருக்கிறார்; அவரைக் காண்பதற்காகத் தான் நாம் போகிறோமா என்று கேட்டேன்' என்றான்.

நண்பன் மெதுவாகச் சிரித்தான், வழுதியின் அவசரத்தைக் கண்டு. அதன் பேரொலி போல எழுந்து பரவியது, எங்கோ சிரித்த ஒரு ஆந்தையின் அலறல்.

இளம்வழுதிக்கு எரிச்சல் தான் ஏற்பட்டது. 'என்னிடம் கூட ஏனோ இந்த மர்மம்? நான் இப்பொழுது என்ன நினைக்கிறேன் தெரியுமா?' என்றான் அவன்.

'எனக்கெப்படி தெரியும்?' என்றான் சாத்தன்.

வழுதி அனல் மூச்செறிந்தான். 'இப்படி அர்த்தமில்லாமல் அலைந்து திரிவதைவிட, தெற்கு நோக்கிப் போயிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. எனது செவ்விருக்கை நாட்டிலும், அதனருகுள்ள இதர நாடுகளிலும் எனக்காக எனது தோழர்கள் காத்திருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து, இனி நடக்க வேண்டியது பற்றித் திட்டமிடுவதே அறிவுடைமையாகும்' என்றான்.

'பிராட்டியார் கூற்றில் உனக்கு நம்பிக்கை இல்லையே?' என்று சாத்தன் கேட்டான்.

'பிராட்டியாரின் எண்ணம் உயர்ந்தது. அதை நான் சந்தேகிக்கவில்லை. ஆயினும் பிறர் மீது எனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை' என்றான் வழுதி.

சாத்தன்கணபதி சிறிது தூரம் வரை பேசவே இல்லை. இருளின் திருட்டுத்தனமான கண் சிமிட்டுதல் போல மின்மினிப்பூச்சிகள் அவ்வப்போது ஒளி வெட்டி மிதந்து கொண்டிருந்தன. பாதையை விட்டு விலகி நின்று, இலைகள் அடர்ந்த மரம் ஒன்றில் அப்பூச்சிகள் ஒரேயடியாக மொய்த்துக் கிடந்தன. நட்சத்திர மண்டலமே அங்கு நழுவி விழுந்து தொங்கிக் கிடப்பதுபோல் தோன்றியது. அதைக் கவனிப்பவன் போல, அவன் வாய் திறவாது நடந்தான்.

வழுதியும் அந்த அற்புதமான காட்சியைக் கண்டான். எனினும் அதனால் அவன் வசிகரிக்கப்படவில்லை. அவன் உள்ளத்திலே பலரகமான சிந்தனைகள் முட்டி மோதி, அவனை அலைக்கழித்தன.

'பலரிடமும் நம்பிக்கை கொண்டு விடுவது மங்கையர்க்கரசிப் பிராட்டியின் நல்ல மனப்பான்மை...'

அவன் பேசுவதையும் விரும்பாதவனாய் சாத்தன் 'உஸ்ஸ்!' என்றான் 'எண்ணங்களுக்கு உயிர் கொடுக்காமலிருப்பதே நல்லது. இரவில், இது போன்ற இடத்தில், வாய் திறவாமல் நடப்பதுதான் சிறந்தது. இருட்டுக்கு ஆயிரம் செவிகள் இருக்கக் கூடும்' என்றான். வேகமாக நடக்க முயன்றான். வழுதியும் அவனைப் பின்பற்றி நடந்தான்.

• 'நாம் இன்னும் வெகு தூரம் போக வேண்டுமோ?' என்று இளம்வழுதி கேட்க எண்ணிய வேளையில், சாத்தனே வாய் திறந்தான். 'இங்கு தான் குதிரைகள் நிற்க வேண்டும். கிழவன் இங்கேயே காத்திருப்பதாகச் சொன்னானே?' என்று முணுமுணுத்தபடி சுற்றிலும் கூர்ந்து கவனித்தான். 'குடித்து விட்டுக் குடிசையிலேயே விழுந்து கிடக்கிறானோ என்னவோ' என்றான்.

வயது முதிர்ந்து கூனிக் குறுகிய புளியமரம் ஒன்று அங்கு இருந்தது. சில அடிகளுக்கப்பால் குடிசை இருப்பதும் புலனாயிற்று.

சூழ்நிலையை ஆராய்வதில் ஈடுபட்ட வழுதி திடீரென்று தரையைச் சுட்டிக் காட்டினான். 'இங்கே குதிரைகள் சுற்றிச் சுற்றி வந்து, அமைதியிழந்து முரண்டு பிடித்ததுபோல் தடங்கள் பதிந்து கிடக்கின்றன' என்றான்.

'உம்ம். அங்கே போய்ப் பார்க்கலாம்' என்று எச்சரிக்கையோடு அடி எடுத்து வைத்தான் சாத்தன். 'என்னிடம் சிறு குத்து ஈட்டி இருக்கிறது. உன்னிடமும் இருந்தால், எடுத்துக் கையில் பிடித்துக் கொள். எதற்கும் விழிப்புடன்நடப்பது நல்லது' என்றான்.

அவன் தகுந்த முன்யோசனையோடு தான் நடந்து கொண்டான் என்பதை அங்கே எதிர்ப்பட்ட நிகழ்ச்சிகள் நிரூபித்து விட்டன. அவ்விருவரும் குடிசையை நெருங்கும் முன்னரே, சாத்தனின் கால்கள் எதன் மீதோ இடறின. அவன் குனிந்து நோக்கினான். அவனுக்குப் பழக்கமான கிழவன்—குதிரைகளைப் பிடித்துக் கொண்டு மரத்தடியில் காத்திருக்கவேண்டியவன் — தான் உயிரற்றுக்கிடந்தான்.

'இவனை யாரோ கொன்று விட்டு, குதிரைகளைத் திருடிச் சென்றிருக்கிறார்கள்' என்று முணுமுணுத்தான் கணபதி. 'எதற்கும் குடிசையையும் ஆராய்ந்து விடுவோம்' என்று மெதுவாக முன்னேறினான் அவன். வழுதியும் தொடர்ந்தான்.

பழங்குடிலினுள் சிறு வெளிச்சம் தெரிந்தது. 'கெக் கெக்கே' என்ற விசித்திரமான சிரிப்பொலியும், 'எதிர்பாராத நல்ல வேட்டை' என்ற பேச்சுக் குரலும் உள்ளே மனிதர்கள் இருக்கிறார்கள் என்று அறிவுறுத்தின.

கதவு நன்றாக அடைக்கப்பட்டிருக்கவில்லை. இடைவெளியினூடு வெளியே பாய்ந்த ஒளிக்கோடு இருட்டைக் குத்த முயலும் கூர்மையற்ற ஈட்டி போல் காணப்பட்டது.

சாத்தன் உற்று நோக்கினான். உள்ளே இரண்டு பேர் நல்ல குடிபோதையில் இருப்பதைக் கண்டான். அவர்கள் மேலும் மேலும் குடித்துக் கொண்டேயிருந்தார்கள்; குள்ளநரிக் குணமுடைய களப்பிரர்கள் தான் இருவரும் என்பதையும் அவன் உணர்ந்தான். வழுதியிடம் மெதுவாக இதைக்

கூறி விட்டு, என்ன செய்ய வேண்டும் என்றும் அறிவித்தான்.

அவனது ஒரு கரம் ஈட்டியை உயர்த்திப் பிடித்திருக்க மறுகரம் கதவை மெதுவாகத் தள்ளித் திறந்தது. போதுமான அளவு திறக்கப்பட்டதும் இருவரும் உள்ளே புகுந்தார்கள்.

"ஏய் குதிரைத்திருடிகளே! குடிகாரக் களப்பிரர்களே! கொலைகாரர்களே! இதோ, உங்களுக்கு உரிய தண்டனை!' என்று கத்திக் கொண்டே சாத்தன் ஒருவன் மீது பாய்ந்தான். வழுதி மற்றவனைத் தாக்கினான்.

தங்களுடைய நல்லதிர்ஷ்டத்தில் சொக்கியிருந்த குடியர்கள் திடுமென வந்த தாக்குதலால் பதறினார்கள். அவர்களும் கைகளையும் கால்களையும் ஆட்டி அசைத்து உதறினார்கள். தெளிவற்ற ஊமை உளறல்களைக் கூவியவாறு சமாளிக்க முயன்றார்கள். ஆனால் முடியவில்லை.

உள்ளே பாய்ந்த இருவரின் வேலையும் எளிதாக விரைவிலேயே முடிந்து விட்டது. இருவரும் களப்பிரரின் நீண்ட வாள்களை எடுத்துக் கொண்டு, வெறுப்போடு காரி உமிழ்ந்து விட்டு, வெளியே வந்தார்கள். வரும்பொழுது வழுதி விளக்கை அணைக்கத் தவறவில்லை.

வெளியே வந்ததும் சாத்தன் கதவை இழுத்து அடைத்தான். பிறகு ஏதோ எண்ணியவனாய் அதைத் திறந்தான். கீழே கிடந்த கிழவனின் உடலை எடுத்து வந்து அதையும் குடிலுக்குள் போட்டு விட்டுக் கதவைச் சார்த்தி வெளியே தாளிட்டான்.

'மூவரும் அமைதியாக உறங்கட்டும். நாம் வேகமாய் இங்கிருந்து செல்ல வேண்டும்' என்று கூறி, குடிலின் பின்புறம் சென்றான் சாத்தான். அங்கு அமைதியிழந்து, கால்களால் தரையை உதைத்துக் கொண்டு நின்ற குதிரைகள் இரண்டையும் கண்டான்.

அவன் வருகையை உணர்ந்ததும் ஒரு குதிரை உவகையுடன் கனைத்தது. அதனருகே சென்று அதை அன்புடன் தடவிக் கொடுத்தான் கணபதி. உடன் வந்த இளம்வழுதியிடம், 'நீ அதன்மேல் ஏறிக் கொள்' என்று கூறித் தனது குதிரை மீது அமர்ந்தான் அவன். உடனேயே இரு குதிரைகளும் முன்னே பாய்ந்தன.

இருளோடு இருளாய், இருளைக் கிழித்துக் கொண்டு, சூறைக்காற்றுப் போல இரண்டு வீரர்களும் முன்னேறிச் சென்றனர். எங்கும் சூழ்ந்து கிடந்த இருட்டில் குதிரைகளின் காலடி ஓசை மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த ஒலி தவிர வேறு சத்தம் எதுவும் இல்லை

*   *   *

ஓடி ஓடித் தேய்ந்து கொண்டிருந்தது இரவு. அதனாலேயே அது வெளிறியது. வானவீதியிலே இரவுப்பெண் சித்திரித்திருந்த வைரப்புள்ளிக் கோலங்களை அலட்சியமாகத் தனது வெள்ளிய மேலாக்கால் அழித்தபடி உதயமகள் வந்தாள். புத்திளமையும் குதூகலிப்பும் அவளுக்குச் செம்மை பூசி விட்டன. புள்ளினம் சிரித்தன; பூக்குலம் சிரித்தன. உயிர்கள் உற்சாகம் பெற்றுக் கலகலப்பு அடைந்தன.

நிதான கதியிலே குதிரை மீது சென்ற இளம்வழுதியும் சாத்தன் கணபதியும் கூடச் சிரித்தார்கள். களங்கமற்ற, கவலையற்ற, சிரிப்பு அது

அவர்கள் குடிசையை விட்டு நீங்கி வெகுதூரம் வந்துவிட்டார்கள். இனி எவரும் பின் தொடர்ந்து வந்து தாக்க முடியாது என்று தோன்றியதுமே அவ்விருவரும் குதிரைகளின் ஓட்ட வேகத்தை மட்டுப்படுத்தினர்.

'கிழவன் உடல் வெளியே கிடந்தால் வழியோடு போவோரின் கவனத்தை இழுக்கும். அவர்கள் குடிலுக்குள் எட்டிப் பார்க்க நேரிடும். உள்ளே தென்படுகிற நிலைமை கலவரம் உண்டாக்கும். பலருக்கு வீண்வேலை கொடுக்கும். நமக்கும் இன்னல் விளைந்தாலும் விளையலாம். இதை எல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் அந்தப் பிணத்தை எடுத்து உள்ளே போட்டுவிட்டு, கதவை இழுத்துச் சாத்தினேன்' என்று சாத்தன் சொன்னான்.

"வருமுன் காக்கும் நின் பண்பு வாழ்க!" என்றான் வழுதி.

அதிலிருந்து இருவரும் பேச்சிலே இன்பம் காணலாயினர். "பேய்களாக மாறிய மனிதர்களைப் பற்றிச் சொல்வ

தாகக் கூறினுயே? மறந்துவிட்டாயா?'' என்று சாத்தன் கேட்டான்.

"மறக்க முடியுமா?'' என்ற வழுதி, துறவியும் அடியார்களும் நிகழ்த்திய கூட்டம் பற்றி விரிவாகவே சொன்னுன்.

"அந்த நேரத்தில் நீ ஆற்ரூரத்தில் அலேய நேர்ந்ததன் காரணம் என்ன? அது எனக்கு விளங்கவில்லேயே!'' என்ருன் தோழன்.

எனவே, இளம்வழுதி அந்திவேளே அநுபவம் பற்றியும் அவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசிய மாயிற்று.

முற்றும் கேட்டு முடித்த பின்னர் சாத்தன் சொன்னுன். "தேவரின் திருமகளுக்கு இளம்வழுதி பேரில் ஆசை ஏற்பட்டிருக்கிறது. அப்படித் தானே?''

"ஆசையாவது நேசமாவது!'' என்று அலட்சியத்தோடுகூறி, இலேசாக நகை உதிர்த்தான் வழுதி.

"இல்லேயென்ருல் அவள் ஏன் உனக்கு ஆர்வத்தோடு உதவி புரிய வேண்டும்? முதல் தடவை விட்டிற்கு வந்த அதிதிக்கு எதிர்பாராத விபத்து ஏற்படக்கூடாதே என்ற நல்லெண்ணத்தோடு அவள் உதவினுள் என்று சொல்லலாம். அது கூடத் தவறே யாகும் என்பது தான் என் கருத்து. அப்பொழுதே இந்த இளம் ஞாயிற்றின் ஒளியால் அவளது உள்ளத்தாமரை மலர்ச்சியுற்றிருக்கும். அங்கே அன்பு சுரந்திருக்கும். அதன் பயனுகத் தான் அவள் மீண்டும் உனக்கு—தனது தந்தையின் விரோதி என்பது அவளுக்குத் தெரியாமலா இருக்கும்?—உதவி செய்யத் துணிந்தாள். நீ அவள் மனசை அறிந்து கொள்ளத் தவறிவிட்டாயே!'' என்று பரிகசித்தான் சாத்தான்.

"நீ கவிஞுக வளரவேண்டியவன். தவறிப்போய்க் குதிரை விரனுகி விட்டாய்! உனது கனவுப்பறவை உல்லாசமாகச் சிறகடித்து மிதப்பது இனிமையாகத் தானிருக்கிறது'' என்று வழுதி சொன்னுன்.

"இல்லே வழுதி! நீ இதயமற்ற வறட்டு வீரனுக வாழக்கூடாது. அவள் முகத்தை நன்ருகப் பார்த்திருந்தால், அதில் நிகழும் மாற்றங்கள் உன்னிடம் கதை பேசியிருக்குமே! அவளுடைய கருவிழிகள் இன்பக் கவிதைகள் இசைத்திருக்குமே!...''

நண்பன் இப்படிச் சொல்லவும், வழுதி புன்னகையோடு குறும்புத்தனமாகக் கேட்டான், 'நண்பர் இந்த ரகசியங்களே எல்லாம் கற்றுக்கொள்வதற்குத் துணே புரிந்த குருபீடம் எங்கே இருக்கிறதோ?' என்று.

இதைக்கேட்டுத் தான் சாத்தன் கலகலவென நகைத்தான். "அது எனது சொந்த விஷயம். அதை நான் சொல்லமாட்டேன்'' என்ருன்.

"எனது சொந்த விஷயமும் வேறே ஆகும்'' என்று தோழனின் சுவைப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் வழுதி. ஆனுல் அவன் மனப்பறவை இனிய நினேவுகளிடையே சஞ்சரித்தது. கவிதை பேசும் கண்களும், இனிமை துடிக்கும் இதழ்களும், அழகு மலரும் முகமும் தென்பட்டன. அவையோ அமுதவல்லிக்குச் சொந்தமானவை!

அந்த முகத்தை இன்னும் நன்ருகப் பார்த்து மகிழ்ந்தோமில்லேயே; அஞ்சனம் தோய்ந்த அழகு விழிகளின் துடிப்பை மீண்டும் காணமாட்டோமா; இள நகை எழிலுருத்தும் பவள உதடுகளே இனி என்று கண்டு, ஒளிச்சிரிப்பால் மனம் மகிழ முடியுமோ?—இவ்வாறு அவன் உள்ளம் கவலேப்பட்டுக்கொண்டிருந்தது.

'என்னேக் கோபித்துக் கொண்டாயே! காதலியின் நினேவு உன்னே வதை செய்கிறது என்பது புரிந்துவிட்டது. வீணுக நீ அதை மறைப்பானேன்?'' என்ருன் சாத்தன்.

வழுதி பதில் பேசவில்லே. பொருள் பொதிந்த முறுவலே பூத்தான்

'சரி. இனி நமது கடமைகளேக் கவனிப்போம். மாறன்காரி என்பவரிடம் உன்னே அழைத்துச் செல்லும்படி பிராட்டியார் எனக்குக் கட்டளே யிட்டார்கள் அவருக்கு நீ தரவேண்டிய திருமுகம் இதோ இருக்கிறது. நான் உன்னே அவருக்கு அறிமுகம் செய்துவிட்டு, இங்கிருந்து நீங்கவேண்டும். எனக்குச் சில முக்கிய அலுவல்கள் இருக்கின்றன. மூன்று நாட்களுக்குப் பிறகு நான் இங்கு வருவேன். அது வரை நீ இங்கேயே இருந்தால் நாம் சந்திப்போம். மாறன்காரி வேறு வழி வகுத்துக் காட்டினுல், நீ எனக்காகக் காத்திருக்க வேண்டாம்' என்ருன் சாத்தன் கணபதி.

2. வேண்டாத விருந்தாளி

விடிந்தும் விடியா வெள்ளிளம் போதிலே ஒருவர் முன் போய் நிற்க வேண்டாமே என்ற நல்லெண்ணத்தோடு, இளம்வழுதியும் சாத்தனும் வசதியான இடமொன்றில் காலை உணவு உட்கொண்டு விட்டுச் சிறிது தங்கியிருந்து களைப்பாறினர்.

அவர்கள் தேடி வந்த சமயத்தில் மாறன்காரி உண்டு மகிழ்ந்து சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார். இருவரும் அவரை வணங்கி நின்றனர். 'மதுரையிலிருந்து வருகிறோம். இவர் என் நண்பர்- இளம்வழுதி' என்று அறிவித்தான் சாத்தன். அவனை அவர் முன்பே அறிந்திருந்தார்.

புதிதாக வந்தவர்களைக் கண்டதுமே, காரியோடு பேசிக் கொண்டிருந்தவர்கள் விடைபெற்று வெளியேறினார்கள்.

'மதுரையிலிருந்தா? ஹூங்!' என்று இழுத்தார் பெரியவர். இளம்வழுதி அவரை அவருக்குத் தெரியாமலே எடை போட்டுக் கொண்டிருந்தான்.

குறுநில மன்னர் போல் மிடுக்காக வாழ்ந்தவர் மாறன்காரி. கவலையற்று வளர்ந்த உடல். கட்டளையிட்டுக் கனமேறி விட்ட குரல். முன் வளைந்த, நீண்ட கூர்மையான மூக்கு. கழுகுக் கண்கள். அவர் விரும்பும் போது, காக்கைப்பார்வையும் அங்கே வந்து சேரும். எதையும் எவரையும் நையாண்டி செய்வது போல் சுளிக்கும் உதடுகள். திட்டமிடும் மூளையின் வளத்தைக் காட்டும் அகன்ற நெற்றி. உலகையே அலட்சியமாகக் கருதும் ஒரு தோற்றம்.

இவற்றை ஆராய்ந்த வழுதியின் மனம், 'இவரை நம்பிப் பயனில்லை என்றே தோன்றுகிறது' என்று முணுமுணுத்தது.

வெகு நேரம் வரை 'உட்காருங்கள்!' என்று சொல்லவும் மனமில்லாதவர் போல் அவ்விருவரையும் நோக்கிய காரி, மெதுவாக 'ஏன் நிற்கிறீர்கள்? இருங்கள்' என்றார்.

'நான் போக வேண்டும். வழுதி இங்கு இருப்பார். மங்கையர்க்கரசிப் பிராட்டி தங்களுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்' என்றான் கணபதி.

இளம்வழுதி திருமுகத்தை அவரிடம் தந்தான். அதை வாங்கிக் கண்களை ஓட்டிய காரி, வாசித்து முடித்ததும், வழுதியை மேலும் கீழும் உற்று நோக்கினார். பார்வையைச் சாத்தன் மீது உற்று நோக்கினார். 'உம். நீ போகிறாயாக்கும்?' என்றார்.

'ஆமாம். முக்கிய அலுவல்கள் உள்ளன' என்று கூறினான்.

'உணவு உண்டு செல்லாமே?' என உபசரித்தார் அவர். அவன் பணிவுடன் மறுத்துவிட்டு, விடைபெற்றுச் சென்றான்.

மாறன்காரி இளம்வழுதியின் மேல் 'காக்கை நோக்கு' ஏவினார். அவர் புன்முறுவல் புரிந்தாரோ, புரியவில்லையோ என்று ஐயுறும் விதத்தில் அவரது உதடுகளில் சிறு அசைவு கோடிட்டது. 'செவ்விருக்கை நாட்டுப் பெரும்வழுதி வழி வந்தவனா நீ? உம்' என்று மென்குரலில் பேசினார் அவர். 'ஆமாம். பாண்டியர்கள் வாழ்ந்த வாழ்வு பழங்கதையாகி விட்டது. ஆளவேண்டியவர்கள் அடிமைகள் ஆகிவிட்டார்கள். அச்சம் அவர்களைச் செயலற்றவர்களாகி விட்டது. அரியணை ஏறத் தகாதவர்கள் கோல் பிடித்து விட்டார்கள். நாடு பாழாகிவிட்டது' என்றான். வழுதி எதிர்பாராதபோது, 'அதற்கு நீ என்ன வேண்டுமென்கிறாய்?' என்று உறுமினார் அவர்.

அவன் திடுக்கிட்டான். அவனது திகைப்பைக் கண்டு மகிழ்வுற்றார் அவர்.

இளம்வழுதி வரகுணத்தேவரிடம் ஒரு நாள் உவகைப் பெருக்குடனும் உணர்வுத் துடிப்போடும் பேசத் துணிந்தது போலவே, காரியிடமும் தனது எண்ணங்களைத் தெரிவிக்க முன்வந்தான். நாட்டு நிலை பற்றியும், மதுரையில் நிகழ்ந்தன பற்றியும் எடுத்துச் சொன்னான். தன் தாயின் ஆசைகள் பற்றிச் சொன்னான்.

'அன்னையின் ஆசைகள் என்றுமே பெரியன. அவற்றுக்கு அளவு இருக்கவே முடியாது!' என்றார் பெரியவர்.

என்ன கருத்தில் அவர் அவ்வாறு பேசினார் என்று அறிய முயல்பவன் போல் வழுதி, காரியின் முகத்தை நோக்கினான். அது வெண்கலத்தில் வார்த்தெடுத்த சிலை மாதிரி மினுமினுத்தது. அதிலிருந்து அவன் எதையும் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

'உம் சொல்லு!' என்றார் காரி. அவர் பேசினாரோ, பேசவில்லையோ என்று ஐயுறச் செய்வதாக அமைந்தது அவ்வொலி.

அவன் தனது எண்ணங்கள், ஏக்கங்கள் பற்றிப் பேசினான்.

'இளைஞனின் கனவுகள் என்றுமே உணர்வு மயமானவை தான்!' என்றார் அவர்.

மீண்டும் அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான் வழுதி. அவனால் புரிந்து கொள்ள முடியாத புதிராகத்தான் இருந்தது அது.

அவன் மாமூலனார் பற்றியும், அவருடைய அறிவுரைகள் பற்றியும் சொன்னான்.

'ஆலோசனைகள் கூறவும், பிறரைத் தூண்டிவிடவும் அறிஞர்கள் என்றுமே தயங்கமாட்டார்கள்' என்றார் காரி.

உள்ளத்தின் கருத்தை வெளிச்சமிட்டுக் காட்டும் சாளரமாகிற கண்கள் மூலம் ஏதாவது அறிய முடியுமா என ஆவலாக முயன்றான் வழுதி. பாதி மூடியும் மூடாமலும் காட்சி தந்த கண்கள் ஆழம் காண முடியாத கருங்குட்டைகள் போல் சலனமற்றிருந்தன.

மங்கையர்க்கரசி பற்றியும் அவள் அளித்த நம்பிக்கை பற்றியும் சொன்னான் அவன்.

பேச விரும்பாத சிலையாக இருந்தார் மாறன்காரி.

'உங்களால் எனக்கு உதவி எதுவும் செய்ய முடியாது. இல்லையா?' என்று பொறுமையிழந்து, கேட்டுவிட்டான் வழுதி.

'அப்படி நான் சொன்னேனா?' என்றார் பெரியவர்.

அதற்கு என்ன பதிலளிப்பது என்று தெரியாதவனாய் அமர்ந்திருந்தான் இளம்வழுதி.

'மங்கையர்க்கரசியை உனக்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும்?' என்று அவர் வினவினார்.

அவர் நையாண்டி பண்ணுவது போல் சிரித்த மாதிரித் தோன்றியது அவனுக்கு. மறுபடியும் கவனமாகப் பார்த்தபோது, உணர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டாத சிலைபோல் தான் காட்சி தந்தது அவர் முகம்.

'அச்சுறுத்தும் நாட்கள் தான். அவலமான நிலைமைதான்' என்றார் அவர். சிறிது நேரம் மௌனமாக இருந்தார். திடீரென்று, 'நீங்கள் இரண்டு பேரும் வட பறம்புநாட்டுக்கு எப்போது வந்தீர்கள்? எப்படி வந்து சேர்ந்தீர்கள்?' என்று கேட்டார்.

மாறன்காரியின் இடப் பெயரைச் அவன் அப்பொழுதுதான் அறிந்து கொண்டான். அவர் பெயரைச் சொன்ன சாத்தன்கணபதி அந்த நாட்டின் பெயரைச் சொல்ல மறந்து விட்டான் என்பதை அவன் அப்பொழுதே உணர்ந்தான். எனினும் அதை வெளியிடவில்லை. தங்களுடைய இரவுப் பயணம் பற்றி அவன் விவரித்தான்.

இளம்வழுதி கூறிமுடித்ததும், 'முதலில் உனக்கு ஓய்வும் தூக்கமும் தான் தேவை. நீராடி, உணவு உட்கொண்ட பிறகு, அமைதியான இடத்தில் படுத்து, நன்றாகத் தூங்கு. நான் செய்யும் முதல் உதவி இது' என்றார் காரி. குறும்புத்தனமான சிறு முறுவல் அவரது வாயோரத்தில் சுழியிட்டதுபோல் தோன்றியது. நிச்சயமாகத் தீர்மானிக்க இயலவில்லை அவனால்.

மாறன்காரி நம்பத்தகுந்தவராகத் தோன்றவில்லை என்று அவன் மனம் மீண்டும் முனகியது. இங்கே வருவதற்கு முன்னரே, இப்பிரயாணத்தினால் எவ்வித நன்மையும் ஏற்படாது என்ற எண்ணம் எழுந்தது. தவறாத குறியாகவே முடியும் போலும் என்று கருதினான் அவன். 'உதவி கோரி வந்தாயிற்று. முடிவாக அவர் கருத்தை அறியும் வரை இங்கே இருந்துதானே ஆக வேண்டும்? அவர் சொல்கிறபடி நடந்து தானே தீரவேண்டும்?' என்றும் அவன் நினைத்தான்.

குளிப்பதற்கு வேண்டிய வசதிகள் அவனுக்குச் செய்து தரப்பட்டன. அறுசுவை உண்டியும் கிடைத்தது. மீண்டும் அவனது ஆசைகள், கனவுகள் பற்றி எல்லாம் பேசுவதற்கும் வாய்ப்பு கிட்டியது. அவன் கூறியதைக் கேட்டிருந்த காரி தமது கருத்து எதையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவேயில்லை.

இளம்வழுதி அமைதியாக உறங்குவதற்கு ஏற்ற தனியிடத்தைக் காட்டும்படி ஒரு ஆளை ஏவினார் அவர். விசாலமான தோட்டத்தின் ஒரு மூலையில் ஒதுங்கி நின்ற தனிக்கட்டிடத்தில் வசதிகள் நிறைந்த ஓர் அறையைச் சேர்ந்தான் வழுதி. தூக்கம் அவனுக்குத் தேவையாகத் தானிருந்தது. 'உண்ட கிறக்கமும்' தூண்டியது. ஆகவே, படுக்கையில் சாய்ந்ததும் அவன் சுகமான துயிலில் ஆழ்ந்தான்.

இளம்வழுதி கண்விழித்தபோது, தான் வெகு நேரம் தூங்கியிருக்க வேண்டும் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அன்று பொழுது வீணாகி விட்டதுபோன்ற வருத்தம் அவன்

ள்ளத்தை அழுத்தியது. மாறன் ரிமைமீண்டும் கண்டு பேசி, அவரிடமிருந்து தெளிவான பதிலை உடனடியாகப் பெற்றாக வேண்டும்; அவரால் எவ்வித உதவியும் கிட்டாது என்று விளங்கிவிடுமானால் மேலும் வீண் பொழுது போக்காமல் அங்கிருந்து கிளம்பிவிடவேண்டியது தான்; இரவாகிவிடுமே என்று கவலைப்பட்டுப் பயனில்லை' என்று முடிவு செய்தான்.

ஆனால் எதிர்பாராத அதிர்ச்சி அவனுக்காகக் காத்திருந்தது.

அவன் எழுந்து நின்று சோம்பல் முறித்துவிட்டுச் சாளரத்தின் வழியே வெளியே நோக்கியபடி நின்றான். ஒரு தட்டிலிருந்த பழங்களில் ஒன்றை எடுத்துக் கடித்துச் சுவைத்தான். பிறகு உடையைச் சரிப்படுத்திக்கொண்டு, கதவைத் திறப்பதற்காகச் சென்றான். அவனது கை எவ்வளவு இழுத்து முயன்றபோதிலும், கதவும் திறந்து கொள்வதாயில்லை.

அவன் தட்டினான். இடித்தான். வலுவோடு இழுத்தான். ஈ...கூங்!—அடைபட்ட கதவு அடைத்தபடியே கிடந்தது. தவறுதலாக உட்புறத் தாழ்ப்பாள் எதுவும் விழுந்து தடையாக முரண்டிக் கிடக்கும் என்பதற்கில்லை. அவன் கண்கள் பலமுறை இதை உறுதிப்படுத்தி விட்டன. அவன் தன் முழு பலத்தோடு கதவை உலுக்கினான். வலுமிக்க இரட்டைக் கதவு அது. கதவின் இரு பகுதிகளையும் குலுக்கி இழுத்தான்.

உண்மை உறைத்தது. சூடாக இதயத்தைத் தாக்கியது. ஆமாம். கதவு வெளியே பலமாகப் பூட்டப்பட்டிருந்தது. அப்படியென்றால்? இதன் அர்த்தம்தான் என்ன? நல்லவர்போல் நடித்த மாறன்காரி நயவஞ்சகன்தானா? நம்பிக்கைத் துரோகிதானா? விருந்தாளி என்று உபசரித்துத் தன்னைச் சிறைபடுத்துவதுதான் அவர் நோக்கமோ?

'அதே தான்! அவரை நம்புவதற்கில்லை என்று உள்ளம் குறுகுறுத்தது உண்மையாகிவிட்டதே!' என்று பதை பதைத்தான் வழுதி.

கதவுடன் போராடிப் பயனில்லை; கூச்சலிட்டும் பயனில்லை என்றுஅறிந்து கொண்டதும்,அவன் மனம் வெதும்பியவனாய், உணர்வுக் கொதிப்புற்றவனாய், அப்படியே உட்கார்ந்து விட்டான்.

(வளரும்)



பிரபல சினிமாத் தயாரிப்பாளர் ஸ்ரீ பி. நாகிரெட்டியின் குமாரன் சிரஞ்சீவி வேணுகோபாலுக்கும், விஜயா புரொடக்ஷன்ஸ் டைரக்டர் ஸ்ரீ பி. ரமண ரெட்டி குமாரி சௌ. பத்மாவதிக்கும் கோடம்பாக்கம் விஜயா தோட்டத்'தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. கவர்னர் மேதி, ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி போன்ற பிரபலஸ்தர்கள் வந்திருந்து வாழ்த்துக் கூறினர்.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணுடி சாமான்கள், பீங்கான், எனுமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4 EVENING BAZAR .... P.T. MADRAS

BAROOL

கிளை ஆபீஸ் : 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்—3.
7, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.



என்னடி உன்போக்கு

செவ்வல்லி இளமொட்டா? கொழுந்தாடைக் கரும்போ?
சீர்பெறாத ஓவியமா? நீ சிறுமி ஆமோ?
ஒவ்வொருநாள் ஒவ்வொருபோழ்(து) ஒவ்வொருஇ ராவும்
உன்னுடைத் தோழியுடன் என்னழகைப் பற்றி
எவ்வளவோ பேசுகின்றாய்; என்வரவைக் கண்டால்
இல்லத்துள் மறைகின்றாய்; கண்ணேறுவந் திடுமோ?
ஒவ்வாதே சற்றேனும் உன்போக்கு பெண்ணே!
உழுதசேற்று வயல்காய்தல் இங்குத்தான் கண்டேன்!

பழுக்காத காய்ப்பலாவா? அரைக்காச்சந் தனமா?
பாடாத குயிற்குஞ்சா? நீசிறுமி ஆமோ?
அழகான இளஞ்சிறுமி உன்தங்கை தன்னை
அழைத்தழைத்தே அவளிடத்தில் என்அன்பைப் பற்றி
விழைவோடு பேசுகின்றாய்; என்வரவைக் கண்டால்
வீட்டுக்குள் மறைகின்றாய், கண்ணேறுவந் திடுமோ?
ஒழுங்காமோ சற்றேனும் உன்போக்கு பெண்ணே?
ஓடும்நதி தேங்குவதை இங்குத்தான் கண்டேன்!

முற்றாத பிறைநிலவா? பாயாமான் கன்றா?
முடிவுபெறாப் பொற்சிலையா? நீசிறுமி ஆமோ?
பெற்றெடுத்த அன்னையிடம் என்வீரம் பற்றிப்
பேசுகின்றாய்; புகழ்கின்றாய்; வாழ்த்துகின்றாய் என்னை!
பொற்கொடியே! என்வரவைக் கண்டாலோ, ஓடிப்
போய்வீட்டினுள் மறைகின்றாய்; கண்ணேறுவந் திடுமோ?
சற்றேனும் பொருந்தாதே உன்போக்கு பெண்ணே!
சங்கீதயாழ் பாடாததை இங்குத்தான் கண்டேன்!

"கயல்விழி"

"உம்..."

"என்னா சொல்றே? பொறைக்கு நாலு நாளுதானே இருக்குது."

"எங்கப்பாரைக் கேளேன்..."

"அவரு கத்தி முனையிலே வந்து கேளுடான்னு குதிக்கிறாரே!"

"அப்படின்னா ..?"

"உன் மனசு தெரிஞ்சுதுன்னா..."

"உம்...மேலே..."

"என்னைக் கட்டிக்கப் பிடிக்கலேன்னா சொல்லிடு. இந்தக் குப்பத்தை விட்டே மறைஞ்சுடறேன்...கயல்விழி..."

"பிடிக்கலை..."

"உண்மையாவா, கயல்விழி..."

"....."

"சொல்லு, உண்மையாவா?"

"எங்கப்பாருக்குப் பிடிக்கலை..."

"அப்போ உனக்கு...?"

"கயல்விழி. பொறைக்கு நாலு நாளுதான் இருக்குது. அதுக்குள் ளாற அந்தப் பயலை இல்லாமப் பண்ணிடறேன்..."

"ஐயோ வேண்டாம் அத்தான்—அவருமேலே உங்களுக்கு என்ன அம்மாம் கோவம்?"

"கோவமா? ரெண்டு காசு சேத்துக் கிட்டுத்தானே அந்தப் பய உங்கப்பாவையும் தென்னகிட்டி வைச்சிருக் கான்..."

"நீயும் சேர்க்கிறதுதானே?"

"நானா...?"

"ஆமாம். உனக்குக் குடி இருக் கிறவரைக்கும் எங்கே சேர்க்கப் போறே?"

"உன்னைக் கட்டிக் கிட்டதும், விட்டு டறேன், கயல்விழி!"

"அடடா! அதோ, அப்பாரு...கடல் லேருந்து திரும்பிட்டாரு..."

"வந்துட்டாரா? அப்போ நான் வர் றேன் ..."

அடுத்த நிமிஷம் காதல் பிச்சை கேட்ட அந்த ஆடவன் அங்கே நிற்க வில்லை. பயந்தடித்துக் கொண்டு ஓடும் அந்த 'அத்தானை'க் கண்டு உள்ளூறச் சிரித்துக் கொண்டாள் கயல்விழி.

கையில் வலையுடனும் பையுடனும் வந்த எசக்கியப்பன் பெண்ணை எரித்து விடுவது போலப் பார்த்தான். தகப் பன் கையிலிருந்த சாமான்களை ஓடிப் போய் வாங்கினாள் கயல்விழி.

"இம்...அப்படியே நில்லு! எம்மாந் நாளா இந்தத் தொழில்? அந்தப் பய இங்கே எதுக்கு வந்தான்? நீ ஏன் அவனை உள்ளாற விட்டே? ஏன் பேசி னே? இம்...சொல்லு" என்று வலையில் சிக்கிக் கொண்ட மீன் போலத் துடித் தான் எசக்கியப்பன்.

"ஏம்பா, இப்படி? நானா அவரை வரச் சொன்னேன்? 'மாமாவைப் பார்க்க வந்தேன். என்னா திட்டினாலும் அடித்தாலும் என் மாமா தானே! நான் வர்றதை யாரும் தடுக்க முடியாது'ன்னு சொல்லிக்கிட்டே வர்றாரு....,போன்னா லும்..."

கட்டழகியொருத்திக்காகக் கடலிலே கட்டிப் புரண்டார்கள் இருவர்! அழகி கிடைத்தாள் அதிர்ஷ்டசாலிக்கு!

''ஓகோ, அப்படியா? சொந்தம் கொண்டாடிக்கிட்டு வர்றானு, அயோக்கியப்பய.. இருக்கட்டும்...'' வலையை அப்படியே போட்டுவிட்டு, வேகமாக வெளியில் நடந்தான் எசக்கியப்பன்.

வலையில் இருந்த மீனை எல்லாம் வெளியில் எடுத்துக் கொண்டே கயல்விழி சிந்தனையில் ஆழ்ந்தாள். கோபத்துடன் செல்லும் தகப்பனார் எங்கே போவார் என்பதும் அவளுக்குத் தெரியும். அந்த முத்தாரப்பன் வீட்டுக்குத்தான். போய் ஒரு குரல் அழுவாரு. அவன் ஆறுதலாக வார்த்தைகளைச் சொன்னதும் திரும்பி வந்து விடுவார். நேராக அத்தானிடம் போய்ப் பேச அவருக்கும் தைரியம் கிடையாது...அவரைவிடப் பயந்தாங்கொள்ளி அந்த அத்தான்.

* * *

''வாங்க, மாமா!'' என்று வரவேற்றான் முத்தாரப்பன்.

''இந்தாப்பா! என் மானத்தைக் காப்பாத்து. அந்தப் பய...''

''யாரு, உங்க தங்கச்சி பிள்ளை பொன்னுரங்கம் தானே! கிடக்கிறான், மாமா! அறியாப் பய. இன்னும் எண்ணி நாலு நாள்...அப்புறம் சும்மா வாலைச் சுருட்டிகிட்டுக் கிடக்கிறான்...'' என்று எடுத்ததுமே அவர் வாயை அடக்கினான் முத்தாரப்பன்.

''அது பாவம்—முத்து, எனக்குப் பேசவே முடியவில்லை—பொறை வந்துடுத்து—சொன்னபடி ஏதாவது ஏற்பாடு செய்ய வாண்டாமா?'' என்று கேட்டான் எசக்கியப்பன்.

''நன்னா கேட்டிங்க, போங்க; ஏற்பாடு எல்லாம் ஜரூரா நடக்குதுங்கறேன். கயல்விழிக்குப் புடவைகூட எடுத்துட்டேன். இதோ, பாருங்கோ!'' என்று உள்ளே போய் எடுத்து வந்து காட்டினான்.

எசக்கியப்பன் அதை வாங்கிப் பார்த்துவிட்டுத் திருப்தியடைந்தவராய்,

''ஆண்டவன் புண்ணியத்திலே காரியம் முடிஞ்சுடணும். அந்தபொன்னுரங்கம் கலாட்டா செய்யாம இருக்கணும்.''

செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் எழுந்த தில்லை. காரணம் நாலுகிளாஸ் படித்த மோக்களாவில் அவன், இளமையில் குப்பத்து வாழ்க்கை பிடிக்காமல் ஓடிப் போய்விட்டான். எங்கெங்கோ அலைந்து திரிந்து அல்லாடிவிட்டு, ஒரு வருஷம் முன்னுடிதான் மாமனைத் தேடி வந்தான். எசக்கியப்பனும் அவன் இளமைத் தவறுகளை எல்லாம் மன்னித்து, வீட்டிலே வைத்துக் கொண்டான். நிதம் ராஜா மாதிரி வேளாவேளைக்குச் சாப்பிட்டுவிட்டு, ஹாய்யாகச் சுற்றிய பொன்னுரங் கத்தை எசக்கியப்பன், "தம்பி, இப்படி சுத்தினு வயிற்றுக்கு என்னு செய்கிறது? உனக்கா தெரியும்னு சும்மா இருந் தேன். எனக்கும் வயசாயிடுச்சு. நீ கடல்லே போயிட்டு வா!" என்று கூறினன். பொன்னுரங்கம் வாயி லிருந்து சுருட்டை எடுத்து, புகையைக் 'குபு, குபு, குபு,' வென்று விட்டான்.

"மாமா, என்னுல் துடிப்பு எல்லாம் வலிக்க முடியாது. தோள் விட்டும் போயிடும். வேற ஏதாவது தொழில் செய்யலாம்னு யோசிச்சுக் கிட்டிருக்கேன். கடல்லே போய் வான்னு மட்டும் இனிமே எங்கிட்டே பேசாதிங்க!" என்றுன் கண்டிப்பாக.

"பரம்பரைத் தொழில்லே இறங் கறதுதான் நல்லது, தம்பி. சொல்ற தைக் கேளு."

"நான் சொல்றதைத்தான் கேளுங் களேன்—"

"நேத்துப் பய; நீ சொல்றதை நான் கேட்கிறதா? மரியாதை மட்டு வேண்டும்டா?"

"அதனுலதான் பார்க்கிறேன்—"

"ஏய்—"

"சும்மா நிறுத்துங்க! நான் வர்றேன். எனக்குச் சம்பாதிச்சு சாப்பிடத் தெரி யும்."

அப்படிச் சொல்லிவிட்டுக் கிளம்பிய நேரம் வரையில், கயல்விழி அவன் கண்களுக்கு ரம்பையாக, ஊர்வசியாகத் தோன்றவில்லையோ, முறைப் பெண் என்ற ரோஷம் பிறக்கவில்லையோ, தெரியவில்லை. அவள் சமைத்துப் போட்ட ஆகாரத்தை 'அமிர்தம்' என்று ருசித்துக்கூடச் சாப்பிடவில்லை அவன். வேண்டா வெறுப்பாகத்தான் சாப்பிட் டுத் தொலைத்தான். அதனுல் எல்லாம் கயல்விழியும் தன் அத்தான் பேரிலே உயிரை வைக்கவில்லை, அவன் வீட்டைவிட்டுப் போன பிறகும் அவள் உள்ளம் நன்றுகவே இருந்தது.

எசக்கியப்பன் 'விட்டது சனியன்' என்று எண்ணி, கயல்விழியின் அழ கைப் பணயமாக்கி, பணக்கார முத்தா ரப்பனைத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளச் செய்தான். முத்தாரப்பன் பணக்காரனே தவிர, சுத்த அசடு, முட் டாள். எப்படி இருந்தால் என்ன? பணம் போதாதா? தகப்பனின் இந்தப் போக்கைக் கயல் விழியும் ஒப்புக் கொண்டாள்.

விஷயம் வெளியான ஒரு வாரத்திற் கெல்லாம், ஒரு நாள் மத்தியான்னம் பொன்னுரங்கம் ஓடோடியும் வந்தான். கயல்விழியிடம், 'தான் தன் முறைப் பையன். தன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்' என்று கூறினன். கயல்விழி கெட்டிக்காரி. அவனிடம் பகைத்துக் கொள்ளவில்லை. 'எதையும் அப்பாவை வந்து கேள்' என்று கூறி அனுப்பினுள். பொன்னு ரங்கம் மாமாவைக் கேட்டபோதுதான், கத்தி முனையில் சந்திப்பதாக அவர்கூறி விட்டார். கல்யாணம் முடியும் வரையில் பொன்னுரங்கத்திடம் மிகவும் நாசூக் காகச் சண்டையும் போடாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி யிருந்தார். கயல்விழிக்கும் இது தெரி யும். அதனுல்தான் பொன்னுரங்கத்தி டம் கயல் விழி உன்னை மணக்க இஷ்ட மில்லை' என்று நேரடியாகச் சொல் லாமல் பேசினுள்.

போறைக்கு முதல் நாள். கடற் கரையில் அவர்கள் வழக்கப்படி ஒரு புதுமரம் நட்டு, மேடையும் போட்டிருந் தார்கள். இரவு திருமணம் நடக்க வேண்டும். இரவு பௌர்ணமி நிலவில் தான் விவாகச் சடங்குகள் எல்லாம். துணிமணிகள் எல்லாம் எடுத்துத் தயாராக இருந்தன. எசக்கியப்பன் வாயில் ஈ புகுந்தது கூடத்தெரியாமல் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான். அத்துடன் இரண்டு மூன்று நாட்க ளாகப் பொன்னுரங்கம் வந்து தொந் தரவு கொடுக்காதது, அவர்களுக்கு நிம்மதியாக இருந்தது.

காலையிலேயே எசக்கியப்பன், முத்தாரப்பன் தோணியிலே கிளம்பிய பொழுது ஆசிகள் அளித்து அனுப்பி வைத்தான். 'சாயந்தரம் முன்னதாகவே வந்துவிடு' என்றும் கூறியிருந்தான். முத்தாரப்பன் தன்னுடன் இரண்டு சிறு பையன்களையும் அழைத்துப் போயிருந்தான்.

பணம் இருந்தால், அழகான கட்டமைந்த உடல் பெற்ற பெண் கிடைத்து விடுமா? முத்தாரப்பனுக்கு உள்ளுக்குள் ஒரே சந்தோஷம். காலையில் கிளம்பும்போது, தற்செயலாகக் கயல்விழியை வேறு பார்த்திருந்தான். அவள் இன்னும் சில மணி நேரங்களில் தனக்கு உரியவளாகப் போகிறாள். அப்புறம்...அப்புறம்...அவனோடேயே எப்பொழுதும்.. அடடா! என்ன அழகு! சுருண்டு எழுந்த கடல் அலைகள்போல் அவன் மனத்தில் இன்பஅலைகள் அடுக்கடுக்காக எழுந்தன. இந்த இன்ப அலைகளின் வேகம் அதிகமாக ஆக அவன் உள்ளம் தேவலோகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கியது.

வலையை வீசிக்கொண்டே போனான். கொஞ்சங் கொஞ்சமாக அவன் படகு நிறைந்து வந்தது. ஆனால் அவன் எதிர்பார்த்தபடி பெரிய விரால் மீன் கிடைக்கவில்லை. விரால் வால் சூப் மிகவும் ருசியாயிருக்கும்...கயல்விழிக்குக் கொடுக்க வேண்டாமா?

மனம் அலைந்தது போலவே படகும் அலைந்தது. போய்க்கொண்டே இருந்தான். ஓரளவுக்கு நிதம் போகும் தூரத்தைக் கூடத் தாண்டிவிட்டான்.

அப்பொழுது...

எதிரில் ஒரு படகு வெகு வேகமாக வந்தது. முத்தாரப்பன் படகில் இருந்த சிறுவர்கள், "அண்ணே அண்ணே! அதோ பாரு! அது வர்ற வேகத்தை நம்ம படகில் இடித்து விடும் போல இருக்கிறதே!" என்று கத்தினர்.

முத்தாரப்பன் கவனித்தான்.

பொன்னுரங்கம் வேகமாகப் படகை வலித்துக் கொண்டு வந்தான். அவன் வந்த வேகம், மீன் பிடிப்பதற்காக வந்திருப்பதாகவே தோன்றவில்லை.

முத்தாரப்பனும் வேகமாகத் தன் படகைத் திருப்பினான் நடுக்கடலில் அவனுடன் சண்டை சச்சரவு எதற்கு என்று நினைத்தான். ஆனால்...?

பொன்னுரங்கம் அருகில் வந்து விட்டான். மீன் பிடிக்க வீசவேண்டிய வலையை முட்டுக்கட்டையில் நின்றபடி எட்டி வீசினான். முத்தாரப்பன் மேல் கவிழ்ந்து விழுந்தது வலை.

"ஏய், என் முறைப் பெண்ணைக் கட்டிக்கத் திட்டம் போட்டியே! இதோ பாரு, விரால் வாலை முறிக்கறாப்பல உன் கழுத்தை இப்போ, இங்கேயே என்ன செய்கிறேன் பார்!" என்று இரைந்து கத்திக்கொண்டே வலையை இழுத்தான்.

முத்தாரப்பன் முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை. சிறுவர்கள் ஓஹோ வென்று கத்தினர். பொன்னுரங்கம் இழுத்த இழுப்பில், முத்தாரப்பன் அப்படியே கடலில் சாய்ந்தான். சிறுவர்கள், அதுதான் சமயம், தாங்கள் தப்பித்தால் போதும் என்று எண்ணி,

"நம்ப 'முன்னூற்றுப் பத்து' அதிர்ஷ்டக்காரி தான்...!"

"ஏன், என்ன அதிர்ஷ்டம் அவளுக்கு?"

"சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவளைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறுராம்!"

இரண்டே எட்டில் படகை வலித்துக் கொண்டு ஓடினுர்கள். ஆனல், பொன்னுரங்கம் அவர்களை விடாமல் பயமுறுத்தி அவர்களிடம் ஏதோ கூறினுன். தன் சராயிலிருந்து எதையோ எடுத்து அவர்களிடம் கொடுத்தான். சிறுவர்களும் சந்தோஷத்துடன், "அப்படியே செய்கிறேம்" என்று கூறித் திரும்பினர்.

பொன்னுரங்கம் இப்படிக் கொஞ்ச நேரம் இருந்ததால் கடலில் விழுந்த முத்தாரப்பனைக் கடலலைகள் சுருட்டி இழுத்தஇழுப்பில்,வலையையும்சுருட்டிக் கொண்டு போயேவிட்டான். அந்த அவசர நெருக்கடியில் பொன்னுரங்கம் வலைக் கயிரையும் விட்டுவிட்டான். முத்தாரப்பனை இரண்டுமூன்று தடவை அலையின் அரவணைப்பில் வெவ்வேறு இடங்களில் பார்த்தான். அப்புறம் அவனைப் பார்க்கவே முடியவில்லை.

பொன்னுரங்கம் முடிந்தவரையில் முத்தாரப்பனைத் தேடினுன்; கிடைக்கவில்லை. வலையின் இடுக்குகளில் மாட்டிக் கொண்டு அலைகளில் அலைப் புண்ட அவனுல் உயிர் வாழ முடியாது என்ற நினைப்பில் பொன்னுரங்கம் திரும்பினுன்.

முத்தாரப்பனை எதிர்பார்த்து நின்ற கூட்டத்தின்பக்கத்திலே அந்த இரண்டு சிறுவர்களும் நிற்பதைத் தூரத்திலேயே கவனித்தான் பொன்னுரங்கம். படகிலிருந்து, இறங்கி வேறு உடுப்பு உடுத்திக்கொண்டு நோட்டம் விட்ட வாறு அந்தப் பக்கம் வந்தான். பையன்கள் என்ன செய்திருக்கிறுர்கள் என்ற சாக்கில் அருகில் போய்ப் பார்த்தான்.

எசக்கியப்பன் உருக்குலைந்து உட்கார்ந்திருந்தான். கயல்விழியைத் தேற்றிக் கொண்டு இரண்டு மூன்று பெண்கள் கடற்கரையில் பனைமரத்தடியில் உட்கார்ந்திருந்தனர். தன்னைக் கண்டதும் யாரும் கத்தி ஆர்ப்பாட்டம் செய்யாததால் பொன்னுரங்கம் தைரியமாகப் போனுன். பெரியவர் ஒருவரைப் பார்த்து விசாரித்தான்.

"போனவன் திரும்பலே, அப்பா! இன்னிக்குக் கண்ணுலம் வச்சிருந்தது. ஆனல், திடீரென்று வலிப்பு மாதிரி வந்து, கடல்லே விழுந்துட்டானும். இந்தப்பயலுக வந்து சொல்ருங்க. உங்க மாமா பாவம்—" என்ருர். பதறியவன்போல நடித்தான், பொன்னுரங்கம். மாமாவிடம் போய் அடக்க வொடுக்கமாக, அவர் துக்கத்தில் பங்குகொண்டு பேசக்கூட முடியாதவன் போல் நின்ருன்.

பொழுது போய்க் கொண்டிருந்தது. பௌர்ணமி நிலவு கடலிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தது. அதுதான் திருமண சமயம். 'பணத்தாசை கொண்டு, சொந்த தங்கை மகளை அலட்சியப் படுத்தியதுதான் தப்போ என்னவோ' என்று எசக்கியப்பன் நினைக்கிற வேளையில் பெரியவர் சொன்னுர்.

"எசக்கி, சும்மா போட்டு மனசைக் குழப்பிக்காதே! தெய்வம் இப்படித்தான் நடக்கணும்னு நினைச்சிருக்கு. பேசாம உன் மருமவப் பிள்ளைக்கே கொடுத்துவிடு. நேரம் ஆவுது— எழுந்திரு—!"

இதைத் தொடர்ந்து வயதான பெண்கள் சிலரும் கூறினுர்கள். மரம் மாதிரி நின்ருன் பொன்னுரங்கம்.

பதிலே பேசாமல், ஆனல் ஒப்புக் கொண்டவன்போல் எசக்கியப்பன் எழுந்திருந்தான். பொன்னுரங்கம் அப்படியே அவர் காலில் விழுந்து, "மாமா, செய்த தப்பை எல்லாம் மன்னிச்சுடுங்க. இனிமே நீங்க கிறின கோட்டை நான் மாறல்லே!" என்று வேண்டிக் கொண்டான்.

முத்தாரப்பன் தாலி கட்டவேண்டிய நேரத்தில், பொன்னுரங்கம் தாலியுடன் தயாராக இருந்தான். வழக்கப்படி. பெரியவர்கள் பெண்ணைத் தாலி கட்டுவதற்கு முன்னல், பொறை நிலவு பார்ப்பதற்காக சமுத்திரக் கரைக்கு அழைத்து வந்தனர். முழு நிலவைப் பார்த்துவிட்டு, அப்படியே கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு வர வேண்டும். பின்னர்தான் தாலி கட்டுவது.

கயல்விழி கரையோரத்துக்குச் சென்று, ஏறிட்டு வானை நோக்கினுள். அதே சமயத்தில் கீழே, அவள் கால்களில் ஏதோ ஒன்று தட்டுப் பட்டது—குனிந்து பார்த்தாள்—நல்ல சந்திரிகையில்...ஆம், முத்தாரப்பன் தான்!...

கயல்விழி திடுக்கிட்டு அப்படியே உட்கார்ந்து அவனைப் பார்த்தாள்.

வந்திருந்த பெண்களும் அவனைப் பார்த்தார்கள். உடனே எல்லாருமாக அவனைத் தூக்கிக் கரையில் போட்டார்கள். ஒருவன் ஓடிப்போய் சூடாக ஒரு 'கப்' டீ வாங்கி வந்தான். வந்திருந்த பெண்கள் — முத்தாரப்பனுக்கு உறவினர்கள் — அவன் சாகவில்லை என்பதையறிந்து, உடம்பைச் சூடாக்கினார்கள். யார் நல்லகாலமோ, முத்தாரப்பன் மெதுவாகப் புரண்டு கொடுத்தான். சூடான டீ இறங்கிய அரை மணிக்கெல்லாம் முத்தாரப்பன் மெதுவாக எழுந்திருந்தான். கடலிலேயே விழுந்து எழுந்து பழக்கப்பட்ட அவன் உயிரைச் சமுத்திரராஜன் எடுத்துக் கொள்ளவில்லை.

அந்தப் பெண்களிடம், தன் உறவினர்களிடம், முத்தாரப்பன் நடந்தவைகளைக் கூறினான். "கொஞ்சங் கொஞ்சமாக வலையை முதலில் அறுத்து விட்டுக் கொண்டேன். அவன் கண்களில் பட்டால் ஆபத்தாகிவிடுமே என்று, வேறுதிக்கில் நீந்திப் போனேன். அதனால்தான் சோர்வு பெற்று, மூர்ச்சித்துவிட்டேன். அலை இங்கே கொண்டு வந்து ஒதுக்கியிருக்கிறது. இங்கே எப்போது வந்தேனோ, தெரியாது..." என்று கூறினான்.

"பையன்கள் வலிப்பு வந்ததாகக் கூறியது" என்று ஒருத்தி ஆரம்பித்ததும், "அவர்களையும் பொன்னுரங்கம் சரி செய்திருக்கிறான்!" என்று ஒருத்தி பதில் சொன்னாள்

தாலியும் கையுமாக இருந்தபொன்னுரங்கம், முத்தாரப்பன் கயல்விழிகையைப் பற்றிக் கொண்டு வந்த கோலத்தைக் கண்டு பெரிய அதிர்ச்சி கொண்டான். உண்மை வெளிப்பட்டிருக்கும்; குப்பத்தினர் விடமாட்டார்கள் என்ற திகில். தாலியை அப்படியே போட்டுவிட்டு, எடுத்தான் ஓட்டம்!

முத்தாரப்பன் — கயல்விழி தம்பதிகளாய் வருவதை அருகில் பார்த்து விஷயமறிந்த போதுதான் பொன்னுரங்கம் அருகே இல்லை என்பதை ஆண்கள் அறிந்தார்கள். மணவிலிருந்த தாலியை முத்தாரப்பன் எடுத்துக் கயல்விழியின் கழுத்தில் கட்டினான்

திருமண விருந்தாகச் சிறுவர்களுக்கு இரண்டு உதைகள் கிடைத்தன.

கர்த்தபமே!

("புதுமைச்சித்தன்")

முட்டி கடித்திட மேனி தளர்ந்திட
  மூச்சு மிகத்தினறி

குட்டிச் சுவரின் அருகினில் நின்றே
  குமைந்து கலங்குவதேன்?

வெட்டிப் பிளந்திடும் வேதனை யால்மனம்
  வெம்பிக் குமைந்தனையோ!

முட்டி குடித்திட மூட்டை சுமத்திடும்
  மூர்க்கரை எண்ணினையோ!

நதிமலை காடு நகர்முழு தெங்கும்
  நடந்தே அலுத்தனையோ;

சதிச்செய லாழ்ந்த சகத்தில் பிறந்த
  சழக்கைக் கருதினையோ;

பொதியை சுமத்திடும் புல்லன் உணவே
  புசிக்கத் தந்தில்லா

விதியை நினைந்தோ விழிநீர் வழிந்திட
  வேதனை ஏற்றனையோ!

கன்மன மாந்தர்க் குழைத்திட நேர்ந்த
  கதியை நினைத்தனையோ;

புண்செயும் நின்மனத் துயரினை இங்கு
  புகன்றிட மாட்டாயோ!

மின்செய லாவது ஏதும் இலையென
  நீள்துயர் ஏற்றனையோ!

நின்மனத் துயரினை குட்டிச் சுவரிடம்
  நிகழ்த்திடு கர்த்தபமே!

197703

17. மலைவளம் காண்பாய்! மன உரம் பெறுவாய்!

["எரிந்து கருகிய தரையின் ஒரு இடத்தில் ராபின்கள் சில. தம்முள் உரையாடியவாறே, தத்தித் திரிந்தன. காகங்கள் கரைந்தன. இரண்டு புருக்கள் ஒரு மரத்தில் அமர்ந்து பரஸ்பரம் கிளுகிளுப்ப தற்காக உள்ளே பாய்ந்தன. 'டூவி'ப் பறவை ஒன்று பிருண்டிக் கொண்டும், ஒரு கூட்டம் வான்கோழிகளை விட அதிகமான கூச்சல் எழுப்பியும் திரிந்தது. தாழ்ந்த புதரிடையே சில பூனைப்பறவைகள் 'மியோவ்' ஒலி செய்தன. குறும்புள்ள பெரிய கிழட்டு ஏகதாளிப் பறவை ஒன்று அவற்றைப் போலவே கூவிப் பழிப்புக் காட்டியது. காடு அமைதி நிறைந்தது, என்று சொல்கிறவன் பைத்தியக்காரனே. கூர்ந்து கவனிக்கும் கலையை நாம் இங்கு கற்கிறோம். 'பேபல்' கோபுரம் என்பது, அதிகாலை நேரத்தில் காட்டின் அருகே, வெறும் படிப்பு முயற்சியே ஆகும்."

—ராபர்ட் ஸி. ரூவர்க்—'தாத்தாவும் பேரனும்']

ஏற்காடு.

தமிழகத்தின் மலைச்செல்வத்திற்கும் வனவளத்திற்கும், சான்றாக நிமிர்ந்து நெடிதுயர்ந்து நிற்கும் சேலம் மாவட்டத்தின் உல்லாச நிலயம்.

சென்னைக் கடற்கரையிலே தொடங்கிய தமது ஆராய்ச்சி, சேலம் மலையுச்சிக்குத் தம்மை இழுத்து வந்திருப்பதை எண்ணிப் புன்னகை பூத்தார், பேராசிரியர் ஆனந்தரங்கம்.

'மலைகளிலிருந்து ஆறுகள் பிறக்கும். அருவிகளாக இழிந்து, வெள்ளப் புதுப் புனலாக நடந்து, ஆறுகளாகத் தவழ்ந்து, கிளைகளாகப் பிரிந்து, கடலோடு முயங்கும். இது இயற்கை. மலையிலே பிறந்து வளர்ந்து பிறகு கடலிலே கலந்து விட்ட கன்னியம்மாளும் ஒரு விதத்தில் இந்த இயற்கை விதிப்படியே வாழ்ந்து மறைந்து விட்டாள். அந்தக் காட்டாற்றின் தோன்றுமிடம் கண்டு பிடிக்கப் பட்டுவிட்டால்...? எத்தனையோ இரகசியங்கள் வெளிப்படும். அதிலே நாம் வெற்றி பெறுவோமா?'--இப்படி நடை போட்டது ஆனந்தரங்கத்தின் சிந்தனை.

ஏற்காட்டை அடைந்து ஏறக்குறைய நான்கு மணி நேரங்கள் கழிந்து விட்டன. நண்பரொருவரின் பங்களா நல்லவேளையாகத் தங்குவதற்குக் கிடைத்து இருந்தது.

பிரயாணக் களைப்புத் தீரக் குளித்து, சிற்றுண்டி அருந்தி...

சிற்றுண்டி......முதன் முதலாகத் தாரையின் தளிர்க்கரங்கள் தயாரித்து அளித்த இன்னுணவு...

ஆம்... தாரையும் வந்திருந்தாள். பேராசிரியரின் நண்பர் வீட்டில் தோட்டக்காரன் ஒருவன்

தவிர வேறு யாருமில்லை...எனவே அவர்கள் உணவுத்தயாரிப்புக்கு வேண்டிய சாதனங்களைக் கொண்டு வந்திருந்தார்கள்.

'பிரயாண ஏற்பாடுகள்' என்ருல், அதை ஒரு கலையாகக் கையாளுகிருர்கள் சிலர். இவ்வுண்மையைப் பூரணமாக உணர்ந்தார், பேராசிரியர் தாராவின் முன்னேற்பாடுகளைக் கண்டு...

ஒவ்வொரு முறையும் இரயிலில் ஏறி உட்கார்ந்த பிறகு...'அடடா.... அதை மறந்து விட்டு விட்டு வந்துவிட்டோமே! இதைக் கொண்டுவரவில்லையே?' என்று எண்ண வேண்டிய அவசியத்திலே வாழ்ந்தவர் அவர்...

தாராவிடம் மெதுவாகச் சொன்னுர்: 'தாரா! இதென்ன 'ஹனிமூன்' போவது போல் ஏற்பாடுகள் செய்கிருயே?'

தாரை, காலை மலர்ந்த புது மலராக அலர்ந்தாள். அந்தச் சொல்லாத பதிலில் இல்லாத பொருளேது?

ஏற்காட்டை அடைந்ததும் தான், தாரையின் ஏற்பாடுகளின் சிறப்பு புலனுயிற்று.

சிறிய, அழகிய பையைத் திறந்ததற்கும், சிற்றுண்டி பரிமாறப்பட்டதற்கும் இடையிலே ஐந்தே நிமிடங்கள் தான் ஆயின.

தட்டிலே தாரையின் மனம் போல இனித்த கேக்குகள்...பிஸ்கட்டுகள்... பழஜாமும், வெண்ணெயும் தோய்த்த ரொட்டித் துண்டுகள்...உலர்ந்த பழங்கள்.

'ஸ்டவ்' சிறிது நேரத்தில் சுவையான 'ஓவல்டின்'னை வழங்கியது...

ஆனந்தரங்கம், ஆனந்த சிகரமானுர்! தளதளத்த குரலில், 'தாரா!' என்று அழைத்தார்!

மல்லிகைப் பூ வண்ண, துல்லியமான வெள்ளைச்சேலை; மத்தாப்புக் கொளுந்தின் மந்தகாச நீல இரவிக்கை; துளைத்தெடுக்கும் மணம் கொண்ட தூய வெள்ளை மலர்கள்.

இடுப்பிலே கரம் பொருத்தி, இதழிலே நிலவைத் தேக்கி, கண்களிலே அன்பு கொஞ்ச, மயில்போல ஒயிலாகத் தலையைத் திருப்பி, 'ஊம்'....என்று யாழாக இசைத்தாள் தாரை!

"தாரை.. எங்கே அந்த மந்திரக் கோலை இப்படிக் காட்டு...'

'மந்திரக் கோலா...அதென்ன?'

'மாயக்காரியே! இங்கே...இப்படி வா...'

தாரா வந்தாள். விரல்கள் உறவாடின...இருதயங்கள் கலந்தன...உயிர்கள் ஒன்றின.

'இதோ...இந்த விரல்கள்...மந்திரக் கோல்கள்...தேவையறிந்து பசித்தினவு தீர்த்த தேவ கன்னிகையின் மந்திரக் கோல்கள்...

'ஒகோ'...—வேல் விழியின் அசைவிலே பேராசிரியரின் நெஞ்சு துவண்டது!

* * *

உலாவப் புறப்பட்டார் பேராசிரியர். தாரை சாமான்களை ஒழுங்கு படுத்திவிட்டு வருவதாகச் சொன்னுள்.

'சீக்கிரம் வந்துவிடு. சற்றுத் தொலைவில் காத்திருக்கிறேன்...' என்று சொல்லி நடந்தாரவர்.

இயற்கை எழில் முகம் காட்டி வரவேற்ருள், ஆராய்ச்சியாளரை. கொங்கு நாட்டின் குளிர் தென்றல், மனக்கேணியின் ஆராய்ச்சி ஊற்றுக்கண்களைத் திறந்து விட்டது.

'கன்னியம்மாள்—இரட்டைக் குழந்தைகள்—அருணுசலம்—கதிரேசன்—கண்ணுடிக்குப்பி — மகாதேவன்—மாலா-தாரா-' எல்லாம் மன அரங்கிலே நிழலாடஆரம்பித்தன.

'அருணுசலம் அவனை எங்கே, எப்படிச் சந்திப்பது ?'

இந்தக் கேள்வி புழுவாகக் குடைந்து கொண்டிருந்தது மனதிலே...நெடிதுயர்ந்த தேக்கு மரத்தின் அடியிலே அமர்ந்தார், ஆனந்தரங்கம்!

ஐந்து நிமிடங்கள் கரைந்தன. பசுமை போர்த்த இயற்கை எழிலில் மனம் ஒன்றியது, நீரிலே கரைந்த சர்க்கரையாக...

'மனிதர்களிலே பல இனங்கள் என்ருல், மரங்கள். தாழ்ந்து விடுவோமா?' என்று சவால் விடுவது போல அமைந்த நூற்றுக்கணக்கான மரவகைகள்.

உயர்ந்தும், வளைந்தும், விரிந்தும், பரந்தும், ஒடுங்கியும், தவழ்ந்தும், கிளைத்தும், தளைத்தும் தன்னிச்சையாக வளர்ந்து மண்டிக்கிடந்த அந்த மரக் கூட்டத்தின் மூட்டத்திலே நாட்டம்

செலுத்தி நின்ருர் ஆனந்தரங்கம்.

திடீரென்று—

காந்தள் மலர்கள் கண்களைக் குருடாக்கின. மனக்கண்ணில் மரங்கள் மறைந்து, மங்கை படர்ந்தாள்...மனம் அனுப்பிய தந்தியை, 'தாரை' என்று வார்த்தையாக மொழி பெயர்த்து உதிர்த்தன உதடுகள்!

'வாங்கிவிடடி கையை! மாயமெவரிடத்தில்?' என்று பாரதியின் பண்ணை இசைத்தார் ஆனந்தரங்கம். விரல்கள் விலகின—விண்மதி விகசித்தது!

'தாரை! மலைவளம் காணபோம்! மன உரம் பெறுவோம்! என்ன?'

'தங்கள் கட்டளை....'

'கட்டளையல்ல...யோசனை...இயற்கை அன்னையை மனம் ஒன்றிப் பார்க்கும்பொழுது, எத்தனை எத்தனையோ புதிய, பாடங்களை நாம் கற்றுக் கொள்கிறோம். இயற்கை சாதாரண மனிதனை, 'கவிஞனின் கற்பனையோடும், அறிஞனின் சிந்தனைத்தெளிவோடும், வேதாந்தியின் பரந்த மனத்தோடும், துறவியின் பொதுநல விரிவோடும், அரசியல் வாதியின் நெஞ்சுரத்தோடும் தூய காதலனின் உணர்வுத் துடிப்போடும் வாழ்வதற்குத் தூண்டுகிறது. உயர்ந்த மலை கண்டு வியக்கும் பொழுதும், பரந்த கடல் கண்டு பூரிக்கும் பொழுதும், எல்லையில்லாத வானைக் கண்டு நெஞ்சைப் பறிகொடுக்கும் பொழுதும், மனிதன் அடையும் இன்ப எல்லைக்கு ஏது உவமை? அதைத் தானே பாரதி '**கோல வெறி**' என்று குறிக்கிருன்! வெறி இருந்தால் கோலம் குறையும்; ஆனல் கோலம் மாருத வெறி, நெறி நிற்கும் வெறி, இயற்கையை நாம் ரசிக்கும் பொழுது தானே பூரித்து நம் அகத்தே எழுகிறது? தாரை! வா.. இயற்கை விருந்து அருந்தி, இன்பக் கற்பனை ரதமேறி உயரப் பறப்போம்!'

தாரை தலையசைத்தாள்! தலைவன் முன்நடந்தான்!

* * *

'அதோ! நெடிதுயர்ந்து நிற்கிறதே, அது தேக்கு! அண்மையிலே நிற்பது எண்ணெய்மரம்; பக்கத்திலே கோங்கு; இதோ! இப்பால் பூதங்கொல்லி; அது புன்னை; இங்கே உருத்திராட்சம்; சற்றுத்தொலைவில் குங்கிலியம், குடைப்பாலி; பிறகு....அ... அதுதான் காட்டுப்பலா....இது சந்தன வேம்பு...இன்னும் வெள்ளகில், காட்டிலுப்பை, மதகரி வேம்பு, நாவல் மர இனங்கள், யானைப்பலா, காட்டுப் பூவரசு, மா, சாதிக்காய், வெங்கொட்டை, பிரம்பு, பொன்பாதிரி, வெண்மருது.....' என்றடுக்கிக் கொண்டே போனர், நடந்தபடியே ஆனந்தரங்கம். நங்கை, அந்த அறிவுத் தருவின் தோளிலே அன்புக் கொடியாகப் பற்றிக் கொண்டு கேட்டவாறே தொடர்ந்தாள்!

'ஆமாம்...இதென்ன நீங்கள் மனோ தத்துவப் பேராசிரியர் என்றெண்ணிக் கொண்டிருந்தேன். உங்களுக்குப் 'பாட்டனி'யிலும் பரிச்சயம் உண்டு போலிருக்கிறதே!'

'ஏய்..குறும்புக்காரி...புலமை இல்லாவிட்டாலும் எல்லா அறிவியல் பிரிவுகளிலும் எனக்கு அறிவு உண்டு. 'துணைவி' என்ற அழகிய சொல்லைத் தலைவிக்குத் தமிழர்கள் வழங்கி உள்ளார்கள். துணைவி, அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், துணைவனின் அறிவை வளர்க்கவும், மனவளமும், உடல் வளம் ஊட்டவும், பெற்றுக்கொள்ளவும் துணையாக நிற்பவர்கள்....கேள்... அதோ...இன்னும் சிறிது தொலைவு காட்டினுள்ளே சென்ருல் வெண் தேக்கு, கொல்லமாவு, இலவங்கம், சடைச்சி, ஈட்டி, பூவன் போன்ற வகைகளையும் பார்க்கலாம். 'வெப்ப மண்டலப் பசுங் காடுகள்' என்று அழைக்கப்படும் இக்காடுகளில் பிரம்பு வகைகளும், பல வகைக் கொடிகளும் உண்டு...'

பேராசிரியரும், தாரையும் இவ்வாறு பேசிக்கொண்டே காட்டின் உள்ளே அரைமைல் தூரம் சென்று விட்டார்கள். காற்றிலே பலவித மலர்களின் மணமும், மண், மரப்பட்டைகளின் வாசனையும் கலந்து மிதந்து வந்தது.

நிசப்தமாக விளங்கிய அமைதிக்கு மெருகூட்டுவது போலப் பறவைகள் கிளுகிளுத்தன. வாத்திய இசைகளைப் போல ஆனல் பல்வேறு பண்களில் புள்ளினங்கள் எழுப்பிய குரல்கள், மெய்சிலிர்க்கச் செய்தன.

இயற்கை அன்னை கொலுவிருக்கும் ஏற்காட்டு மலைக்காட்டில் தாரையும், ஆனந்தும் மன அமைதி கண்டு, நிறைவு பெற்று நின்றூர்கள்.

ரசிகத்தன்மையின் எல்லையிலே, திடீரென்று சுற்றுப்புறத்தையும், சூழ் நிலையையும் விட்டுவிட்டு-தங்களையே ரசிக்கும் நிலைக்கு வந்தார்கள்.

வாய்மொழி இறந்தது ; மனவிழிகள் திறந்தன. கண்ணும், கண்ணும் உற வாடி, மேலே, மேலே, மேலே பறந் தார்கள்!

காட்டின் சப்த ஜாலங்கள் அவர்கள் செவிகளை எட்டவில்லை. வானுலகின் அழகிய இசை அமுது பாய்ந்து வந்த தாக உணர்ந்தார்கள்.

நிலை மறந்து நெடுநேரம்-மரங்க ளோடு மரங்களாக நின்றிருந்த அவர் களை, உலக நினைவிற்கு இழுத்து வந் தது... 'ஓ' என்று ஒலித்த ஒரு பெண் ணின் ஓலக் குரல்!

தசையிலே பாயும் துப்பாக்கி ரவை போல, நெஞ்சத்திலே போய்த் தைத் தது அக்குரலில் இழையோடிய அச்ச உணர்வு!

18. துடியிடை வெருண்டாள்! துப்பாக்கி வெடித்தது!

["வேள்விப் பொருளினையே—புலைநாயின் முன்
மென்றிட வைப்பவர் போல்,
நீள்விட்டப்பொன் மாளி கை—காட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்,
ஆள்விற்றுப் பொன்வாங்கி யே—செய்தபூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்,
கேள்விக் கொருவரில் லை—உயிர்த் தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கி னுன்."

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்']

இருளைக் கிழித்துக்கொண்டு அம்பு போல ஓடிக்கொண்டிருந்தது, மலபார் எக்ஸ்பிரஸ்.

மங்கிய நிலவின் ஒளியில் தெரிந்த காட்சிகள், கருத்துக்கு விருந்தாக அமைந்து கொண்டிருந்தன.

மாலா அவற்றிலே மனம் பதித்தாள் போலப் பிறருக்குக் காட்டிக் கொண் டிருந்தாள். அவள் அமர்ந்து இருந்த 'பெண்கள் பெட்டி'யில் பலதரப்பட்ட சக பிரயாணிகள் இருந்த போதிலும், அவர்களோடு பேசுவதற்கு அவளுக்கு விருப்பமில்லை.

நினைவு — இரயிலோடு போட்டி போட்ட வண்ணம் 'தட, தட' என்று ஓடிக்கொண்டிருந்தது.

'ஏன் போகிருய்? ஏன் போகிருய்? எங்கே போகிருய்! எதற்காகப் போகிருய்? என்று இரயில் ஒலிப்பது போல அவள் காதுகளுக்குக் கேட்டது.

'ஆம், ஏன் போகிறேன்?' என்று தனக்குத்தானே வினவிக்கொண் டாள், மாலா.

'சிந்திக்காமலே நான் செய்துவிட்ட வேலைகளில் இதுவும் ஒன்று; ஆனுல்... அப்பாவிற்குத் தெரியாமல் முதல் தடவை சினிமாவிற்குப் போனதுபோல அவ்வளவு எளிதாக விளைவு எதுவு மின்றி— இச்செயல் போய்விடுமா? அதெப்படி நடக்கும்? என்ன பயங்கர முடிவுகள் காத்திருக்கின் றனவோ?'

மாலாவிற்கு ஏற்காடு செல்லத் தன்னைக் கதிரேசன் அழைத்த காட்சி நினைவிற்கு வந்தது!

கதிரேசனும் புத்திசாலிதான்; 'மாலா வின் மனதிலே வெல்லக்கூடிய பாகம் எது?' என்பதை உணர்ந்து அல்லவா பேசினுர்!

'ஆனந்தரங்கத்திற்கு ஆபத்து! ஏற்காட்டு மலையிலே அருணசலம் பேராசிரியரைத் தீர்த்துக்கட்டிவிட்டால்

கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை!'

மாலாவின் நெஞ்சு — இப்பொழுது அதை நினைத்தாலும்-இரத்தக்கண்ணீர் வடித்தது!

'ஆனந்தரங்கத்தின் உயிருக்கு ஆபத்து!' கதிரேசனுக்கு முன்பாகத் தனது உணர்ச்சியைக் காட்டக் கூடாது என்று எவ்வளவோ முயன்றும் முடியவில்லையே?'

மாலாவின் மனதிலே புயலைக் கிளப்பிவிட்டு, மற்றொரு பக்கமாகப் பொருமைக் கொள்ளியையும் இட்டார், கதிரேசன்!

'அ...இன்னொரு செய்தி, மாலு! ஆனந்தோடு அந்த 'எக்ஸ்'-ஆசிரமத் தலைவியும்....செல்கிருளாம்!'

அலட்சியமாகவும், ஏதோ சாதாரண செய்தியைச் சொல்லுவது போலவும் சொன்னார், கதிரேசன்!

புயலிலே சிக்கிய கப்பல் திசை தடுமாறி, பனிமலையில் மோதியது போல ஆயிற்று, மாலாவிற்கு!

'தாரா செல்கிருளா? அவளுக்கு என்ன வேலை? இயற்கையின் எழில் தவழும், இன்பச் சூழ்நிலை கமழும் ஏற்காட்டு மலைச்சாரலில்....சங்க இலக்கியத் தலைவன்-தலைவிபோல அவர்கள் செல்வார்கள். கவிதைகளில் வர்ணிக்கப்படும் காட்சிகள் அங்கு நிதரிசனமாகும். திரைப்படம், அங்கு நடைமுறையாகும்! ஆனந்தவானில் தாரை தன்னிகரில்லாத் தனி நட்சத்திரமாக மிளிர்ந்து, ஒளிர்ந்து, பேரரசு செலுத்துவாள்!'

மாலாவின் அகம் இக்காட்சியைக் கற்பனை செய்தது, முகம் அதன் விளைவாக இருண்டது; சாம்பிக் கூம்பியது!

கதிரேசன், காய்ந்த இரும்பிலே கணக்கிட்டு சம்மட்டியையியக்கினார்!

'மாலு! கவலைப்படாதே! இதோ பார். தாராவிற்கு'வாரண்டு'.இரட்டைக் குழந்தைகளைத் திருடிவிட்டதாக....... நானே இதைக் கொண்டு போவதாகவும், அவளைக் கைது செய்வதாகவும் எண்ணி இருக்கிறேன்! அ...நான் புறப்பட்டுவிட்டேன்....நீ...,என்ன செய்யப் போகிறாய்?'

கதிரேசனின் கேள்வி, 'எல்லாம் உனக்காகவே செய்கின்றேன்...நீ வரப் போகிறாயா?... இல்லாவிட்டால்.... நான் எதுவும் செய்யப் போவதில்லை...' என்று சொல்லாமல் கூறியது!

மாலா குழப்பத்தில் ஆழ்ந்தாள்! 'நானு...நான், தனியாகக் கதிரேசனுடன், செல்வதா? அப்படிச் செல்லலாமா?'

உடனே முடிவுக்கு வரும் செய்தியல்லவே? மாலு மனம் கலங்கினாள்.

மான், வலையிலே துள்ளுவதைக் கண்டு, கண்ணியை இழுத்து, வலையை வேடன் இறுக்குவதைப் போலப் பேசினார், கதிரேசன்.

'மாலு! நீ வராவிட்டால் எனக்கு எதுவும் அக்கரை கிடையாது! பேராசிரியர் ஏற்காட்டிலே பிணமானால் சேலம் போலீசுதான் சிக்கலிலே மாட்டிக் கொள்ளும்.......கதிரேசனுக்கென்ன? அத்துடன்....பாவம்....மகாதேவன்! அருணாசலம் அகப்படும்பொழுது என்னென்ன இரகசியங்கள் வெளிப்படுமோ?'

மாலாவால் அதற்கு மேலும் சிந்திக்க முடியவில்லை.

'சரி...நானும் வருகிறேன்...'

தேனாகப் பாய்ந்தது இச்செய்திகள், கதிரேசனின் காதுகளிலே!

அதே சொற்கள்—'மலபார் எக்ஸ்பிரஸ்'லே பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுது—மாலாவின் மனதைத் தேளாகக் கொட்டிக் கொண்டிருந்தன!

'போகிறேன் ... எப்படித் திரும்பி வரப்போகிறேனோ?'

நெஞ்சக்குமுறலின் விளைவாக, நீர்த்துளிகள் அவளது கன்னங்களைத் தடவி வழிந்தன!

* * 7

அதே 'மலபார் எக்ஸ்பிரஸ்' வண்டியில்—

இரண்டு பெட்டிகள் தாண்டி—

முதல் வகுப்புப் பெட்டியில்—

காலியான முதல் வகுப்புப் பெட்டியில்—

தன்னந், தனியாக அமர்ந்து இருந்தார், கதிரேசன்!

விரல்கள் பிசையப்பட்டன; நகம், கடிக்கப்பட்டது; தலை, கலைக்கப்பட்டது; பற்கள், நெறிந்தன. கண்கள் சிவப்பேறின; கூண்டிலடைபட்ட சிங்கம்!

தனியாக இருக்கையிலே, போர்வை கலைந்து வெளியே தெரிந்த குஷ்ட ரோகம்—

நள்ளிரவிலே மாத்திரம் வெளியே தலை காட்டத் துணியும், மனிதனில் மறைந்து கிடக்கும் மிருக வெறி!

'கைக்கெட்டிய கனி, கடிக்கு அகப்படவில்லையே!' என்று துடித்த தாபம்!

'பல வெற்றிகளுக்குப் பிறகு முதலாவது தோல்வியா?' என்று முழங்கிய பேய்த்தனம்!

அத்தனையும், மொத்தமாக ஒருருவமாக அமைந்து, கதிரேசன் வடிவத்திலே அமர்ந்திருந்தது!

முதல் வகுப்பு வண்டி, தனியாக—அவர் இருந்தும் வெறுமையாக—அவருக்குக் காட்சி அளித்தது!

'கேவலம்! அரியலூரைப் போல ஒரு விபத்தாவது ஏற்படக் கூடாதா? வண்டிகள் நொறுங்கி விழும் ஆர்ப்பாட்டத்திலே, நான் மாலாவைத் தேடிப் பிடித்து—' மேலே ... மேலே கற்பனை பறந்து சென்றது!

கற்பனை—அபூர்வமான பண்பு; சிந்தனையின் அந்தக் குழந்தை, மனிதனை வானுலகத்திற்கும் நடத்திச் செல்வாள்! நரகத்திற்கு வழியும் அவளுக்குத் தெரியும்!

குற்றவாளிகளுக்கும், கயவர்களுக்கும் ஏன் இந்த அபூர்வ வரம், ஆண்டவனால் அருளப்பட்டதோ?

நிகழாத குற்றங்களை நினைத்து நினைத்து அவர்கள் அனுபவிக்கும் பொழுதே, 99% பாவம் முடிந்து விடுகிறது அல்லவா?

'மாலா...என்ன அலட்சியமாகச் சென்று மூன்றாம் வகுப்புப்பெட்டியில்—அதுவும் பெண்கள் பெட்டியில்—ஏறிக் கொண்டாள்! போகட்டும்.... இரயிலிலேயே பிரயாணம் முடிந்து விடப் போகிறதா? இன்னும் சேலம், ஏற்காடு...எல்லாம் இருக்கின்றதே?' இந்த நினைவு கதிரேசன் நெஞ்சிலே சிறிது களிப்பைச் சேர்த்தது!

'ஊவ்...வ்' என்ற ஆழ்ந்த உறிஞ்சலோடு சிகரெட்டின் ஆவியை முடித்து, இருளிலே வேகமாக வீசி எறிந்தார் கதிரேசன்.

'பளிச்'சிட்டு மறைந்தது சிகரெட்டுத் துண்டு.

* * *



"இன்னிக்கு பேப்பர்லே மழை எங்கே பெய்யும்னு போட்டிருக்குன்னு பாரு! நம்ப அங்கே போய்க் கத்தலாம்!"

சேலம்.

நீண்ட கனைப்போடு, களைப்போடு குலுங்கி நின்றது புகைவண்டி.

கதிரேசன், அவசரம், அவசரமாக இறங்கி மாலா இருந்த இரயில் பெட்டிக்கு ஓடினார்.

அங்கே-

மாலா இல்லை! கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு தேடினார் கதிரேசன்!

கண்கள் பொய் சொல்ல இல்லை! திகைத்து நின்ற கதிரேசனின் செவிகளில், 'நீங்கதானே, கதிரேசன்!' என்ற கேள்வி மெதுவாக விழுந்தது?

கேட்டது, மாலாவின் அருகில் அமர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்த வயதான ஒரு மூதாட்டியார்.

'ஆம்' என்று தலையசைத்தது.

'இந்தாங்க...அந்தப் பொண்ணு இதை உங்க கிட்டக் கொடுக்கச் சொல்லிச்சு. வண்டி நின்றதும் மின்னலாக இறங்கிப் போயிடுச்சுங்க..!'

ஒரு தாள், நீட்டப்பட்டது. கதிரேசன் வாங்கி நடுங்கும் கரங்களுடன் பிரித்தார்.

'சேலத்தில் என் தோழி வீட்டில் தங்கிவிட்டு நாளைக்காலை 10 மணிக்கு ஏற்காடு வருகிறேன். மன்னிக்கவும்'

கையெழுத்தில்லை; 'கடிதம் யாருக்கு?' என்ற விவரமும் இல்லை.

சப் இன்ஸ்பெக்டர் கதிரேசன், சாதாரண ஒரு பெண்ணால் முட்டாளாக்கப்பட்டு விட்டார்!

* * *

கதிரேசன் ஏற்கெனவே கற்பனை செய்திருந்தபடிதான், ‘ஜீப்’-அவர் ஏற்பாடு செய்திருந்த வாகனம், ஏற்காடு மலையின் மேலே நெளிந்து, நெளிந்து அவரைத் தாங்கிச் சென்றது.

ஒரே ஒரு வித்தியாசம்—மாலா முன் ‘ஸீட்’டில் அவரருகில் இல்லை...

அதை நினைக்க, நினைக்கக் கொதித்தது அவருள்ளம்...‘ஆக்ஸிலேட்டரை’ வேகமாக ஆத்திரத்தோடு மிதித்தது அவரது பாதம்!

* * *

மாலா, கதிரேசனுக்கு எழுதி இருந்தபடி, அவளுக்கு சேலத்திலே

தோழி யாருமில்லை.

ஆனால் அவள் தோழன் கதிரேசனை விட, யாருமேயில்லாத ஹோட்டல் அறை ஒன்றையே அவள் தேர்ந்தெடுத்தாள்...முதலில் ஹோட்டலை அடைந்ததும் அவள் செய்தகாரியம் தொலைபேசி வழியாக, தந்தை மகாதேவனுக்கு ஓர் அவசரத்தந்தி அனுப்ப ஏற்பாடு செய்ததுதான்!

'ஏற்காடு செல்கிறேன்-அச்சப்பட வேண்டாம்-மாலா'

இது தந்தியின் வாசகம். அன்று இரவு, பிரயாணக் களைப்பிலே அமைதியாக உறங்கினாள் அப்பேதை.

* * *

காலைப்பொழுது.

கண்விழித்த மாலாவின் கண்களைக் கவர்ந்தது ஓர் அழகிய பொட்டணம்!

மேஜைமீது கிடந்தது அது! 'ஹோட்டல் அறை' என்ற நினைவு வரச் சற்று நேரம் பிடித்தபிறகு, அதைக் கண்ணுற்றாள் மாலா!

துள்ளி எழுந்து, அதை எடுத்தாள். 'மிஸ் மாலா' என்று அழகாக எழுதப்பட்டிருந்தது அதன் மீது!

அவசரமாகப் பிரித்தாள்!

ஒரு துப்பாக்கி!--மாலாவின் மனமும், அவள் தளிர் விரல்களைப் போலவே நடுங்கியது!

ஒரு சிறு துண்டுக் கடிதம் உள்ளே.

'பயப்பட வேண்டாம். இது உன் ஆப்த நண்பனால் அனுப்பப்படுகிறது. உதவி தேவைப்படும் பொழுது, ஆகாயத்தில்:சுடு...உடனே உதவி கிடைக்கும்.'

மாலா கடிதத்தைப் பல முறை படித்தாள். நெஞ்சிலே உரம் பிறந்தது.

துணிச்சலாக ஏற்காட்டிற்குப் புறப்பட்டு விட்டாள்!

அவளுடன் அதே ஹோட்டலில் வந்து தங்கியிருந்த, அவளது 'ஆப்த நண்பனும்' அதே பஸ்ஸில் அவளுடன் பிரயாணம் செய்தான்!

* * *

உதவுவதற்கு ஆள் மறைந்து வருகின்ற துணிச்சல்--

ஆனந்த ரங்கமும், ஏற்காட்டிலே இருக்கின்ற தைரியம்-

தந்தைக்குச் செய்தி தெரிந்ததும், ஏதாவது உதவிக்கு ஏற்பாடு செய்வார்-இதற்குள் செய்தி

அனுப்பி இருப்பார் என்ற நெஞ்சழுத்தம்–

எப்படியும் கன்னியம்மாளின் கண்ணுடிக் குப்பியின் புதிரைத் தெரிய வேண்டும் என்ற ஆர்வம்–

மடியிலே மறைந்திருந்த கெட்டிக்கப் பட்ட துப்பாக்கி–

அத்தனையும் மாலாவிற்குப் புதுத் தோற்றமொன்றை அளித்தன! வீராங்கனையாக பஸ்ஸிலிருந்து இறங்கினுள் அவள்!

கதிரேசனே அயர்ந்து விட்டார், அவளது புதிய மலர்ச்சி கண்டு!

இருவரும் நடந்தார்கள், கதிரேசன் தங்கியிருந்த காட்டு பங்களாவை நோக்கி!

* * *

இவ்வளவு விரைவில் தனது 'ஆத்ம நண்பனை' அழைக்க வேண்டிய அவசியம் வரும் என்று மாலாவே நினைத்திருக்க வில்லை!

காட்டு பங்களாவை நோக்கி நடந்து கொண்டிருக்கும் பொழுதே, கதிரேசனின் வெறி கட்டுக் கடங்காது போய்–

'மாலா' என்று கரம் நீண்ட நெருங்கினுர்.

தீயைத்தொட்டவள் போலத் துடித்த மாலா, நிலை மறந்தாள்.

பெரிய ஆபத்து ஏற்பட்டு விட்டதாக எண்ணி 'ஓ' என்று அலறினுள்!

'எது செய்கிறேம்?' என்று எண்ணுமலே, தொடர்ந்து மிக் வெகுண்டு துப்பாக்கியை எடுத்துச் சுட்டாள்!

மின்னல் வேகத்திலே 'டுமீல்' என்று சுட்டது அக்கருவி!

அந்த ஓசை மறையு முன்னர்...பலர் அந்த இடத்தை நோக்கி ஓடிவரும் ஓசை கேட்டது!

(–அடுத்த இதழில் முடியும்–)

தினச் செய்தி

(ஆசிரியர்கள்: K. T. கோசல்ராம் M.L.C.,
N. ராமரத்னம்)

சூடான செய்திகளை சுவையாக வழங்கும் நாளிதழ்!

"தினச் செய்தி"

101, புரசவாக்கம் ஹைரோடு,
சென்னை–10.

பாரதி அடித்த பயமெனும் பேய்

மகரம்

புதிய ஆத்திச்சூடி பாடவந்த பாரதியார் முதல் எழுத்தான அகரத்தில், 'அச்சம் தவிர்' என்றே அதைத் தொடங்குகிறுர். சேர்ந்து வாழாமல், சோர்ந்து வீழும் தொண்டு செய்யும் அடிமைகளாக நம் நாட்டு மக்கள் இருப்பதைக் கண்டு பாரதி மனம் பதைக்கிறுர்.

"அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ!-கிளியே! ஊமைச் சனங்களடி"

என்று அவர் சொல்லும்போது அச்சத்தை அவர் எவ்வளவு தூரம் வெறுக்கிறுர் என்பது புலனுகிறது அல்லவா?

பாரதியாருடைய கீதங்களில் அடிமைத்தனம் எள்ளி நகையாடப்பட்டு, சுதந்திர வீரகோஷம் எழுப்பப்பட்டிருக்கிறது என்ருல், அடிமைத்தனத்தின் அடித்தளமான அச்சமும் அச்சுறுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். "பயமெனும் பேய்தனை அடித்தோம்" என்று அவர் அச்சமில்லாமல் சொல்வதைக் கவனித்து மகாகவியின் வாக்குப் பொய்க்காமல் பார்த்துக் கொள்வது நம்முடைய கடமையாகிறது.

மனிதன் எதற்கெல்லாம் எப்படியெல்லாம் அஞ்சுகிருன் என்பதை எண்ணிப் பார்ப்பதற்கே நமக்குப் பயமாக இருக்கிறது. 'பயம் கூடாது' என்று சொல்லும் பாரதி இதை எண்ணிப் பார்க்கப் பயப்படுவாரா என்ன? 'பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்', இச்சை கொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்', 'கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசுபோதினும்', 'நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டும் போதினும்', 'பச்சை ஊன் இயைந்த வேற்படைகள் வந்த போதினும்', 'இச்சகத்துளோர் எல்லாம் எதிர்த்து நின்ற போதினும்', 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்', அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே', என்று பாரதி கர்ஜிக்கிறுர்.

சற்றுப் பாமரமான மனிதன்நிலைமையை நினைக்கும் பாரதியார், 'நெஞ்சு பொறுக்குதில்லையே', என்று மனம் வெடிக்கிறுர். "அஞ்சி அஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே!" என்ற பீடிகையுடன் தொடங்குகிறுர்.

"வஞ்சனைப் பேய்கள் என்
பார்-இந்த மரத்தில் என்பார்;
அந்தக் குளத்தில் என்பார்"

* * *

"மந்திரவாதி என்பார்-
சொன்ன மாத்திரத்திலே
மனக் கிலிபிடிப்பார்

* * *

சிப்பாயைக் கண்டஞ்சுவார்-ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம்
பதைப்பார்
துப்பாக்கி கொண்டு ஒருவன்-வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டி
லொளிப்பார்...!'

என்று பாரதி காற்பது வருஷங்களுக்கு முன்பு சொல்லியது இன்று கூட உண்மையாகவே இருக்கிறது.

நாம் எல்லாரும், 'பயப்பட மாட்டோம்' என்று ஒரு பிரதிக்ஞையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது பாரதியாரின் விருப்பம்.

"அச்சமில்லை, அமுங்குதலில்லை,
நடுங்குதலில்லை, நாணுதலில்லை,
பாவமில்லை, பதுங்குதலில்லை,
ஏது நேரினும் இடர்ப்படமாட்டோம்;
அண்டஞ்சிதறினால் அஞ்சமாட்டோம்
கடல்பொங்கி எழுந்தால் கலங்க
மாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம், எதற்கும்
அஞ்சோம்;
எங்கும் அஞ்சோம், எப்பொழுதும்
அஞ்சோம்''

மகா மந்திரத்தைப்போலத் தைரியத்தின் தாரகமாய் இந்த வரிகளை நாம் எல்லாரும் மனத்தில் பதிய வைத்துக் கொண்டால் எவ்வளவு நல்லது?

"அச்சமும் துயரும் என்றே-இரண்டு
அசுரர் வந்தெமை யிங்கு சூழ்ந்து
நின்றார்.''

என்று அச்சத்துக்கு அரக்கருருவம் தருகிறார் பாரதி. 'புலையருக்கும் விடுதலை' என்று பாடிய அவரே அச்சத்தை மிகவும் இழித்துக் கூற நினைத்ததும். "புலை அச்சம் போயொழிதல் வேண்டும்" என்றும், "புலை அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம்" என்றும் அச்சத்துக்குப் புலைப்பட்டம் சூட்டுகிறார்.

"சாகா வரமருள்வாய் ராமா!" என்று அவர் பாடியிருப்பதால் பாரதி மரணத்துக்குப் பயந்தவரோ என்று யாரும் அஞ்சவேண்டியதில்லை. அவர் கேட்ட வரம், கும்பகர்ணனோ அல்லது மார்க்கண்டனோ கேட்ட கூண்டோடு இக் குவலயத்தில் வாழும் நித்யத்வம் அல்ல. மகாகவிகள் விரும்பும் சிரஞ்சீவிப் பதவியையே அவர் வரமாகக் கேட்டார். பெற்றார் என்பதில் நமக்குத் துளிக்கூட ஐயமில்லை. நம்மிடையே சந்தேகப் பிராணிகள் இருக்கக் கூடுமாகையால் அவர்களுக்காகவே போல்,

"மரணமும் அஞ்சேன்; நோய்களை
அஞ்சேன்;
மாரவெம் பேயினை அஞ்சேன்.''

என்று அவர் விளக்கம் தந்திருக்கிறார்!

"இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம்'' என்று பொதுப்படையாகவும் கூறிப் போந்திருக்கிறார் நம்கவி.

"மாரனிடம் எனக்கு அச்சமில்லை'' என்று மகாகவி கூறினார். ஆனால் மகாகவி பாரதி உள்பட மற்றையக் கவிகள் சிருஷ்டி செய்துள்ள மங்கையர்களுக்கு மாரனைக் கண்டால்(?) பயம் தான்! பாரதி காட்டும் பாவை ஒருத்திக்குக் கண்ணனிடம் காதல். ஆனால் கண்ணனுக்கோ இந்தப் பாவையிடம் வர இன்னமும் அவகாசம் கிடைக்கவில்லை! பாவை நல்லாள் பாவம் கிடந்து தவிக்கிறாள். தூண்டிற் புழுவினைப் போல, கூண்டுக்கிளியின் தனிமை அவளுக்குப் பயம் தருகிறது. இந்த நிலையில் கண்ணுக்குத் தோன்றாமல் ஒரு நாள் கண்ணன் வந்து அவளகத்தைத் தொட்டுவிட்டான்! மனத்தில் புதிய மகிழ்ச்சி புகுந்ததும் அது பழைய பயத்தை விரட்டி விட்டது. பாலும் கசந்து, படுக்கையும் நொந்திருந்த பாவை-

"இச்சை பிறந்ததடி! எதிலும்
இன்பம் விளைந்ததடீ!
அச்சமொழிந்ததடி! சகியே
அழகு வந்ததடீ!''

என்று கும்மாளி போடுகிறாள்!

கண்ணன், தானே அச்சமென்றும் பெயரைக் கேட்டறியாதவன், அவனை நினைப்பவர்கள் மனத்தில் அச்சம் அணுகாது. போர்க் களத்தில், அச்சத்தால், காண்டீபத்தைக் கீழே போட்ட அர்ஜுனன் மனத்தில் தைரியம் மீண்டும் பெருக்கெடுத்தோட கீதோபதேசம் செய்தான் அவன். அந்தக் கண்ணனைக் கண்ணம்மாவாக்கிச் சரணடைந்து பாரதியார் என்ன கேட்கிறார் என்று கேளுங்கள்!

"மிடிமையும் அச்சமும்
மேவியென் நெஞ்சில்
குடிமை புகுந்தன,
கொன்றவை போக்கென்று
"நின்னைச் சரணடைந்தேன்-
கண்ணம்மா!''

என்கிறார்- மிடிமையைப் போக்கக் கடவுளின் அருள் எப்படித் தேவையோ அதே மாதிரி நெஞ்சில் பற்றியுள்ள பயத்தைப் போக்கவும் அவன் அருள் தேவை என்பது இதனால் தெளிவாகிறது. பயம் அத்தனை பலமுள்ள பேய், அல்ல அசுரன்!

பயம் என்பதற்கு உருவம் வரும் போது அது பலவித பயங்கர ரூபங் களை எடுத்துக் கொள்கிறது! பயத்தை எந்த உருவிலும் வணங்கக்கூடாது, அதற்குப் பணியக் கூடாது என்பது பாரதியாரின் அசைக்க முடியாத கொள்கை.

"பிச்சை ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே
நம்மை ஏய்ப்போருக் கேவல்
செய்யும் காலமும் போச்சே"

என்று சுதந்திரப் பள்ளு பாடுகிறார் அவர். வீணருக்குப் பயந்து உழைத்து உடல் ஓயமாட்டோம்.

"சொந்த நாட்டில்
பார்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி-
அஞ்சிடோம்."

"பிச்சை வாழ்வுகந்து
பிறருடைய யாட்சியில்
அச்சமுற்றிருப் போன்
ஆரியன் அல்லன்"

என்று ஆணித்தரமாகக் கவிஞர் அறைந்துள்ளார்.

தைரியோபதேசம் செய்த பாரதியார் தாமே தைரியத்தின் பேருருவாகத் திகழ்ந்தார். அவர் மூச்சுக் காற்றிலே வீரத் தென்றல் விளையாடியது. அவருடைய சிம்ம கர்ஜனைப் பேச்சில் விஜய கோதண்டத்தின் டங்காரம் விசை எழும்பியது அவருடைய கவிதைகளில் ஒரு தனித் தன்மை, ஒரு துணிவு, ஒரு பிடிவாதம், ஓர் ஆணவம் ஒரு கவிச் செருக்கு, மிடுக்கு காணப் பட்டது!

"பேசாப் பொருளைப்
பேச நான் துணிந்தேன்.
கேட்கா வரத்தைக்
கேட்க நான் துணிந்தேன்"

என்கிறார் அவர்.

"சின்னவரும் புலி தன்னையும் அன்பொடு சிந்தையிற் போற்றிடுவாய்" என்று உபதேசம் செய்யும் துணிவை அவரிடம் காண்கிறோம்.

"வலிமைற்ற தோளினாய்
போ போ போ"

"கிலிபிடித்த நெஞ்சினாய்
போ போ போ"

என்று கோழைக்கு விடைகொடுத்து,

"ஒளி படைத்த கண்ணினாய்
வா வா வா"

"உறுதிகொண்ட நெஞ்சினாய்
வா வா வா"

"சிறுமை கண்டு பொங்குவாய்
வா வா வா"

என்று பலவிதமாகத் தைரியசாலிக்கு அவர் வரவேற்பிதழ் வாசித்தளிப்பதைப் பார்க்கிறோம்!

"சாதல் நேரினும் சத்தியம் பூணுமின் தித கற்றுமின்..."

என்று பயமின்றிப் பிரசாரம் செய்வது பாரதி ஒருவர்தான்.

குழந்தைகளுக்கான 'பாப்பாப் பாட்டில்' பயப்படத் தகாதவர்களுக்குப் பயப்படவே கூடாது என்பதை மிகவும் அழுத்தமாகவே கூறுகிறார்.

"பாதகஞ் செய்பவரைக்
கண்டால்-நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்து விடு பாப்பா!-அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!"

என்று கட்டளை இடுகிறார். வயது வந்தவர்களைக் கோழைப் பாதையிலிருந்து திருப்புவது சிரமமாக இருக்கும் என்று பாப்பாக்களுக்கே பாரதியார் தைரிய போதனையைச் செய்கிறார் என்றுசொல்வது தகும்.

பாதகம் செய்தவர்கள் எவ்வளவு பெரியவர்களேயானாலும் அவர்களை நாம் பயப்படாமல் கண்டிக்கவேண்டும் என்று சொல்லும் பாரதி அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது சும்மா இருந்து விடுவாரா? தருமபுத்திரர் எவ்வளவு பெரியவர்? பாண்டவர்களுடன் கௌரவர்களாலும் மதிப்பு வைக்கப்பட்டவரல்லவா அவர்! அவர் திருநீக்கப்பட்டாரின் தொடர்பு கொண்ட கவருடினார் என்பதைப் பாரதி எவ்வளவு அழுத்தமாக நெஞ்சுறத்துடன் கண்டிக்கிறார் பாருங்கள்!

"கோயிற் பூசை செய்வோர்-சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்-வீட்டை
வைத்திழுத்தல் போலும்;
ஆயிரங்களான-நீதி
அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்-சிச்சி!
சிறியர் செய்கை செய்தான்"

இதன் விளைவாகப் பாண்டவர்கள் கௌரவர்களுக்கு அடிமைகளானார்கள்.

கொச்சை மானிடர்களுக்கு அடிமை செய்யாமல் "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ" நாம் விரும்ப வேண்டும். அதற்குப் பாரதி வழியில் நின்று நாம் பயமெனும் பாம்பை-ஓங்கி அடித்தாக வேண்டும்.

பூக்கன்னம்

"உங்க மாமியார் வந்திருக்கா..."

"சரி, மேளம் கொட்டி. தாரை ஊதி, பூர்ண கும்பம் காட்டி வரவேற்றுப் பத்திரமும் வாசியேன்..."

"ஆமா, எங்கம்மான்னு உங்களுக்கு எப்பவுமே இளக்காரம் தான்... ஊறு காய் மாதிரி..."

"மாதர் குல திலக, மங்கை பூஷண மகிதல மகாராணி மாணிக்கவல்லியை நான் அப்படி யெல்லாம் நினைப்பேனே, சே, சே நீ அசடு..."

"ஆமா. நான் அசடு, எங்கம்மா மக்கு, எங்கப்பா லூ..."

"ஏன், நீயா உன் வம்சாவளியை இழுக்கறே? உன் வாயை மூடு, யார் காதிலாவது விழப்போறது..."

"விழட்டுமே, உங்க மனசிலிருக்கிறது அதுதானே, நினைக்கிறதைச் சொன்னா என்ன. அவமானம்? நன்னாத் தான் சொல்வேன்."

"சரி, சொல்லு."

"பார்த்தேளா, உங்களுக்கு மானம் மரியாதை எல்லாம் ஏது? ஊர் சிரிச்சா உங்களுக்கு என்ன? எனக்குத் தான் அவமானம். வெளியே தலைகாட்ட முடியாது. வீணா என் வாயைக் கிளர வேண்டாம். நான் பேசாமே அடைஞ்சுக்கிடக்கறேன்."

"பேசாம அடைஞ்சுக்கிடக்கிறயா?"

"பின்னே புலியா பாய்ந்து கரடியாவா கத்தறேன்? போனைப் போற துன்னு நீங்க ஏன் சொல்ல மாட்டேள்?"

"நீ தானே வந்ததும் வாராததுமா ஆரம்பிச்சே? விடாம அடை மழை மாதிரி பொழிஞ்சு தள்ளறியே?"

"எப்பவுமே உங்களுக்கு என்னைக் கண்டா பிடிக்காது..."

"ஆமா, உங்க வர்க்கத்தைக் கண்டாலே பிடிக்காது...."

"ஐயோ, உள்ளத்திலிருக்கிறது வந்துட்டுது பார்த்தேளா? பிடிக்காத வர்க்கத்துலே எதுக்காகக் கல்யாணம் பண்ணிக்கனும்? இப்பவும் சொல்றேன். உண்மையைச் சொல்லுங்கோ, பிடிக்காட்டா நான் போறேன் ...ஆயுசு பூரா என் அப்பா, அம்மா, தம்பி, அண்ணா என்னைக் கைமேலே வைச்சுண்டு தாங்குவார்கள்..."

"சரி போ!"

"எங்கே போறது; உங்க மனசு என்ன கல்லா, இரும்பா? அவ்வளவு சுலபமா 'போ'ன்னு போயிட முடியுமா? ஆயிரக் கணக்கிலே கொட்டி, என் வாழ்வையும் வீணாக்கிக் கொண்டு..."

"சரி, இரு!"

"பிடிக்காத இடத்திலே எனக்கு என்ன இருந்தாக வேண்டும்; உங்க மனசை உளவறிந்து பார்த்தேன். சே, ரொம்ப மோசம்..."

"உன்னுடையதை விடவா?"

"என் மனசு தங்கம் மாதிரி நானே சொல்லப்படாது. நன்னா இருக்காது. அடுத்த வீட்டுப் பாட்டி சொல்லுவா, 'என்மனசு தங்கம்'னு. பாவம் அவளும் போயிட்டா..".

"பின்னே பொய் சொல்றவா சிரஞ்சீவியா இருப்பாளா, என்ன?"

"உங்களைப் போல் பொய் சொல்றவா கூட இருக்காளா உலகத்திலே? அபாண்டமா சொன்னா போஜனம் கிடைக்காது...?"

"இப்போ மட்டும் கிடைக்கிறதா, என்ன?"

"நான் ஒருத்தி உண்மைபேசறவள், நியாயத்துக்குக் கட்டுப் படறவள், கணவனைத் தெய்வமா மதிக்கிறவள் இருக்கிறதனாலே வண்டி இத்தனை தூரமாவது ஓடறது..."

"மகாலக்ஷ்மி, எப்படியாவது வண்டி ஓடட்டும், தாயே! பக்தன் அளிக்கும் பரிசு இதோ..."

"அடடா! பூவா ஏது அபூர்வமா இருக்கே! மல்லிகை, ரோஜா, முல்லை, பன்னீர்ப்பூ எல்லாமா கம்னு..."

"உங்கம்மா வர்றதை வழியிலே பார்த்தேன். உடனே ஐடியா தோணித்து..."

"அவளுக்கு எப்பவுமே முன்கோபம் தான். வந்ததும் ஏதோதோ சொல்லிக் கொடுத்து என் மனசைக் கெடுத்துட்டுப் போயிட்டா...இன்னும் கொஞ்சம் வாங்கிண்டு வரக் கூடாதோ? சுவாமிக்கும்..."

"சுவாமியா! உன்னைவிட எனக்கு..."

"போங்கன்னா, எப்பவுமே உங்களுக்கு என்னைக் கண்டா...."

"கண்டா.."

"கேலிதான்... பூ வைச்சிண்டிருக்கிறது நன்னாயிருக்கா?"

"பூவை விட, இது மிருதுவா கண்ணாடி போல.."

"சே, வெக்கம். கன்னம் வீணாப் போறது!"

—'ரோஸி'

தத்துவச் சிறுகதை:

உபதேசி

வை-சுப்பிரமணியன்

ஒரு கல்யாணத்துக்குச் சாமான்கள் வாங்குவதற்காக ஜாபிதாவும் பணப்பையுமாகக் கொத்தவால் சாவடிக்குப் போயிருந்தேன். முதல் வேலையாக ஒரு கூலியைப் பிடித்தேன்.

"சாமான் வாங்கி முடித்துக் கோணியிலே கட்டி, கோட்டை ஸ்டேஷன்லே கொண்டு ரயிலேற்றிவிடணும்; என்ன கேட்கிறே?" என்றேன்.

கூலிக்காரன் பொடிப்பயலுமில்லை; வளர்ந்த ஆளுமில்லை. இருபத்திரண்டு வயசு சொல்லக் கூடிய ஒரு நல்ல கட்டை. ஒரு பச்சைச் சிரிப்பு சிரித்தான் அவன்.

"என்னடா சிரிக்கிறே? கூலியைச் சொல்லு. எனக்கு நேரமாவுது"

"நீங்க கொடுக்கிறதைக் கொடுங்க, வாங்கிக்கிடறேன்"

"அட, சொல்லுப்பா. அப்புறம் தகராறு பண்ணப் போறே. கொடுத்ததைக் கொடுன்னு—? ஒரு ரூபாயா? இரண்டு ரூபாயா?"

"ரூபாவெல்லாம் கேப்பனு? ஆறணு குடுங்க"

"சரி, வா!" என்றேன். அவனை ஒரு அப்பாவி என்று அவன் முகமே எனக்கு அறிமுகப்படுத்திவிட்டது. கொத்தவால்சாவடிக் கூலிகளில் பாதிக்குமேல் 'மத மத' என்ற உடம்பைப் போட்டுக் கொண்டு கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு சுற்றுவார்களே தவிர, கூலி விஷயத்தில் அரை ரூபாய்க்கு மேல் கேட்டு நான் பார்த்ததில்லை. வேலையோ, ஒரு ரூபாய் ஒண்ணறை ரூபாய்க் கூலிக்குள்ள பிசாசு வேலைதான். நூறு வாழைக்காய்களின் கனமே போதுமே கழுத்து நரம்பை முறுக்கிவிட! நாம் முழுவதும் தூக்கிப் பார்த்ததில்லை; கூலியின் தலையில் சுமை ஏறத் தூக்கிவிட்டு மட்டும் தானே பார்த்திருக்கிறோம்!

சாமான் வாங்கும் படலம் ஆரம்பமாயிற்று. ஜாபிதாவைக் கையில் பிடித்துக் கொண்டு கூட்டத்தில் முன்னேறினல் நாலடி என்னைப் பின்னே கொண்டு தள்ளிற்று, கும்பலின் நெரிசல். இரண்டு 'அயிட்டங்'களை வாங்கிக் கூடையில் போட்டதும் என் கவனம் கூலிக்காரனையே சுற்றியது. எங்கே கூட்டத்தில் நழுவி விடுவானே என்ற பயம். ஆனல் அவனே, "லிஷ்டுபடி சாமான் சொல்லுங்க, சாமி. நான் எதெது எங்கேயிருக்குதுன்னு காட்டுகிறேன்" என்ருன்.

அவன் உதவியினல்தான் முழுச் சாமான்களையும் வாங்கி முடித்தேன். நான் கொடுக்கவிருக்கும் ஆறணு அவன் கொத்தவால் சாவடிக்குள் நடந்து கொண்ட லாகவத்துக்கும் என்னை 'நாணு'கச் சாமான்களுடன் வெளியே கொணர்ந்து பத்திரமாகச் சேர்த்த திறமைக்கும் பாதிக் கூலியாகக் கூடத் தேருது. இன்னும் சுமைக்குக் கணக்குப் பண்ணிக் கொடுத்தால் ஒரு முழு ரூபாய் கொடுக்கலாம்.

கோட்டை ஸ்டேஷனை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம்.

"எங்கே ஸார் போகணும் நீ?"—சாமி, ஸார், நீ எல்லா வார்த்தைகளையும் மூட்டைக்குள் கலந்து கிடந்த கறிகாய் வகைகளைப் போல் கலந்து விளித்தான் அவன்.

"மாம்பலமப்பா"

"எனக்கும் ஒரு டிக்கட்டு எடுத்திடு ஸார். எப்படியும் மாம்பலம் டேசன்லே ஒரு கூலியோ ரிக்ஷாவோ தானே பிடிச்சுத் துட்டு அவுக்கப்போறே?... நானே கொண்டாந்துடறேன். எனக்கு மொத்தமா எதனு போட்டுக் கொடுத்திடு."

"வேண்டாம்பா. ஸ்டேஷனுக்கு

"வையகம் காப்பவரேனும்-சிறு வாழைப் பழக்கடை
வைப்பவரேனும்,
பொய்யக லத்தொழில் செய்தே-பிறர் போற்றிட வாழ்பவர்
எங்கணும் மேலோர்"—பாரதி வாக்கு.

யாராவது கை ஒழிஞ்ச ஆள் வந்திருப் பான்" என்றேன்.

ஒரு நிமிஷம் மௌனம்.

"எனக்கு எதனு வேலே பார்த்துக் குடுங்க ஸார் மாம்பலம் பக்கமா. என்னு வேலேயானும் தகாதில்லே."

என்னேடு நெருங்கிய உறவுக்கே அவன் பேச்சில் நூல் பிடித்துவிடுவான் போலிருந்தது.

"வேலேயாவதப்பா! அங்கே உன்னேப் போல ஆத்மாக்கள் சுற்றிக் கொண்டிருக்குகள். எந்த வேலே உனக்காகக் காலியாக இருக்கப் போகிறது ?... ஏன், இந்த வேலேக்கு என்ன உனக்கு ?..."

"இதிலே ரொம்ப பேஜாரு இருக்கு, சாமி. சம்பாரிக்கக் கூட மாட்டானுவ மைத்த கூலிக்காரனுவ. ஒவ்வொரு தவா அடிச்சுச் கூட அடிச்சிருவானுவ..."

"ஏன்? "

"குறைச்ச கூலிக்கு நான் ஒத்துகிடறேன்று அவனுவளுக்கு வெறுப்பு!"

"கிடைக்கிறது போதும்னு தான், ஸார், ரெண்டு வேளேயிலுமா சேர்ந்து ஒண்ணு,ஒண்ணறை சம்பாரிச்சுக் கிடுவேன். என் ஒண்டிக்கி இது பத்தாதுங்களா?..."

என்னுள் பொருளாதார உணர்வு தலே தூக்கி அவனே 'யாரப்பா? என்ன சொல்கிறே?' என்று கேட்கத்தொடங்கியது. நமது மனேபாவத்துக்குக்கும் அப்பாற்பட்ட ரகசியத்தையல்லவா அவன் பொருளாதார ரீதியில் வைத்துச் சொல்கிறன்?

"உனக்கு எந்த ஊர், சொந்த ஊர்?"

"பெண்ணுடமுங்க. விருத்தாசலமில்லே, அதுக்குப் பக்கத்திலே."

"ஊரைவிட்டு ஏன் இங்கே வந்திட்டே ?"

"அண்ணன் சண்டை போட்டிடுச்சு, அண்ணி பேச்சைக் கேட்டுகிட்டு. ஊட்டைவிட்டே ஓடியாந்திட்டேனுங்க. நாலு வருசமாச்சு இங்கே வந்து"

"சம்பாதிப்பதிலே மிச்சம், கிச்சம் வைப்பியா ?"

"ஒரு நாளேக்கி ஒண்ணு, அரைன்னு மிச்சம் விழும். ஒரோரு நாள் கூலியே இல்லாமபோயிடும். மிச்சம் விழற துட்டையெல்லாம் தெரிஞ்ச கடைக்காரங்க கிட்டே கொடுத்து வைப்பேனுங்க..."

"எவ்வளவு சேர்த்து வைச்சிருப்பே?"

"இருபது ரூபா எட்டணு இருக்குதுங்க. இந்த மாதம் இன்றைக்கி என்னுங்க தேதி?.."

"இருபத்தாறு தேதி."

"இந்த மாதம் முதல் தேதியே பிடிச்சு மிச்சம் ஆன துட்டுங்க, இது"

"போன மாசம் அதுக்கு முந்தின மாசம் மிகுந்த பணத்தை எல்லாம் என்ன பண்ணினே ?"

"எல்லாம் இருக்குங்க. ஆனு வெவ்வேற இடத்திலே கொடுத்து வைப்பேனுங்க. மூணு மாசம் முப்பது ரூபா மிஞ்சிச்சு. அதை ஒரு தேங்காய்க் கடைக்காரரு

கிட்டே கொடுத்து வச்சிருக்கேனுங்க. போன மாசம் பதினைஞ்சு ரூபா ஆருணுதான் மிச்சம். உடம்பு முடியாமெ பத்துநாள் படுத்துட்டேன். அதனாலே துட்டு சம்பாரிச்சதே கொஞ்சம்தான். அந்தத் துட்டை ஒரு வாழைப் பழக் கிடங்கு சாயபுகிட்டே கொடுத்து வச்சிருக்கேனுங்க. இந்த மாசம் ஒரு டீ ஓட்டல் நாயினாகிட்டேயிருக்கு மொத சொன்னேனே அந்த இருபது ரூபாயும் எட்டணாவும்...''

மூட்டையைத் தூக்கிக் கொண்டு பெருநடையாகப் போய்க்கொண்டே தான் பேசினான் அவன். தலைச்சுமை சுவாசத்தை மிஞ்சிப் பேசுவதற்காக அவன் தூக்கலான குரல் எடுத்துத் தான் பேசிக் கொண்டு வந்தான்.

என்னால் அவன் பெருநடைக்கு ஈடு கொடுத்து நடக்க முடியவில்லை; ஓடினால்தான் அவன் கூடப் போக முடியும். அதனால் அவன் நிலையைப் பற்றிக்கூட முதலில் சிந்திக்காமல், "ஓடாதே; மெள்ளப் போ!" என்றேன்.

"சுமையில்லிங்களா? அழுத்துது. அதுக் கென்ன, மெள்ள வாரேனுங்க, ஸார். பாவம், உங்களாலே என் நடைக்கு சமாளிச்சு வர முடியுமா?..."

அவன் நடையை மட்டும்தானா சமாளிக்க நான் திணறினேன்? அவன் தன் வாழ்க்கையின் சேமிப்புக் கதையைச் சொல்லிக் கொண்டு வந்ததைக் கேட்ட நான் மேலும் அந்த 'ஸப்ஜெக்டில்' பேசக்கூட அல்லவா முடியாமல் வாயடைத்துப் போய்விட்டேன்! அவன் சொல்வது உண்மையாயிருந்தால் அவனை ஒரு வேதபுருஷன் என்று சொல்ல வேண்டும்! முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்குகிற எனக்கும் தான் வாழ்க்கை விரிந்து கிடக்கிறது என் முன்னால். எதிர்கால வாழ்க்கையை விட்டுத் தள்ளிச் சொல்கிறேன். மூன்று இடங்களில் அவன் சேமிப்புச் செய்து வைத்திருக்கிறான்; எனக்கும் மூன்று இடங்களில் 'லேவாதேவி' நடந்திருக்கிறது. ஒரு இடத்தில் எழுநூறு ரூபாய்; இன்னொரு இடத்தில் ஆயிரத்து நானூறு ரூபாய்; ஆபீஸ் 'கோவாபரேடிவ் ஸொஸைடி'யில் அறுநூறு ரூபாய்; எல்லாம் கடன்!

ஆனால், அவனைப் போலன்றிக் குடும்பம் ஒன்று என் கழுத்தை வளைத்துக் கொண்டிருக்கிறது. குடும்பமாயிருந்தால் தான் என்ன, மாதா மாதம் வருகிற முந்நூறு ரூபாய் போதாதா அதன் வாயை அடைக்க?

சர்க்காரில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து, இந்தியாவில் அச்சடிக்கிற பணம் போதாமல் வெளிநாடுகளைப் பார்த்துக் கையை நீட்டுகிற நிலையைச் சர்க்காரே ஏற்படுத்தி வைத்திருக்கிறது. இந்த மாதிரியான திட்டங்களுள் புகுந்து அலசிப் பார்த்தால் இந்தக் கூலிக்காரனைப் போன்ற ஆத்மாக்களின் முன்னேற்றத்துக்காகத் தொழில் திட்டங்கள் வகுத்து இவர்கள் 'வாழ வழி' காண்பிக்கப்பட இருப்பதாக நாம் தெரிந்து கொள்வோம். ஆனால், இவன் நாலு பேரை வாழ வைப்பான் போலிருக்கிறதே! திட்டக் கமிஷனில் பொருளாதார நுணுக்கத்தை ஆராயும் நிபுணரையும் இவனையும் எடை போட்டால் இவன் ஒரே அடியாய்த் தட்டில் உயர்ந்து நிற்பான் போலிருக்கிறதே!...

என் சுயநலம் குறுக்கிட்டு என்னையும் இவனையும் எடை போடுவதை இன்னும் தொடர்ந்தது. மேலே கேள்விகளைக் கேட்டேன். கோட்டை ஸ்டேஷன் சமீபித்துவிட்டது. என்னை அவன் ரயிலேற்றிவிடுமுன் அவன் வாழ்க்கை நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டுவிட வேண்டுமென்று பறந்தது என் உள்ளம்.

"நீ சம்பாதிக்கிற பணத்துக்கு உனக்கு வேறு என்ன செலவு! வயத்துக்குச் சரியாகச் சாப்பிடமாட்டியா?"

'சாப்பிடாமெ என்னங்க? சாப்பிடத் தானேங்க சம்பாரிக்கிறது! மொத மொத வவுத்துப்பாடுதான். காலையிலே—டீ ஓட்டல் ஒண்ணு சொன்னேனுங்களில்லையா?—அதிலே 'நாஷ்டா' பண்ணிடுவேனுங்க. தெருக் கடைங்க, கூடைக்கார அம்மாளுங்க கிட்டவெல்லாம் எதுவும் வாங்கித் துண்ண மாட்டேனுங்க. அப்புறம் கூலி பிடிக்கப் போனா மதியம் ஒரு மணிக்குத் திரும்புவேன். பாப்பான் ஓட்டல்லே தானுங்க சாப்புடுவேன். பொழுது சாயச் சொல்ல மறுபடி ஒரு தபா டீ ஓட்டல்லே 'நாஷ்டா' பண்ணுவேனுங்க. ராத்திரி வேளையிலே புன்னு

போரை, டீ இது எதனு பாத்துக்கிடு வேன். இத்தோட சரி. சோறு சாப்பிட மாட்டேன் வவுறு முட்ட !"

என்னைக் கொன்றது அந்த 'முட்ட' என்ற வார்த்தை. பாதி நாட்களில் ராத்திரி வேளைகளில் சாப்பிடுவது பூச்சாண்டிக்குப் பயந்து குழந்தைகள் கண்கள் பிதுங்க, நெஞ்சு எதிர்க்கச் சாப்பிடுகிறாற்போல்தான் நானும் சாப்பிட்டுத் தொலைப்பேன். 'புளித்த ஏப்பம்' நெஞ்சுக்கரிச்சல், வயிறு 'ஹெவினஸ்' என்று இராவேளைச் சாப்பாட்டுக்கு இலையில் உட்காருமுன் வீட்டுப் பட்டத்தரசியிடமோ வரும் 'விஸிடர்'களிடமோ பெருமையாகவோ அலுத்துக் கொண்டோ சொன்னாலும் 'சாப்பாடு வேண்டாம்' என்று சொல்லி விட எங்கே மனம் வருகிறது? அதனால் தான் தொப்பைக்கு மேல் சட்டையின் முன்புறம், நீர்வீழ்ச்சி வளைந்து விழுகிற மாதிரி சரிந்து மடங்கி விழுகிறது!

"உன் பேர் என்னப்பா? அதை இத்தனை நாழி கேட்கவில்லையே நான்!"

"என்னை மந்திண்ணு கூப்பிடுவாங்க ஸார். என் பேர் மந்திரமூர்த்தி, முழுப் பேரையும் சொல்ல எல்லோருக்கும் சோம்பலாயிருக்குதாங்காட்டியம்!"

"மந்தியா!" சிரித்துக்கொண்டேன் நான்.

"பாத்தியா ஸார்! உனக்குக்கூடச் சிரிப்பு வருதல்ல!"

நான் எதற்குச் சிரித்தேன் என்று அவனுக்கே எங்கே தெரியப் போகிறது! சமூகத்தில் ஒரு பொன்மணியாக இருக்க வேண்டிய ஆத்மா மூட்டை தூக்கிக் கூலி பெற்றுப் பிழைத்து ஒளி மங்கிக் கிடக்கிறதே என்றும் அதன் பெயரும் அதற்கேற்றாற்போல் நேர்மாறாக மாற்றி அழைக்கப்படுகிறதே என்றும் நினைத்ததும் இந்த ஒற்றுமையைக் கண்டு எனக்கு ஒரு ஆயாசச் சிரிப்பு வந்தது; சிரித்தேன்: அதை விளக்கினால் அவனுக்கு எங்கே புரியப் போகிறது?

"நீ ஸினிமா பார்க்கிறது உண்டா?"

"போக மாட்டேனுங்க; அங்கே டிக்கட்டு வாங்க வரிசையா நிக்கசொல்லப் பின்னாலே நிக்கிறவனுவ ஊசியாலே குத்துவானுங்களாமே!"

"யார்ரா சொன்னு அப்படி?"

"தேங்காக்கடைக்காரச்செட்டியாரு"

"யாரு, நீ பணம் கொடுத்து வச்சிருக்கையே அவரா?"

"அவரே தாங்க."

ஏன் சொல்ல மாட்டார்? பணப் புரட்டலுக்குப் பையன் பணம் சேமித்துக் கொணர்ந்து தரும்போது அவர் இந்த மந்திரம் தந்திரம் கூடக் கற்று வைத்துக் கொள்ளவில்லையென்றால்...?

"ஒரு படம் கூடப் பார்த்ததில்லை யாடா?"

"ஒண்ணுகூடப் பார்த்ததில்லீங்க. எப்பவோ சின்னப்புள்ளையிலே எங்கம்மா விருத்தாசலத்துக்குப் போயிருக்கச் சொல்ல 'பவளக்கொடி' யின்ற படத்துக்குக் கூட்டிப் போனுங்க என்னை..."

"உன்னை இடுப்பிலே தூக்கி வச்சுக்கிற நாளிலே இருக்கும்டா அப்பாவி!"

"இருக்கலாமுங்க"

"உன் சகாக்களாம் 'உன்னை ஸினிமாவுக்கு வாடா'ன்னு கூப்பிடறதில்லையா?"

"கூப்பிடுவானுவ, ஸார். சிலப்போ துட்டும் கடனுக் கேப்பானுவ. நான் குடுக்கிறதில்லே. சம்பாதிக்கிற துட்டே அவனுவளுக்கு மிஞ்சறதில்லே. கண்டபடி காக்கா ஓட்டல்லேயும் தர்பார் ஓட்டல்லேயும் துண்ணுவானுங்க, வர்ற ஸினிமா பூரா பாத்துத் தள்ளுவானுவ. கடன் கொடுத்தா எங்கிட்டிருந்து திருப்பித் தருவானுவண்ணுதான் நான் கொடுக்கிறதில்லே. அதனால் தான் கூலி புடிக்க வர்ற இடத்திலே வந்து மிரட்டுவானுவ...நான் மொத சொல்லலிங்களா உங்ககிட்டே?..."

காதில் வேதம் ஓதிக்கொண்டே இருந்தாற் போலிருந்தது. நமது இனங்கெட்ட வாழ்க்கையைப் பக்குவப்படுத்திக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தை இவன் மூலம் அளிக்க ஏதோ ஒரு சக்தி இவனை என்னிடம் கூலியாக அனுப்பியிருந்தாற்போலப் பட்டது எனக்கு. சுமை! சுமப்பதற்குத் இவனுக்குக் கூலி கொடுக்கலாம்? இதிகாசம் படித்து விளக்கம் தருகிற ஆஸ்திகப் பூமானுக்கு நிகராக வாழ்க்கையை உடைத்துப் பாடம் சொல்லித் தந்த அவனுக்குக் காணிக்கை என்ற பெருமான சமர்ப்பணம் ஏதாவது கொடுத்தால் என்று என்ன தோன்றிற்று...!

அவன் வேலை ஏதாவது பார்த்துத்

தரும்படி கேட்டானே ? அதில்தானே பேச்சை ஆரம்பித்து வைத்தான் !...

"ஏதாவது வேலை பார்த்துக் கொடுத்தால் ஒப்புக் கொண்டு செய்வாயா ?... முதலிலே கேட்டியே !"

அவன் லேசாகப் புன்னகை செய்தான். கூலி, சுமை, டீ ஹோட்டல் நாஷ்டா, சேமிப்பு இவற்றைத் தவிர அவன் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படும் அம்சமாக ஒரு புது விஷயம் முளைத்து இதயத்தையே போய்த் தொட்டதால் இதயம் மலர்ந்த மலர்ச்சியின் அறிகுறியா அந்தப் புன்னகை?

"என்ன வேலைங்க? தினக்கூலியா, மாதச் சம்பளமா ?"

அதில்தான் அவனுக்குக் குறி. மாதச் சம்பளத்தை விரும்புவானா அவன் ? மிச்சம் எப்படிப் பிடிப்பது அந்தக் கதை ஏற்பட்டுவிட்டால்?

"உனக்கு எப்படி வேணுமோ, அப்படிப் போட்டுத் தரச்சொல்றேன்."

"சரிங்க"

கோட்டை ஸ்டேஷன் வந்தது. இரண்டு பேருக்குமே டிக்கட் வாங்கினேன். அவன் முதலில் 'பிளான்' போட்டபடி. இருவரும் பிளாட்பாரத்துக்குள் வரவும் வண்டி வரவும் சரியாக இருந்தது.

கூட்டம் தாளவில்லை. தினசரி இரண்டு முறை தண்டனையைச் செலுத்திவிட்டு வருகிறாற்போல் இந்த எலெக்ட்ரிக் வண்டியில் போயும் வந்தும் கூட்டத்தைக் கண்டால் குழந்தை நடுங்குகிற மாதிரி நடுக்கம்தான் எனக்கு. 'எப்படி ஏறி...' என்றோ அல்லது 'எப்படி இறங்குகிறது...' என்றோ தவிப்பதில் முதல் ஊதல் ஊதிவிடும். இந்தக் கொத்தவால்சாவடிக் குண்டு, தலைமூட்டையுடன் ஏறி உள்ளே இடம் பிடித்து அதன்மேல் உட்காரவும் உட்கார்ந்துகொண்டுவிட்டது.

வெட்டிக் கொட்டின கறிகாய்த் துண்டங்கள்மாதிரி வண்டிக்குள் அவன் ஒருபுறமும் நான் ஒருபுறமுமாகச் சிதறிவிட்டோம். வண்டியின் ஓட்டம் ஒன்றுதான் அப்போதைக்கு முக்கியமாகத் தெரிந்தது. அவரவர் மனோ ஓட்டம், அலுவல் எல்லாவற்றையும்விட, வம்பும், பேச்சும், சிரிப்பும்...இவை மட்டில்

கவிஞன் குரல் :

இருளிடை மின்னல் !

"புலவர்களே ! மின்னலைப் பாடுவோம் வாருங்கள், மின்னல் ஒளித் தெய்வத்தின் ஒரு லீலை. ஒளித் தெய்வத்தின் ஒரு தோற்றம். அதனை யவனர் வணங்கி ஒளி பெற்றனர். மின்னலைத் தொழுகின்றோம். அது நம்மறிவை ஒளியுறச் செய்க. மேகக் குழந்தைகள் மின்னிற்றுச் சொரிகின்றன. மின்சக்தி இல்லாத இடமில்லை. எல்லாத் தெய்வங்களும் அங்ஙனமே. கருங்கல்லிலே, வெண் மணலிலே, பச்சை இலையிலே, செம் மலரிலே, நீலமேகத்திலே, காற்றிலே வரையிலே – எங்கும் மிங்கும் மின் சக்தி உறங்கிக் கிடக்கின்றது. அதனைப் போற்றுகின்றோம்,

நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக. நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப்பாய்க. நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக. நமது பாட்டு மின்னலுடைத்தாகுக. நமது வாக்கு மின்போல் அடித்திடுக !"

—'வசன கவிதை'

ஒருபுறம்-ஆனால், வண்டியின் ஓட்டத்தின் சுருதியோடுதான்.

மாம்பலத்தில் இறங்கினோம். பத்து நிமிஷத்தில் கல்யாண வீட்டையடைந்தோம்.

போகும்போது ஒருமுறை வழியில் கேட்டான் மந்திரமூர்த்தி.

"எப்போ பிடிச்சுங்க வேலைக்குப் போகணும் ?"

"இந்தக் கல்யாணச் சந்தடி கொஞ்சம் ஓயட்டும், நாளைக்குக் கல்யாணம். அதன் பிறகு இரண்டுநாள் எனக்கு 'ரெஸ்ட்' வேணும். அதற்கு அப்புறம் உன்னைக் கொண்டு சேர்த்துவிடறேன்."

"எங்கேங்க ?"

"செங்கல்பட்டிலே ஒரு தெரிஞ்ச ஆபீஸர் இருக்காரு. அவர்கிட்டே ஒரு 'வாட்ச்மேன்' வேலை போட்டுத்தரச்

சொல்றேன்…”

அவன் ஒன்றும் பதில் பேசவில்லை. வண்டிப் பிரயாணத்தின் போது அவன் ஏதோ தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்ததைக் காட்டிய நிலையிலிருந்த அவனது முகம் இன்னமும் அப்படியே தானிருந்தது.

கல்யாண வீட்டின்முன் சாமான்களைக் கொண்டுவந்து இறக்கினான் மந்திரமூர்த்தி. இரண்டு ரூபாய் கூலி கொடுத்தேன்.

“சில்லறை இல்லிங்க. நீங்கதான் இன்னைக்கிப் போணி”

“இந்த ரெண்டு ரூபாயையும் வச்சுக்க, டாக்ஸியிலே வந்திருந்தேன்னா மூணரை ரூபாய் ஆகியிருக்கும் எனக்கு...இந்தக் கல்யாண வீட்டிலேயே இரண்டு நாள் அதை இதைச் செஞ்சுகிட்டு இரு. அதற்கும் கூலி தரச் சொல்றேன். அப்புறம் செங்கல் பட்டிலே கொண்டுபோய் உன்னை வேலையிலே சேர்த்துவிடறேன்”

“இல்லிங்க...”

“என்னை இல்லிங்க?...”

“என்னமோ சொன்னேனுங்க; எனக்கு வேலைகீலை ஒண்ணும் வாணாமுங்க, ஏதோ இப்ப ஆண்டவன் படியளக்கிறார்...”

“நல்ல வேலையாப் போட்டுத்தரச் சொல்றேம்ப்பா...”

“எனக்கு அந்தமாதிரி வேலையின்னா பயமாயிருக்குங்க, வேண்டாங்க. நான் கொத்தவால் சாவடிக்கே போயிடறேங்க”

அவன் கெஞ்சுகிற பாவனையில் விடுதலையை எதிர்பார்த்து நிற்கிற நிலையில் இரு கைகளையும் எடுத்துக் கும்பிட்டான் அவன்.

“சரி; உன் இஷ்டம்” என்றேன்.

அவன் திரும்பி நடந்தபடி என்னைத் திரும்பித்திரும்பிப் பார்த்தான். எனக்கு ஒரு உபதேசியைப் பிரிந்த உணர்வு உண்டாயிற்று. அவன் மறைந்துவிட்டான்.

வாழ்க்கையைப் புடம் போட்டுப் பார்த்துவைத்திருந்த தனது உலகத்துக்கு அவன் போய்விட்டான்; புரியாத புதிராக, நித்ய கண்டமாக விளங்கிய என் உலகத்துக்கு நானும் மீண்டுவிட்டேன்.

வரலாற்று நாடகம் :

அஸ்தமனம்

காட்சி—1

இடம்:-மகமது கோர் பாசறை

உறுப்பினர்:-முகமது கோர், ஒற்றன்.

ஒற்றன் :--...ஜெயச் சந்திரன் தயாராகி விட்டான். மகள் அபகரிக்கப் பட்டு:கனோஜின் புகழ் பாழ்பட்டதால் ஏற்பட்ட வெறி மட்டுமல்ல, அவன் பிருதிவி ராஜை அழிக்க முற்படுவது--தங்கள் வார்த்தை ஜாலத்தில் மதியை இழந்து டெல்லியையும் கனோஜோடு இணைத்துக் கொள்ளலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறான் மடையன். உங்கள் திட்டம் எங்கே புரியப் போகிறது அவனுக்கு. ம், அப்போது ஒன்றுபட்டிருந்த வீர ராஜ புத்திரர்களெங்கே, இப்போது ஒருவரை ஒருவர் அழிக்க முற்படும் இவர்களெங்கே?...

கோர்:-...முதல் முறை வந்த நாம் தோற்றுவிட்டோம். இப்போது இரண்டாவது முறை!--ராஜபுத்திரர்களுக்குள் பிளவு ஏற்பட்ட நிலை! நல்ல சந்தர்ப்பம்! நான் எதிர்பார்த்தது நடந்து விட்டது. இனி வெற்றி கிட்டுவது உறுதி!..,பிருதிவி...இம்முறை நீ அழிவது நிச்சயம்...பரம்பரை, பரம்பரையாக ஆண்டு வரும் இந்தியர்களுக்கு ஓர் முற்றுப் புள்ளி--மொகல் சாம்ராஜ்யத்தின் உதய ஆரம்பம்!-- ஆம்!!... ஹிந்துசாம்ராஜ்யத்தின் அஸ்தமனம்!...

[கைகள் உறைவாளின் மேல் செல்கின்றன.]

—காட்சி மாறுகிறது;

காட்சி—2

இடம்:-டெல்லி பிருதிவிராஜ் அரண்மனை.

உறுப்பினர்:-பிருதிவிராஜ், அமைச்சர்.

[மாலை நேரம். பிருதிவிராஜ், மேல் மாடியில் நின்றவாறுவானத்தைப்பார்த்துக்கொண்டிருக்கிறான். மங்கலான மஞ்சள் வெயில் அவன் முகத்தில் பட்டு அவனது கலக்க.நிலையைவெளிக்காட்டுகிறது. அருகில் அமைச்சர் நிற்கிறார்.]

பிருதிவிராஜ்:-அமைச்சரே, ஆதவனின் அஸ்தமனம் ஏதோ ஒருவிதக் கலக்கத்தை உண்டாக்குகிறது.....

அமைச்சர்:-என்றும் மறைவது போலத்தானே இன்றும் மறைகிறான். கலக்கமடையக் காரணமே இல்லையே?

பிருதிவி :-அதுதான் ஏன் என்று புரியவில்லை? என்றுமில்லாமல் இன்று மட்டும் ஏன் அப்படி?...அதுமட்டுமல்ல-உள்ளத்தின் தளர்ச்சி.....

அமைச்:-(குறுக்கிட்டு) அரசே...எப்போது பாயலாம் என்று படையுடன் காத்துக் கிடக்கும் கோரி--அவனுக்கு ஒத்துழைக்கும்தங்கள்தேவியின்தந்தை ஜெயச்சந்திரன்--நமக்கு உதவியளிக்க மறுத்த மற்ற ராஜபுத்திர சிற்றரசர்கள்!--இந்தச் சூழ்நிலையில் உள்ளத்தைத் தளர விடுவது உகந்ததாகாது.

பிருதிவி:- (பெருமூச்சோடு) உகந்ததாகாதுதான் அமைச்சரே, உகந்ததாகாதுதான்.....

[சேவகன் ஒருவன் வருகிறான்]

சேவகன்:-(பணிந்து) மீவாரிலிருந்து தூதுவன்....

பிருதிவி:-(மகிழ்ச்சியுடன்) மீவாரிலிருந்தா?....

அமைச்:-தாமதிக்காமல் வரச்சொல்,

[சேவகன் போகிறான்]

...மன்னர் பெரும, தங்கள் சகோதரியின் கணவர் சமார்சிங் இருக்கும்வரை நீங்கள் கலக்கமடைவதில் அர்த்தமே இல்லை....

[தூதுவன் வந்து மண்டியிட்டுப் பணிகிறான்.]

தூதுவன்:-தங்களின் லிகிதம் கண்டார் எம் மன்னவர். போருக்கான ஆயத்தங்களை எல்லாம் உடன் முடித்து விட்டார். நாளைக் காலை இங்குப்படையுடன் வருகிறார்.

பிருதிவி:-நாளைக் காலை?....

தூது:-ஆம்....முழங்கட்டும் போர்ப் பறை!--அ:ம் மொகலாயனின் செவி அதிருமட்டும் முழங்கட்டும் போர்ப் பறை!--இது மன்னரின் ஆணை....

—காட்சி மாறுகிறது.

" தாய்நாட் டன்புறு தலையர்இங்கு இருமின் !
மாய்நாட் பெருமையின் மாய்ப்பவா இருமின் !"—தேசிய கவியின்தீர்ப்பு

காட்சி—3

இடம்:-மீவார்--அரண்மனை அந்தப் புரம்.

உறுப்பினர்:-சமார்சிங், பிரீதா.

சமார்சிங்:-தூதுதன் சென்றிருப்பான். இந்நேரம் முரசுகள் அதிரும் டெல்லியில்!...மனந்தளர்ந்த உன் சகோதரனுக்குத் தூதுவன் கொண்டு சென்ற செய்தி மகிழ்ச்சியளித்திருக்கும். படைகளைத் தயார் செய்வதில் முனைந்திருப்பார்...

[அவன் பேசிக் கொண்டிருக்கிறான். பிரீதா தூணில் சாய்ந்தவாறு வெறித்துக் கிடக்கும் அந்த ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிக்கிறாள். சமார்சிங் அருகில் வருகிறான்.]

...என்ன பிரீதா ஒரே மௌனம்? எதைப்பற்றிச் சிந்தனை?...(கன்னத்தைப் பிடித்துத் திருப்புகிறான்) பிரீதா!. என்ன இது, கண்களில் கண்ணீர்?...

[கீழ் உதட்டைக் கடித்தவாறு கண்களைக் கீழே தாழ்த்துகிறாள். இரு துளி கண்ணீர் அவன் கையில் விழுகிறது]

...ஏன் பிரீதா அழுகிறாய்?,..

[அவள் முகத்தை உயர்த்தி அவனைப் பார்க்கிறாள்கண்ணீர் 'பொலபொல'வென்று வழிகிறது]

பிரீதா:-...சமா..ர்!...

[அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொள்கிறாள்]

சமார்:-(கூந்தலைத் தடவியவாறு) பிரீதா!...

[சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது.]

....நாளைக் காலை படையுடன் டெல்லிக்குச் செல்லவேண்டும். நீ இவ்வாறு கண் கலங்கினால்...

பிரீதா:-...நம் படையை மட்டும் அனுப்புங்கள்--நீங்கள் போக வேண்டாம்...

சமார்:-என்ன! நான் போக வேண்டாமா?...

பிரீதா:...நீங்கள் போகக் கூடாது. .

சமார்:-பிரீதா....நீயா பேசுகிறாய்?--சமாரின் மனைவி பிரீதாவா பேசுவது?.. "உள்ளந் தளராது உவகையுடன் செல்லுங்கள்--குள்ளமனத்தினராம் அக்கொடியவரின் உடல் கிழித்து--உயிர் குடித்து வெற்றியோடு திரும்புங்கள்... வெற்றிக்குப் பரிசு ஆயிரம் முத்தங்கள் அத்தான்!"-என்று கூறிக் களிப்புடன் களத்திற்கனுப்பிய என் பிரீதாவா கூறுகிறாள், ராஜபுத்திர வீரர்களுக்கு, மாசு தூவும் அந்த வார்த்தையை?--போகவேண்டாம்!..போகவேண்டாம்! நிஜமாகவா பிரீதா?...

பிரீதா:-ஆமாம்...

சமார்:-என்ன ஆமாம்?... (படபடப்போடு) முதல் முறை படுதோல்வி அடைந்தும் இம் முறை போருக்கு நிற்கிறான், நாட்டை நாசமாக்கும் நச்சு எண்ணத்துடன். பரம்பரை பாத்யதையாக ஆண்டு வரும் இந்தியரைப் பாழ்படுத்த விரும்பும் அப்பாதகனை அழிக்க நான் போக வேண்டாம்?........உள்ளம் தளர்ந்த உன் சகோதரனுக்கும் உதவியளிக்க நான் போக வேண்டாம்?.....ராஜபுத்திர வீரப் பண்புக்குக் களங்கம் ஏற்படுத்துவது போல் நான் இங்கு இருந்து கொண்டு, ஒரு முகமதியனால் நாடு ஆக்கிரமிக்கப் படுவதைக் காணத்தான் வேண்டுமா!...

பிரீதா:-அத்தான்.!

[அழுதவாறு அவன் கால்களில் விழுகிறாள். சமார் அவளைத் தூக்கி நிறுத்துகிறான்.]

சமார்:—பிரீதா, நன்றாக யோசித்துச் சொல், நீ கூறுவது சரிதானா என்று. நம் ராஜபுத்திர மன்னர்களுக்குள் ஏற்பட்ட ஒற்றுமைச் சீர்குலைவைப் பயன்படுத்தி நுழைய நினைக்கிறான் கோரி. குறுநில மன்னர்கள் எல்லாம் அவன் பக்கம்! மேலும், ஜெயச்சந்திரன் வேறு பிருதிவியை எதிர்க்கிறான். இந்நிலையில் நானும் போகாவிட்டால்.. என்ன

முடிவு கிடைக்கும் நம் இந்தியப் பேரரசுக்கு?... அழிவது டெல்லி,' மீவார் மட்டுமல்ல—முடிவில் இந்திய சாம்ராஜ்யமே அழிக்கப்பட்டுவிடும்...

பிரீதா :— மனச்சஞ்சலத்தினுல் ஏற்பட்ட சபலத்தால் - இல்லே, அச்சத்தால்—அவ்வாறு தவறிக் கூறிவிட்டேன். மன்னித்து விடுங்கள்... மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள் - வென்று திரும்புங்கள்...

சமார் :-*பிரீ !...*

பிரீதா :-*அத்தா...ன் !...*

[இருவரும் தழுவிக் கொள்கிருர்கள்.]

(காட்சி முடிகிறது.)

காட்சி :—4

இடம் :-*டெல்லி-அரண்மனே.*

உறுப்பினர் :-*சமார்சிங், பிருதிவி ராஜ்.*

சமார் :-பிருதிவி, மனந் தளரும் நேரமா இது?...—ஒரு மன்னனின் கடமை என்ன என்பதை நீ நன்கு



அறிந்திருந்தால் இவ்வாறு மனம் தளற மாட்டாய். மக்களைப் பாதுகாப்பதே மன்னனின் முதல் வேலை. எதிர்ப்பு எத்திசை நோக்கி வரினும் மக்களின் நலன் காக்கப்பட வேண்டும்.

பிருதிவி :- (புத்துணர்ச்சியோடு) உண்மைதான் அத்தான்! எவ்வகையிலும் மக்களின் நலன் காக்கப்படத்தான் வேண்டும்...

சமார் :-போ பிருதிவி, குழுமி நிற்கும் வீரர்களுக்கு உற்சாகமூட்டித் தயார் செய்...

[பிருதிவிராஜ் போகிருன்]

-காட்சி மாறுகிறது.

காட்சி :—5

இடம் :- போர்ப்பயிற்சிக் கூடம்.

உறுப்பினர் :-பிருதிவிராஜ், படை வீரர்கள்.

[பிருதிவிராஜ் மேடை மீது நின்று ஆவேசத்துடன் பேசிக்கொண்டிருக்கிருன்.]

பிருதிவி :-...நாட்டின் நல் வாழ்விற்கு நெஞ்சிலே எஞ்சிய மூச்சு உள்ள வரை கொஞ்சமும் அஞ்சாமல் போராடும் மரபினர் நாம் என்பதை மறந்து, ஒரு சில துரோகிகளின் உதவியால் மீண்டும் படையெடுத்து வருகிருன், புறமுதுகு காட்டி ஓடிய பேடி. நம் வாளின் கூர்மை அன்றுபோல்தான் இன்றுமிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட புறப்படுங்கள்! ரஜபுத்திர மணிகளே!- ஊறும் உங்கள் கரங்களுக்கும் தினவெடுக்கும் தோள்களுக்கும் சரியான உணவு!...புறப்படுங்கள்!!...

-காட்சி மாறுகிறது.

காட்சி :—6

இடம் :-சம்யுக்தை அந்தப்புறம்.

உறுப்பினர் :-சம்யுக்தை, பிருதிவிராஜ்.

[பிருதிவிராஜ் போருடை அணிந்து வேகமாக வருகிருன்.]

பிருதிவிராஜ் :-சம்யுக்தா...

சம்யுக்தை :-அத்தான்!...

[புருவங்களைச் சுழித்து அவள் முகத்தைப் பார்க்கிருன்]

பிருதிவி :-போய் வரட்டுமா சம்யுக்தா?...

சம்யுக்தை :-நேற்றே விடை கொடுத்துவிட்டேனே-தடை ஏதுமின்றி. அத்தான்! வலிமை மிக்க உங்கள் கரங்களிலே எனக்கு நம்பிக்கை உண்டு-போய் வாருங்கள்...

[அவனது வலது கையை எடுத்து முத்தமிடுகிருள். பிருதிவி இடது கையால் அவள் நாடியை உயர்த்தி முகத்தைப் பார்க்கிருன். அந்நேரம் முரசு முழங்கும் ஒலி கேட்கிறது. சிறிது மௌனத்திற்குப் பின், பிருதிவி பிரிந்து செல்கிருன். சம்யுக்தை மேல் மாடிக்குச் சென்று கீழே பார்க்கிருள். பிருதிவிராஜும் சமார் சிங்கும் குதிரை மீது ஏறி முன் செல்ல, படை வீரர்கள் பின் தொடர்கின்றனர். அவர்கள் மறையும்வரை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிருள்...]

-காட்சி முடிகிறது.

காட்சி :—7

இடம் :-போர்க்களம்.

உறுப்பினர் :-சமார் சிங், முகமது கோர், பிருதிவிராஜ், படை வீரர்கள், சிற்றரசர்கள், ஜெயச்சந்திரன்.

[கடும் போர் நடந்துகொண்டிருக்கிறது. சமார் குத்தப்பட்டு கீழே விழுந்து புரண்டுகொண் டிருக்கிருன். உடல் முழுவதும் இரத்தம்! அவன் எதிரே இரத்தம் தோய்ந்த கத்தியுடன் கோர் குதிரை மீது உட்கார்ந்திருக்கிருன். சமார் சிங் மார்பிலிருந்து பீறிட்டெழும் குருதியை அழுத்திப் பிடித்துக் கொண்டு கோரியைப் பார்க்கிருன்.- அவன் இடது புருவத்தை உயர்த்துகிருன். சிவந்த அவன் கண்கள் சமாரைப் பார்த்துக் கொடூரமாகச் சிரிப்பது போன்ற ஒரு பிரமை!...]

...ஹஹ்ஹஹ்ஹா!...இந்து சாம்ராஜ்யத்தின் இணையற்ற வீரனே!... தோல்வியின் அறிகுறியே இல்லாது, வெற்றி! வெற்றி!-என்று முழங்கிய நீயும் உன் வீரர்களும் இன்று தோல்வியின் கடைசி எல்லைவரை சென்றுவிட்டதைப் பார்! ஹ்ஹ, வீரம் ஒன்றுதான் உங்களுக்குத் தெரியும்-விவேகத்தைப் பற்றி அறிந்திருக்க மாட்டீர்கள்! வாளின் கூர்மைதான் தெரியும் உங்களுக்கு-வஞ்சகத்தைப்பற்றிக் கொஞ்சமும் அறியீர்!-பாராட்டப்பட வேண்டியபண்புகள்தான். ஆனல் இப்போது வென்றது வீரமல்ல-விவேகம்! வாளின் கூர்மையல்ல-வஞ்சகம்!... உன்னேடு இந்து ராஜ்யத்தின் ஆணிவேர் ஒழிந்தது. பிருதிவியோ கைது செய்யப்பட்டுவிட்டான்! ஜெயச்சந்திரர்களைப் பற்றிச் சிறிதேனும் கவலை

யில்லை. இனி மொகல் சாம்ராஜ்யம் உதயமாவது உறுதி!-ஆம், இந்தியப் பேரரசு அஸ்தமிக்கப்போவது நிச்சயம்!...ஹஹ்ஹஹ்ஹா!...அஸ்தமனம் சமார், அஸ்தமனம்!!...

[கோர் வாளை வீசி எறிந்து அலட்சியமாகச் சமாரைப் பார்த்துவிட்டுச் செல்கிறான்...சமார் சிங் டில்லி அரண்மனையைப் பார்க்கிறான்...அப்போதுதான் மொகலாயர்களின் பிறைக்கொடி மாளிகையின் உச்சியில் ஏற்றப்படுகிறது. அந்தப்புரத்தில் பெருந்தீ!-அரண்மனை மாதர்கள் தீயில் விழும் காட்சி!....பிருதிவிராஜைக் கைது செய்து இழுத்துச் செல்வதையும், கோரியின் பின்னால் ஜெயச்சந்திரனும் இன்னும் சில ரஜபுத்திரச் சிற்றரசர்களும் போவதைப் பார்க்கிறான். அவன் உள்ளம் பதறுகிறது]

சமார்:-...அழிந்தது இந்திய மானிலம்!-ஒழிந்தது ரஜபுத்திரப் பெருமை, கீர்த்தி, பண்பு-எல்லாம்!...ஐயோ!...புகழோடு ஆரம்பித்த ரஜபுத்திரர்களின் வரலாற்று ஏட்டில் இந்த முடிவு அகற்ற முடியாத பெரும் கறை!-துரோகம்!...(அழுதுகொண்டு) புகழொளி பரப்பி வாழ்ந்த புனிதத்தாய் நாடே, நீ அஸ்தமிக்கவா போகிறாய்?...என்றும், எங்கும் உதயத்தின் முடிவு அஸ்தமனந்தானா?...இந்தியரின் நாடே..இனி நீ மொகலாயரின் காடு!...

[கைகள் தளர்கின்றன. கண்கள் இருண்டு உயிர் போகிறது! அவன் இறுதியாகக் கண்டது-ஆதவன் மலையடிவாரத்தில் அஸ்தமித்துக்கொண்டிருந்த காட்சியைத்தான்!...]

-காட்சி முடிகிறது.

★

போன்: 88 தந்தி: VEEVEEYES

வே. வ.

சண்முக நாடார் & சன்ஸ்

விருதுநகர்.

★

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணை,

நயம் உளுந்து, துவரம்

பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்.

A S P

சிக்கரி கலந்த

காப்பித் தூள்

★

தயாரிப்பாளர்:

A S.P. அய்யம்பெருமாள் நாடார்,

விருதுநகர்.

இலக்கிய ஆராய்ச்சி தொடர்கட்டுரை-எண் (2):

தமிழில் சிறு கதைகள்

சாலை. இளந்திரையன்
எம்.ஏ., எம்.லிட்.,

2. இலக்கியம்

உலகமே ஒரு கலைக்கூடம். அதில் முகிழ்க்கும் கலைகள் மிகப்பல. ஒவ்வொரு மனித உள்ளத்திலும் கணத்துக்குக் கணம் எத்தனை எத்தனையோ கலைகள் பிறக்கின்றன. பிறந்த ஒரு சில விநாடிகளுக்குள் அவை இறந்தும் விடுகின்றன. குதித்து எழுந்து, சுருண்டு, கீழே விழும் அலையில் தெறிக்கின்ற நீர்த்துளிகளைக் கூட எண்ணிவிடலாம்; யாதாயினும் ஒரு புதிய இனிய காட்சியைக் காணும் மனித உள்ளத்தில் வெடித்துச் சிதறும் கலைகளை எண்ண முடியாது! செக்கச் சிவந்த மேல்வானில் இடையிடையே ஊடுருவிச் செல்லும் வண்ணக் கலவையையும் துண்டு மேகங்களையும் கூட்டி வைத்துக் காணுகின்ற உள்ளத்திலே கவிதை பிறக்கிறது. ஓவியம் பிறக்கிறது; சிற்பம் பிறக்கிறது; இசை பிறக்கிறது; அறிவியல் பிறக்கிறது, அறவியல் பிறக்கிறது; இன்னும் இப்படி எத்தனை எத்தனையோ பிறக்கின்றன! அவைகளுக்கு வரையறை ஏது? அளவு ஏது? ஒன்றும் கிடையாது. உலகம் விரிந்து கிடப்பது போல் அந்த உள்ளம் அந்த நேரத்தில் விரிந்து கிடக்கின்றது. அதுவும் கலைமயமாகி விட்டது. அது கலைக் களஞ்சியம்.

இக்கலைக்களஞ்சியத்தின் ஒரு சிறு பகுதியே இலக்கியம். மொழியை உருவாகவும், உள்ளத்து உணர்வையே உயிராகவும் கொண்டு வாழும் ஓர் உயிரோவியமே இலக்கியம். அது பிறந்தது. ஏன்? எப்படிப் பிறந்தது? எங்கே பிறந்தது என்பன தெளிவான விடையிறுத்து அறுதியிடலாகாத ஐயங்கள். மனிதன் பிறந்தான்; அவனுக்கு உணர்வு இருந்தது--அல்லது. எப்போதோ அவனிடம் அது பிறந்தது. அது புதியனவற்றையும் இனியவற்றையும் கண்டு, காணும் பொருளுக்கேற்ற இயக்கத்தைத் தன்னிடம் கொள்ளும் இயல்பைப் பெற்றிருந்தது. அந்த இயக்கத்துக்கு அறிவும் துணை செய்தது. மனிதன் பார்த்தான்--கேட்டான்--தொட்டான். அவற்றையெல்லாம் பகுத்துக் காட்டியது அறிவு; அதனை உணர்ந்தது மனம். அவ்வாறு உணரப்பட்ட பொருள், இயல்பாக உள்ளபொருளினின்றுவேறுபாடுடைய ஏதோ ஒரு பொருள் அவனைக் கவர்ந்து அவன் உள்ளத்துடன் உறவாடியது.

தான் கண்டு, அறிந்து, உணர்ந்து பெற்ற அனுபவம் அவனுக்குப் புதிது. எனவே பிறன் அதைக் கண்டிக்க மாட்டான் என்று எண்ணினன், அவன்.

தான் கண்டதை அவனுக்கு ஏன் காட்டக்கூடாது?' என்று தன்னையேகேட்டுக் கொண்டான். 'காட்டலாம்; அவன் காண விரும்ப வேண்டுமே! பார்க்கலாமே--அதைப்பற்றிச் சொல்லித்தான் பார்ப்போமே' என்று துணிந்தான். தான் கண்டறிந்துணர்ந்தவாறு பிறனிடம் அப்பொருளைப்பற்றிப் பேசினன். விரும்பிக் கேட்டான் மற்றவன். வேகம் எழுந்தது இவன் உள்ளத்தில். விரிந்தது பேச்சு. ஆயினும் சுவை இருந்தது. உயிரும் இருந்தது அதிலே. பேச்சிலேயே இக்கலை வளர்ந்தது. ஓவியமாகவும் சிற்பமாகவும் அக்கலையே வளர்ந்தது. பேச்சைப் பயன் படுத்த இயலாதவனும்--விரும்பாதவனும் இப்படி வளர்த்தனர், கலைகளை. உலகம் பலவிதமல்லவா? நாளடைவில் எழுத்து மொழி தோன்றியது. கலையும் எழுத்துருவம் பெற்று, 'இலக்கியம்' என்ற பெயரும் பெற்றது. பிற கலைகளும் வளர்ந்தன; இலக்கியக் கலையும் வளர்ந்தது; எல்லாம் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

கொடிய வெயில், பெரியமழை முதலியவற்ருல், ஒரு குறிப்பிட்ட இடத்தில், பலர் நீண்ட நேரம் பாதுகாப்புக்காகத் தங்க நேர்ந்த பொழுதெல்லாம் ஒவ்வொருவரும் தத்தம் அனுபவங்களைச் சொல்ல, பிறர் கேட்டு மகிழ்ந்தனர். ஒருவனே பேச வேண்டிய நிலை ஏற்பட்ட போது சிறு பேச்சு பெரும் பேச்சாக நீண்டது; சிறுகதை பெருங் கதையாக வளர்ந்தது. தனித்தனி சிறு நிகழ்ச்சிகளைச் சொன்னவன், பல நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தி நெடுங் கதையைத் தோற்றுவித்தான். இவ்வாறே சிறுகதையும் பெருங்கதையும் விரவியதாக ஓடிக் கொண்டிருந்தது வாழ்க்கை. வாழ்க்கையின் சிறு நிகழ்ச்சி அல்லது தனிநிகழ்ச்சி சிறுகதையாகவும் பலநிகழ்ச்சிகள் இணைந்துள்ள வாழ்க்கை பெருங்கதையாகவும் வளர்ந்து வரலாயிற்று. எனவே இலக்கியம் முழுவதுமே இந்த இரண்டு பகுதிகளில் அடங்கிவிடும். ஆனல் இன்றுள்ள சிறுகதை நெடுங்கதைப் பகுப்பு முறை வேறு.

தனிக் கவிதையையும் தொடர்க்கவிதையையும் முறையே சிறுகதை, நெடுங் கதைகளுக்கு ஒப்பிடலாம். ஆயினும் இது முழுவதும் பொருந்தி வராது. அதற்கு முக்கிய காரணம் ஒன்று கவிதை மொழியிலும் மற்றது உரை நடை மொழியிலும் ஆக்கப்பட்டிருப்பதேயாகும். ஒரு மொழியையே எடுத்துக் கொண்டால் அதன் கவிதை நடை வேறு, உரைநடைவேறு. ஒரே செய்தி கவிதையில் பேசப்படுவதற்கும் உரை நடையில் பேசப்படுவதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஆதலினல் அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதும் இரண்டும் ஒன்றே என்பதும் தவறேயாகும். இங்கேதான், நம்மிடம் ஏற்கனவே உள்ளனவாக நாம் எண்ணிக் கொண்டிருக்கும் கவிதைச்சிறுகதைகள், சிறுகதைகள் அல்ல என்பது தெளிவாகிறது. இலக்கிய வகையில் 'பெருமை,' 'சிறுமை' என்னும் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகள் உண்டெனினும் சின்னக்கவிதையும், சிறுகதையும் ஒன்றல்ல; பெரிய கவிதையும் நெடுங்கதையும் ஒன்றல்ல என்பவற்றை அறிதல் வேண்டும்.

நெடுங்கதை (NOVEL) வந்ததனல் காவியம் அழிந்துவிட முடியாது; சிறுகதை வந்ததனல் தனிக்கவிதை மறைந்துவிட முடியாது. அவை வெவ்வேறு துறைகள். அவற்றின் அமைப்பு முறைகளும் வெவ்வேறு. எனவே இலக்கியத்தின் ஒரு புதிய பகுதியாக இடம் பெற்றுவரும் சிறுகதையைப் பற்றிய ஆராய்ச்சியும் இலக்கிய ஆராய்ச்சியும் தனக்கென ஒரு தனி இடமும் இயல்பும் பெற்றுள்ளது.

3. சிறு கதை

சமூகத்தின் வளர்ச்சியும் பிற சமூகங்களின் கலப்பும் கலைகளையும் பாதிக்கின்றன என்று கண்டோம். மனித சமூகம் தனக்கெனச் சில இன்றியமையாத தேவைகளை உடையதாக இருக்கின்றது. சில ஆடம்பரத் தேவைகளையும் வைத்துக்கொண்டுள்ளது. அவற்றுள் கலை எந்த வகையைச் சேர்ந்தது என்று அறுதியிட்டுரைப்பது கடினம். உணவும் உடையும் உறைவிடமுமே இன்றியமையாத்தேவைகள் என்று சாதாரணமாகப் பலர் எண்ணுகின்றனர்.

குடியாட்சியின் அடிப்படையான வாக்கெடுப்பு முறையைப் பயன்படுத்தினல் இன்று இம்மூன்றுமே இன்றியமையாத் தேவைகள் என்றும், வேறெல்லாம்-(அவற்றுள் அடங்கிய கலையும்கூட !) ஆடம்பரப் பொருள்களே எனறும் முடிவு செய்துவிடலாம். ஆனல் இம்மூன்று - தேவைகளும் நிறைவு செய்யப்பட்ட பின்னரும் மனித மனம் எதையோ தேடி அலைகின்றது. இத்தேவைகள் நிறைவு செய்யப்படாத போதுகூடச் சிலர் கலையையே தங்கள் இன்றியமையாத் தேவையாகக் கருதியுள்ளனர். எனவே கலை சிலபோது ஆடம்பரப் பொருளாகவும் சிலபோது இன்றியமையாத பொருளாகவும் இருக்கின்றது.

தேவை முறையில் கலைக்கு நாம் எந்த இடத்தைக் கொடுத்தாலும், சமூகத்தில் ஒட்டிக்கொண்டு உறவாடி வரும் பலவற்றுள் கலையும் ஒன்று என்ற உரிமையை அது பெற்றே இருக்கின்றது. ஆதலின் சமூகம் பெறும் மாறுதல்களுக்கேற்பச் சிறிதளவாயினும்-அல்லது பேரளவில்-மாறி வளரவேண்டிய இன்றியமையாமையை அது பெற்றே இருக்கவேண்டும். அவ்வாறுயின் சமூகம் விழும்போது விழுந்தும், எழும்போது எழுந்தும் சமூகத்தின் ஓர் உறுப்பாக நிற்கும் சாதாரணப்பொருள் தானு கலை ?-என்னும் கேள்வி எழும். கலைஞனல் படைக்கப்பட்டதே கலை. கலைஞனே சமூகத்தில் ஒருவன். அவன் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உலவும் இடம் சமூகம். அவனுடைய சிந்தனை எங்கே பறக்கவேண்டுமாயினும் சமூகத்தை ஊடுருவியே பறக்கவேண்டும். அவ்வாறு பறக்கும் சிந்தனையில் சமூகத்தின் மணம் ஒட்டிக்கொள்ளாதிருக்க இயலுமா ? அல்லாமலும் எந்தக் கலையும் ஒருவனுக்கோ ஒரு சமூகத்துக்கோ, உலகத்துக்கோ சொல்லப்படும் செய்தியேயாகும். கலைஞன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டால்கூட, சொல்வோர் கேட்போர் என்ற இருவரையும் பெற்றுத்தானே இருக்கிறது கலை ? அவ்வாறு கூறப்படும் செய்தி சமூகத்தின் கண், காது முதலியவற்றுக்கு எட்டாததாக இருப்பினும் கருத்துக்காயினும் எட்டுவதாக இருக்கவேண்டுமல்லவா ? அப்படி இருக்கவேண்டுமானல் கலை சமூகத்தை ஒட்டித்தானே வளர இயலும்?

இதுவரை கூறியவற்றல் சமூகத்தின் எண்ணத்துக்கு இரைபோடுவதே கலை என்று கொண்டு விடுதல் கூடாது. கலை சமூக வாழ்வின் ஆராய்ச்சி. கலைஞன் சமூக மருத்துவன். தனிப்பட்ட ஓர் உடலை ஆராய்ந்து அதிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி மருந்தும் சொல்லுகிருர் மருத்துவர் (DOCTOR.)

அதுபோலவே கலைஞனும் 'சமூகமாகிய உடலை' ஆராய்ந்து அதிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டி, அது வலுவும் வளமும் பெற வழி காட்டுகின்ருன். இவருள், நோயாளியின் மனநிலையை (கூடுமானல் பொருள் நிலையைக்கூட) அறிந்து அவனுக்கு ஏற்பன பேசி, அவன் இனிதில் ஏற்கும்படியாக மருந்தூட்டுகின்ற மருத்துவரையே மக்கள் விரும்புகின்றனர். கலைஞனும் இந்தக் கண்ணேட்டத்தில் சமூகத்துக்குச் சொன்னல் தான் அவனும் அவன் கலையாலும் பிறருக்குப் பயன் ஏற்படும். அதற்காக அவன் சமூகத்தின் போக்கை ஓரளவு தழுவிக்கொண்டே தன் கலையைப் படைக்க வேண்டும். 'கலைஞன் சொல்லுவது சமூகத்துக்குக் கசக்கலாம்; அதற்காக அவனும் அவர்களின் நிலைக்கு இறங்கிவர வேண்டுமா ?'-என்று சிலர்கேட்கலாம். ஆனல் தாயுள்ளம் படைத்த கலைஞன் தன் கலையின் உயர்வை மட்டுமே கருதுவதில்லை. கசப்பு மருந்தை இனிப்புப் பொருளால் பொதிந்து கொடுத்தாவது சமூக நோயைப் போக்கவேண்டும் என்பதே அவனது நோக்கமாக இருக்கும்-இருக்கவேண்டும். கசப்பு மருந்தைக் கசப்பு மருந்தாகவே ஏற்றுக்கொள்ள-எத்தனை பேர் தயாராக இருக்கின்ருர்கள் ? அவ்வளவு தெளிவு உள்ளவர்கள் நோய் வராமலே பார்த்துக் கொள்ளுவார்களே ! மக்களின் நோய்க்குப் பயன்படாதபோது அந்த மருந்தினல்தான் பயன் என்ன ? ஆதலினல் தான் கலைஞன் சமூகத்தைத் தழுவியே தன் கலைகளைப் படைக்கிருன் ; சமூக மாறுதலுக்கேற்பச் சில மாறுதல்களைக் கலையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இலக்கியக் கலையின் வரலாறு நமக்கு மேற்கண்ட உண்மையையே நினை வூட்டுகின்றது. சிறுகதை தோன்றிய வரலாறும் அந்த உண்மையை உறுதி செய்கின்றது. சிறுகதை, பெருங் கதையைவிடப் பொருளிலும் அளவி லும் குறுகியது. தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் தனிக்கவிதையை விடச் சிறியது சிறுகதை. அஃதாவது ஒரு கவிதையில் கூறப்பட்டிருக்கும் பொருளே ஒரு சிறு கதையில் சொல் லப்பட்டிருந்தாலும், கவிதை (பத்து அடியெனினும்) படித்து உணர்ந்து மகிழ எவ்வளவு நேரம் ஆகுமோ அதைவிடக் குறைந்த நேரத்திலேயே ஒரு சிறுகதை (இருபது பக்கம் இருந்தா லும்) யைப் படித்துணர்ந்துவிட முடி யும். கவிதை ஒரு 'பென்சில்' ஓவியம் போன்றது. அதில் நம் மனத்தாலேயே தக்க வண்ணங்கள் தீட்டி அதன்பின் னரே அதன் முழு எழிலையும் காண இயலும். சிறுகதையோ வண்ணம் தீட்டப்பட்ட ஓவியம். பிற சிறப்புக்கள் கவிதையில் மிகுதி எனினும், கவிதை எடுத்துக்கொள்ளும் நேரத்தைச் சிறு கதை எடுத்துக் கொள்ளுவதில்லை. இந்த இயல்பே சிறுகதையின் தோற் றத்துக்கும் அதன் செல்வச் சீர்வாழ்வுக் கும் காரணமாகும்.

மேலைநாட்டில் ஏற்பட்ட தொழிற் புரட்சியும், புதிய அறிவியல், (Scienti-fic) கண்டுபிடிப்புக்களும் மனிதவாழ்க் கையில் புதிய வேகத்தைப் புகுத்தி விட்டன. புதுப்புதிய ஒலிக்கருவி களும் அச்சுப்பொறிகளும் மனித னுக்கு அதிகமான செய்திகளைக் கொண்டுவந்து குவித்தன. ஆசையின் வடிவான மனிதன், தான் 'சில் வாழ் நாள் பல்பிணிச் சிற்றுயிர்' என்பதை உணர்ந்திருந்துங்கூட, எல்லாவற்றை யும் அறிந்துகொள்ளத் துடித்தான். முன்பெல்லாம் ஒரு நாளில் அவன் செய்துவந்த வேலையைப்போல் மூன்று நாலு மடங்கு வேலையை (வீண் வேலை களுங்கூடத்தான்!) இப்போது அவன் செய்யத் தொடங்கினான். உள்ளூர்ச் செய்திகூடச் சரிவரத்தெரியாது காலங் கழித்த மனிதன், உள்நாட்டு, வெளி நாட்டுச்செய்திகள், சமூக, சமுதாய அரசியல், கலையியல் செய்திகள் போன்ற இன்னோரன்ன பல செய்தி களைத் தெரியலானான். குறைந்த நேரத்துக்கு மிகுந்த வேலை செய்ய வேண்டியதாயிற்று. ஆயினும் அனைத் தையும் அள்ளிப் போட்டுக் கொண்டு செய்தான் மனிதன். ஆசை யாரை விட்டது? உலகத்தோடு ஒட்ட ஒழுகு தலும் வேண்டுமன்றோ? வேலை மிகுதி யாகவே விரைவு புகுந்தது வாழ்க்கை யில். காலை முதல் மாலை வரை செய் யும் பல வேலைகளில் ஒவ்வொரு வேலைக்கும் சிறிதளவு நேரமே கிடைத் தது. புறத்தேவைகளுக்கு உழைக்க வும் உழைத்த களைப்பைப் போக்கச் சில வெற்றுக் கேளிக்கைகளில் ஈடு படவுமே மக்களுக்கு நேரம் இருந்தது. ஆனாலும் தங்கள் குடியின் ஓர் அங்க மாய்ப் போற்றப்பட்டு வந்த கலையையும் இலக்கியத்தையும் மக்கள் மறந்துவிட வில்லை. மறக்கவோ வெறுக்கவோ இயலவில்லைதான். எனினும் கவிதை யையும் காவியத்தையும் எடுத்து வைத் துக் கொண்டு நயங்கண்டு பயன் காணவும் அவர்களுக்குப் பொழுது இல்லை!

இந்தச் சமயத்தில்தான் தோன்றி யது சிறு கதை. கவிதை சொன்ன தைத்தான் சிறுகதையும் சொன்னது. எனினும் சிறிது நேரத்தில் தெளிவா கச் சொல்லிவிட்டது; உள்ளத்துக்கு அதிகச் சிந்தனை வேலையில்லாதே, எளி தில் கூறி விட்டது. காவியம் சொன்ன தைத்தான்—வாழ்க்கையைத்தான் சிறு கதையும் சொன்னது. எனினும் மொத்தமாகச் சொல்லவில்லை; சிறிது சிறிதாகப் பகுத்துச் சொல்லிவிட்டது. காவியத்தில் ஒரே பாவிக நூலால் கட்டுண்டு தொடர்புபட்டுக் கிடக்கும் செய்திகளைத் தனித்தனிப் பிண்டங் களாக அவ்வப்போதைக்கு எடுத்துச் சொல்லிற்று சிறுகதை.

கதையாய்க் காவியமாய்த் தனித் தனிப் புத்தகங்களாக வரவேண்டிய இலக்கியம் செய்தித்தாள்களின் பகுதி களாக வந்து, அன்றாட வாழ்வில் தொடர்பு கொண்டது. மக்களும் விரும்பி ஏற்றனர். தங்கள் வாழ்க் கைக்கும் இடையூறில்லாமல் கலையைச் சுவைக்க முடியுமானால் மக்கள் ஏன் அதை விரும்ப மாட்டார்கள்? இந்த முறையில் தான் மேலைநாட்டில் பத் தொன்பதாம் நூற்றாண்டில் தனியுரு

வில் வாழ்வில் நுழைந்தது சிறு கதை. முதலில், 'இதுவோ இலக்கியம்!' என்று உதறித்தள்ளியவர்கள் கூட நாளடைவில், சமூகத்தின் போக்கை உணர்ந்து, "இதுவும் இலக்கியத்தில் ஒரு பகுதியே" என ஏற்றுக் கொண்டனர். அந்த நாடுகளில் இன்று கணக்கு வழக்கின்றிப் பெருகியுள்ளன சிறு கதைகள். அவ்விலக்கியத்தின் ஆராய்ச்சியும் வளர்ந்து செழித்துள்ளது.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் இடம் பெற்ற ஆங்கிலமொழி பத்தொன்பதாம் நூற்றுண்டளவில் இங்கே நன்ருக வேரூன்றி விட்டது. தாய்மொழிப் பயிற்சியையெல்லாம் கூடப் புறக்கணித்து ஆங்கிலப் பயிற்சி வளர்ந்தது. ஆங்கிலத்தில் வல்லுநரான இந்தியர்கள், ஆங்கில மொழியின் கலைவளத்தைத் தத்தம் மொழிகளிலும் காண விழைந்தனர். பழங்கால விவசாய நாடான நமது நாட்டிலும் அறிவியல் புதுமைகளின் ஒளி பரவியது. மெதுவாக இயங்கிக் கொண்டிருந்த வாழ்க்கை இங்கேயும் விரைவு கொள்ளத் தலைப்பட்டது. ஆங்கிலம் கற்ற நம்மவரின் ஆர்வமும், அசைந்து கொடுத்து வேகங் கொள்ளத் தொடங்கிய நமது சமூகத்தின் வாழ்க்கை வேகமும், நமது மொழிகளிலும் சிறு கதை இலக்கியத்தைக் கொண்டு வந்து நிறுத்தின. இங்கு ஏற்பட்ட வாழ்க்கை மாறுதலுக்கும் சிறுகதைக்கும் அதிகத் தொடர்பு இல்லாவிடினும், "படித்தோர், என்போர் ஆங்கிலம் படித்தோரே" என்ற நிலையில் இருந்த நமது சமூகம் அந்த ஒரு சில படித்தோரைக் கொண்டே சிறுகதையை ஏற்றுக் கொண்டது.

சிறுகதை நம் இலக்கியத்தில் சட்டென்று பற்றிக் கொண்டதற்கு மற்ருெரு காரணம், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் தொடங்கிய சமூகச் சீர்திருத்தக்கொள்கைகளும் அரசியல் விழிப்புமாகும். சிறுகதையை நமக்குத் தந்தது போலவே அப் புதிய துறை இங்கு வேரூன்றுவதற்கான மேற்குறிப்பிட்ட சூழ்நிலையையும் ஆங்கில மொழி உறவே நமக்குத் தந்தது.

இத்துறை நமது கதை ஆசிரியர்களுக்குப் புதிதாக இருந்ததனுல், பல ஆண்டுகள் வரை நம் சிறுகதைகளிலும் ஆங்கில இலக்கியச்சாயல் படிந்தே இருந்தது. அன்றியும் நீண்ட கதைகளில் பழகியவர்கள் ஆனதாலும், நம் சமூகம் மேலைச் சமூகத்தின் அளவுக்கு வாழ்க்கை வேகம் பெறு முன்னரே சிறு கதை இங்கே இடம் பெற்று விட்டதாலும் நமது கதையாசிரியர் பலர் சிறு கதை பெருங்கதைகளுக்குள்ள வேறுபாடுகளைத் தெளிவாக அறிந்து கொள்ளாதிருந்தனர். சிலரின் சிறுகதைகள் பெருங்கதையின் சுருங்கிய அமைப்புக்களாகவே இருந்தன. 'சிறுகதை மன்னன்' என்று பாராட்டப் பெறும் தகுதி வாய்ந்த புதுமைப்பித்தன் கூட இதற்கு விலக்கல்ல எனில் வேறு கூறுவானேன்?

சில குறைபாடுகள் இருந்தபோதிலும், தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் சிறு கதையின் வளர்ச்சி மிக விரைவும் வளமும் கொண்டது என்று திட்டமாகக் கூறலாம். பத்திரிகைகளின் பெருக்கமும், சற்றேறக் குறைய முப்பது ஆண்டுகளாகத் தமிழகத்தில் தோன்றி வளர்ந்து வரும் தமிழ் மறுமலர்ச்சியுமே அதற்குரிய காரணங்களாகும். இன்று தமிழில் சிறுகதை எழுதுவோர் நூற்றுக்கணக்காகப் பெருகியுள்ளனர். அவர்தம் படைப்புக்களில் பல, 1 'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி' மாலையில் வாடி விழும் மலர் போன்று இருந்தாலும் என்றும் இறவாத சிறு கதைகளையும் நாம் காணுகிறோம். வளர்கின்ற ஒரு துறைக்கு அதுதானே அடையாளம்?

கவிஞரின் திட்டம்:

புதிய பாரதம்

'குடைகள்செய் வோம்உழு
படைகள்செய் வோம்;
கோணிகள்செய் வோம்
இரும் பாணிகள்செய் வோம்;
நடையும் பறப்புமுணர்
வண்டிகள்செய் வோம்;
ஞாலம் நடுங்கவரும்
கப்பல்கள்செய் வோம்;
மந்திரம்கற் போம்வினைத்
தந்திரம்கற் போம்;
வானையளப் போம்கடல்
மீனையளப் போம்;
சந்திரமண்ட லத்தியல்
கண்டுதெளி வோம்;
சந்தி தெருப்பெருக்கும்
சாத்திரம்கற் போம்.
—'பாரத தேசம்'

ஸ்தல ஸ்தாபன ஆட்சி

(ஸ்ரீமதி: லூர்தம்மாள் சைமன், அமைச்சர்.)

நாட்டு மக்களின் பொது நலம், பாதுகாப்பு, சுகாதாரம், கல்விபோன்ற வசதிகளை எடுத்துச் சொல்லி அவற்றை நடைமுறையில் செய்வதற்காக இயங்கி வரும் ஸ்தாபனங்கள்தான் ஸ்தல ஸ்தாபனங்கள் எனப்படுவன. பெரிய பட்டனங்களில்பணியாற்றிவரும் ஸ்தாபனங்களைக் "கார்பொரேஷன்" என்றும், மற்ற நகரங்களில் பணியாற்றி வரும் ஸ்தாபனங்களை "முனிசிபாலிடி" என்றும், கிராம அளவில் உள்ள ஸ்தாபனங்களைப் "பஞ்சாயத்து" என்றும் சொல்லப்படும். நம் நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே நகர நிர்வாகத்தை நகர பரிபாலன சபைகளும் கிராம நிர்வாகத்தைப் பஞ்சாயத்துகளும் நடத்தி வந்தன. பல்வேறு அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஆட்சி செலுத்தி வந்த போது ஸ்தல ஸ்தாபன ஆட்சி முறையில் அதிக மாறுதல்கள் ஏற்படவில்லை.

2. ஆனால் ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் புகுந்து தங்கள் செல்வாக்கைப் பலப்படுத்தி, தங்கள் ஆட்சியை நிலை நிறுத்த ஆட்சி முறையில் பல மாறுதல்கள் செய்யலானார்கள். வரி வசூல், நில புலன்களில் கணக்கு முதலியவற்றில் மக்களுடன் நேரிடையாகத் தொடர்பு வைத்துக்கொள்ள மணியக்காரர்களையும் கிராமக் கணக்கப் பிள்ளைகளையும், கிராமக் காவல்காரர்களையும் நியமித்து, இவர்களையே ஆட்சிக்கு அஸ்திவாரமாக ஆக்கி, இவர்களை மேற்பார்வையிட நிலத்தீர்வை இலாகாவை ஏற்படுத்தினர். இவ்விலாகாவே இப்பொழுதும் முக்கிய நிர்வாக இலாகாவாக இருந்து வருகிறது. பிறகு பொதுப் பாதுகாப்புக்கென்று ஓர் இலாகா, அதாவது "போலீஸ்" இலாகா ஏற்படுத்தினர். அதே சமயத்தில் மக்களிடையே நீதி வழங்க, சிவில், கிரிமினல் என்ற நீதிமன்றங்களை ஏற்படுத்தினர். இவ்வாறு ஆட்சி முறையில் பல முக்கிய மாறுதல்களை ஆங்கிலேயர் ஏற்படுத்தியதினாலும் நவீன நாகரிகத்தின் விளைவினாலும்கிராமங்களிலிருந்து பலர் நகரங்களுக்குச்சென்று குடியேறியதாலும், கிராமங்களில் ஜனத்தொகை குறைந்து, நகரங்களில் ஜனத்தொகை பெருகி வந்தது. கிராமங்களில் சுய ஆட்சி செய்து வந்த பஞ்சாயத்துகள் சிறிது சிறிதாகச் சீரழிந்து இருக்கும் இடம் தெரியாமல் போயின. நகரங்களில் ஜனத்தொகை பெருகியதினால் பொது நலம், சுகாதாரம் முதலிய வசதிகள் குறைந்தன.

3. ஆங்கில ஆட்சி நிலைத்து அரசாங்கம் வன்மை பெற்றது. நகரங்களில் வசிக்கும் மக்களுக்குப் பொது நலம், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி போன்ற வசதிகள் செய்துகொடுக்கும் பொறுப்பு முழுவதையும் ஏற்று நடத்த முடியாத படி பொருள் வசதியில் நெருக்கடி ஏற்

பட்டது. எதற்கும் எப்பொழும் அரசாங்கத்தையே மக்கள் எதிர்பார்ப்பதை விட எதையும் எச்சமயத்திலும் தாமே எடுத்து நடத்தக்கூடிய துணிவும் தன்னம்பிக்கையும் மக்களிடையே இருப்பது தான் நல்லதென்பதை மக்களும் அரசாங்கமும் உணர்ந்தனர். இதன் பயனாக முதன் முதலாக 1865-ம் வருடம் நகரச் சீர்திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தனர். இச்சட்டத்தில் நகர பரிபாலன சபை ஏற்படுத்தவும், அச்சபைகளுக்கு வேண்டிய நிதி வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதே சமயத்தில் கிராமங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்ய நிலத்தீர்வையின் மேல் 'செஸ்' என்றும் ஒரு வரி போட ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு ஏற்பாடுகள் செய்து படிப்படியாக ஸ்தல ஸ்தாபனங்கள் அமைக்க ஆங்கிலேயர் முயற்சித்து வந்தனர். இதன் அடிப்படையில்தான் நம் நாட்டில் இப்பொழுது பெரிய பட்டணங்களில் உள்ள 'கார்ப்பரேஷனும்', இதர நகரங்களில் உள்ள முனிசிபாலிட்டிகளும், கிராமங்களில் உள்ள ஜில்லா போர்டுகளும் பஞ்சாயத்துகளும் நிறுவப்பட்டன.

3. 1947-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி நம் நாடு ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து சுதந்திரம் பெற்ற பிறகு, 1948-ம் வருடம் ஆகஸ்டு மாதம் நம் தலைநகர் புதுடில்லியில் இராஜ்ய சர்க்கார்களின் ஸ்தல ஸ்தாபன அமைச்சர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது பிரதம அமைச்சர் ஸ்தல ஸ்தாபன ஆட்சியே உண்மை ஜனநாயகத்திற்குப் பீடம் என்று எடுத்துக் காட்டினர். இக்கூட்டத்தின் ஆலோசனையின் பயனாக மத்திய சர்க்காரின் சுகாதார மந்திரி தலைமையின் கீழ் இராஜ்ய சர்க்கார் ஸ்தல ஸ்தாபன அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டது. இக்குழு வருடாந்திரம் கூடி ஸ்தல ஸ்தாபன ஆட்சிமுறையை வலுப்படுத்தவும் சீர்திருத்தம் செய்யவும் தக்க யோசனைகள் கூறி வருகிறது.

4. மக்களின் நலனுக்காக மக்களாலேயே மக்களுக்காக நடத்தப்படும் ஒரு கூட்டு முயற்சி 'சமுதாய அபிவிருத்தி' திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பற்பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன. சமுதாய அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற மக்களால் நிறுவப்பட்ட ஒரு ஆட்சி ஸ்தாபனம் ஏற்றதென்று கருதப்பட்டது. இக்கருத்தின் அடிப்படையாகச் சென்னை இராஜ்யத்தில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களைச் சீர்திருத்தி அபிவிருத்தி செய்ய ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு, அத்திட்டத்துடன் சமுதாயஅபிவிருத்தி திட்டத்தை இணைத்து அமுலுக்குக் கொண்டுவர சென்னை இராஜ்ய சர்க்கார் முடிவுக்கு வந்தனர். அதே சமயத்தில் ஸ்ரீ. பலவந்தபாய் மேத்தா தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட திட்டக் குழுவின் உப குழுவும் அதே மாதிரி சிபாரிசு செய்தது. இம்முடிவை ஸ்தல ஸ்தாபன சீர்திருத்த வெள்ளை அறிக்கையில் வெளியிட்டு அமுலுக்குக் கொண்டுவர சென்னை சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். இதன் பயனாக 1958-ம் வருடத்திய சென்னை பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

5. புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கிய ஏற்பாடுகளாவன:—

(1) இராஜ்யத்திலுள்ள 11 ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக 2-10-61க்குள் ஏறக்குறைய 358 பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்படும்.

(2) 2-10-1961 முன்னதாகவே இராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் பஞ்சாயத்து ஏற்படுத்தப்படும்.

(3) தற்போது முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு பஞ்சாயத்துக்கள் என்று இருந்துவரும் பாகுபாட்டை மாற்றி, கிராமப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து என்று வழங்கப்படும். ஏனெனில் ஜனத்தொகை 5000க்கு மேற்பட்டு வருடவருமானம் 10,000/- ரூபாய்க்கு மேலுள்ள முதல் வகுப்பு பஞ்சாயத்துகள் நகரங்களிலுள்ளதாலும், இரண்டாம் வகுப்பு பஞ்சாயத்துகள் அநேகமாக கிராமங்களிலுள்ளதாலும் முதல் வகுப்பு பஞ்சாயத்துகள் தனிப்பட்ட நிலையிலிருக்கின்றன. நகரப் பஞ்சாயத்துகளில் ஜனத்தொகை அதிக எண்ணிக்கை உள்ளதாகவும் மக்கள் வசிப்பதற்கான இடம் இருப்பதால் வீட்டு வரியிலிருந்து அதிக வருமானம் கிடைப்பதாகவும் உள்ளன. மேலும் இப்பஞ்சாயத்துகளில் விவசாயிகளை விட விவசாயம் செய்யாதவர்களே பெரும்பான்மையோர் வசித்து வருகின்றனர்.

(4) பெண் அங்கத்தினர் ஒருவராகிலும் தேர்ந்தெடுக்கப்படாவிடில், ஒரு பெண் அங்கத்தினரைச் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

(5) சமூக விஸ்தரிப்பு திட்டத்தின் கீழுள்ள ஒவ்வொரு பிளாக்கும் பஞ்சாயத்து அபிவிருத்தி பிளாக்காக எடுத்துக் கொள்ளப்படும். அவ்வித பிளாக் ஒவ்வொன்றிற்கும் ஒரு பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படும்.

(6) பிளாக்கிலிருக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பஞ்சாயத்து யூனியன் குழு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அமைக்கப்படும். ஆதலால் பஞ்சாயத்து யூனியன் குழு அங்குள்ள பஞ்சாயத்துகளில் ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக விளங்கும்.

(7) ஒவ்வொரு பஞ்சாயத்தும் அதனுடைய அங்கத்தினர்களிலிருந்து ஒருவரைப் பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும்.

(8) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், நியமனக் கமிட்டி, கல்விக் கமிட்டி, பொதுக் கமிட்டி ஆகிய கமிட்டிகள் ஏற்படுத்தப்படும்.

(9) பஞ்சாயத்துகளின் கடமைகளும் பஞ்சாயத்து யூனியன் கடமைகளும் ஒன்றுக்கொன்று வெவ்வேருக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்விக்காக முழு பொறுப்பும், சமூ அபிவிருத்திக்கான தேசீய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் இயங்கும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் முழு பொறுப்பும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்கப்படும்.

(10) ஸ்தல ஸ்தாபன நிதிக்குழு சிபாரிசு செய்து, சட்டமன்றக் குழுவிஞல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகத்தின் வரவு செலவு திட்டப்படி பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஆகியவைகளின் நிதிவருவாய்களைத் திருத்தி அமைத்து அதிகப்படுத்தப்பட்டுள்ளன. நிலவரியில் ஒரு பாதியை நபர் ஒன்றுக்கு இவ்வளவு என்று பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் கிராமங்களில் வசூலாகும் வீட்டுவரி, சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட செல்வ வரிக்கு மேல் போடப்படும் செல்வ வசூல் தொகைக்குச் சமானமாகச் சர்க்கார் மான்யங்கள் கொடுக்கும் ஒரு புதிய முறையும் புகுத்தப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஆகியவைகளுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்பைச் சரிவர நிர்வகிப்பதற்குத் தேவையான நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

(11) சமூக அபிவிருத்திக்கான தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழுள்ள தேர்ச்சி பெற்றுள்ள அதிகாரிகளின் சேவை பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பயன்படும். பிளாக்கு அபிவிருத்தி அதிகாரி பஞ்சாயத்து யூனியன் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுவார். பிளாக்கிலுள்ள பல்வேறு விஸ்தரிப்பு அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியனின் பல்வேறு இலாக்காக்களின் தலைவர்களாக இருப்பார்கள். எவ்வாறு எனில் நகர சபையில் சுகாதார அதிகாரி, என்ஜினியர்களைப் போன்று பணியாற்றுவார். இவ்வதிகாரிகளின் சேவை பஞ்சாயத்து யூனியனுக்கு இலவசமாகத் தரப்படும்

(12) பஞ்சாயத்து தலைவர், உப தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர்; உப தலைவர் ஆகியவர்களின் மேல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றவும் இவர்களைப் பதவியினின்று நீக்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(13) 1950 சட்டத்தின் கீழ் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப்பட்ட நீதி செலுத்தும் அதிகாரம் எடுக்கப்பட்டுள்ளது.

6. நகர பரிபாலனத்தில் அதாவது முனிசிபாலிட்டியில் நிர்வாகத்தில் அதிகப்படியான மாறுதல்கள் அவசியம் தோன்றவில்லை. கார்பொரேஷன் சபையில் அதிகப்படியாக பிரதிநிதித்துவம் கொடுப்பதும், உபகுழுக்கள் அமைப்பதிலும் சில மாறுதல் செய்வது தவிர, நிர்வாகத்தில் வேறு மாறுதல்கள் அவசியமாக தோன்றவில்லை. ஆகையிஞல் பஞ்சாயத்து நிர்வாகத்தைத் திருத்தியமைக்க ஒரு புதிய சட்டம் உருவாக்கப்பட்டது போல் முனிசிபாலிட்டிக்கும் கார்பொரேஷனுக்கும் புதிய சட்டங்கள் தற்பொழுது தேவையிருக்காது என்று கருதப்படுகிறது.

7. அண்மையில் நிறைவேற்றப்பட்ட 1958ஆம் வருடத்திய சென்னை பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்தபின் சமுதாய திட்டங்கள் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு மக்கள் சுபீட்சமாக வாழ்க்கை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

குடும்ப விளக்கு

நிலக்கோட்டை சங்கரசுப்பு

காலை நேரம். பட்டு ரோஜா தன் பவள இதழ்களில் புன்னகையை நெளியவிட்டவாறு, தூங்கிக்கொண்டிருந்த தாமரை மலரைத் தட்டி எழுப்பியது. கதிரவன் வராமல் கண் விழிக்க மாட்டேன் எனக் கூறி, தன பொன் இதழ்களைக் குவித்த வண்ணமே கண்களை மூடிக்கொண்டிருந்தது தாமரை. பொழுது புலர்ந்து விட்ட மகிழ்ச்சியில் உதய கீதம் இசைத்துக் கொண்டிருந்தன பறவை இனங்கள். பசுமை அடர்ந்த சோலையினூடே இடுப்பில் தண்ணீர்க் குடத்துடன் ஆற்றிலிருந்து வந்து கொண்டிருந்தாள் மணிமேகலை.

செதுக்கி வைத்த சிலையொத்த மேனி. கட்டழகு கொலுவிருக்கும் குமரிப் பருவம். காண்பவரைக் கவர்ந்திழுக்கும் எழில் உருவம். இவ்வளவு ஏன், மணிமேகலை ஓர் அழகி! பெண்களுக்கு இருக்க வேண்டிய நால்வகைக் குணங்களுக்கும் ஓர் எடுத்துக் காட்டு; பண்பட்ட உள்ளம் படைத்த பாவை. 'வள வள' வென்று பேசிக் கொண்டிருக்கும் பெண்களைக் கண்டால் அவளுக்குப் பிடிக்காது. இரண்டு அல்லது மூன்று பெண்களே அவளுக்குச் சிநேகமாயிருந்தார்கள். குறிப்பாக விமலாதான் உயிர்த் தோழி. தன் மனக் குறைகளை அவளிடம் சொல்லித் தீர்த்துக் கொள்வதில் மணிமேகலைக்குத் தனி மன நிறைவு.

மணிமேகலைக்குத் திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகின்றன. திருமணமான மறுமாதமே அவளது கணவன் மணிசேகரன் அவளை அவனது சகோதரியிடம் விட்டு விட்டுக் கொழும்புக்குச் சென்று விட்டான். அப்பொழுதிருந்து மணிமேகலை அவளது அக்கா பத்மாவின் வீட்டில் இருந்து வருகிறாள்.

பத்மாவின் கணவன் நடராஜன் ஒரு ஜவுளிக்கடையில் வேலை பார்த்து வந்தான். அவனுக்கு வரவுக்குத் தகுந்த செலவு செய்யத் தெரியாது. பகட்டாக உடுத்துவதிலும், படாடோபமாகச் செலவு செய்வதிலும் பணக்கார வீட்டுப் பிள்ளைபோல நடந்துகொள்வதிலும் ஆசை. நான்கு நண்பர்களோடு சேர்ந்து கொண்டு சிகரெட் புகைப்பதும் சீட்டாடுவதும் அவனது பொழுது போக்குகள். அடிக்கடி திரைப்படம் காணச் செல்வதும் உண்டு.

கணவன் இவ்வாறு கண்ணை மூடிக்கொண்டு செலவு செய்வதைப் பொறுக்காமல், பத்மா கடிந்து கொள்வாள். அவள் ஏதாவது பேச ஆரம்பித்தால் நடராஜனுக்குக் கோபம் வந்துவிடும். "உனக்கென்ன தெரியும். வாயைமூடிக் கொண்டிரு. சம்பாதிக்கிறவனுக்குச் செலவு செய்யத் தெரியாதா? சேகரன் உன் தங்கையை வேறு இங்கே விட்டு விட்டுப் போய்விட்டான். குடும்பத்தில் செலவு ஆகாமலிருக்குமா?" என்று பொரிந்து தள்ளுவான். இவ்வாறு கணவன் மனைவி சண்டையிலும் மணிமேகலையின் பெயர் அடிபட்டு வந்தது.

தங்கைதானே என்று பத்மாவது பேசாமலிருந்தாளா? "என் தங்கைக்கும் சோறு போட வேண்டுமென்று என் கணவருக்குத் தலைவிதி! அவர் சொல்லிக் காட்டத் தானே செய்வார். மேகலையின் கணவன்தான் பிழைப்புத் தேடிப்போனாரே; மனைவிக்காக என்று மாதாமாதம் ஏதாவது பணம் அனுப்பிவைக்கக்கூடாது? வருடம் இரண்டாகப் போகிறது, சோறுதான் போடுகிறோம். துணிமணிகள் எல்லாவற்றிற்குமா கைக்காசைப் போட்டுச் செலவு செய்வது?" என்று மறைவாகக் கூட இல்லை, மணிமேகலையின் எதிரிலேயே பேசிவந்தாள்.

பத்மாவும் நடராஜனும் பேசும் பேச்சுக்கள் மணிமேகலையின் உள்ளத்தை வாள் கொண்டு அறுப்பதுபோலிருந்தன. பாவம், அவள் என்ன செய்வாள்? "கொஞ்சங்கூட இரக்கம் வேண்டாமா? கூடப் பிறந்த தங்கை தானே, சும்மாவா தின்கிறாள், மாடு போல உழைக்கிறாள்; வீட்டு வேலைகள் யாவற்றையும் பொறுப்பாகக் கவனித்துக்கொள்கிறாள். தன் நிலையை உணர்ந்து அடங்கிக் கிடக்கிறாளே!

"தருமத்தை மென்மேலும் வெல்லக் காண்போம்—இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம் மாறும்"

—பாஞ்சாலி சபதம்.

அவளைக் கொடுமைப்படுத்துகிருளே இந்தப் பத்மா!'' என்று அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் பேசிக்கொள்வது மணிமேகலையின் காதில் விழத்தான் செய்தது. ஆனுலும் அவர்களிடம் அக்காவைப்பற்றிக் குறையாக ஒரு வார்த்தை யாராவது பேசமாட்டார்கள். உள்ளத்தின் குமைச்சல் ஓங்காரமிடும்போது, விமலாவிடம் சொல்லி அழுவதைத் தவிர, அவளால் வேறு ஒரு முடிவும் காண முடியவில்லை.

மணிமேகலையைப் பொறுத்தவரை, காலம் சிறகு கட்டிப் பறக்கவில்லை என்ருலும் நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

* * *

ஊரெல்லாம்வந்த 'விஷக்' காய்ச்சல் பத்மாவையும் தேடிக்கொண்டு வந்து விட்டது. பத்மா படுத்த படுக்கையாளுள். வீட்டு வேலைகள் மட்டுமல்லாமல், அக்காவைக் கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் மணிமேகலைக்கு ஏற்பட்டது. வாரம் ஒன்று கடந்தது. பத்மாவால் மெதுவாக எழுந்து நடமாட முடிந்தது.

நள்ளிரவு, அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள் மணிமேகலை: மெதுவாக அங்கு வந்த நடராஜன் அவளை எழுப்பினுன். திடுக்கிட்டு எழுந்த மணிமேகலை எழுந்தாள். "ஆ, ஏன் அத்தான்?" என்ருள் பதறிக்கொண்டே.

"உன் அக்காவிற்கு மருந்து கொடுத்து விட்டாயா? இங்கே வா. அவள் விழித்துக் கொண் டிருக்கிருள்.

ஆகாரம் வேண்டுமா என்று கேள்'' என்று சொல்லி அழைத்தான்.

மணிமேகலை அவனோடு வந்தாள். பத்மா படுத்திருந்த அறைக்குப் பக்கத்தில் வந்ததும், மணிமேகலையைத் தன் படுக்கையில் இழுத்துப் போட்டான். பண்பட்ட உள்ளம் படைத்த பாவையல்லவா மணிமேகலை! "விடு கையை, என்னை யாரென நினைத்துக்கொண்டாய்! தாலி கட்டிய கணவனையே தெய்வமெனக் கருதும் தமிழகத்துப் பெண் என்பதை மறந்துவிட்டாய் போலும்! பார், உன் செயலை அம்பலமாக்குகிறேன்'' என்று கூறிச் சினந்தாள்; சீறினாள்.

இந்தச் சந்தடி கேட்டு பத்மா எழுந்து வெளியே வந்தாள். "பத்மா பார் இந்தப் பரத்தையை'' என்று மணிமேகலையைக் குற்றவாளியாக்கினான், நடராஜன். நடராஜனது படுக்கையில் மணிமேகலைக்கு என்ன வேலை? தன் கணவனின் பேச்சை அப்படியே நம்பிவிட்டாள் பத்மா. "புத்தி கெட்டவளே, உடன் பிறந்தவளுக்கே துரோகமா? என் கூடப் பிறந்தவளா நீ! இதைவிட ஒரு குளம் குட்டையில் விழுந்து உயிரை விட்டுவிடலாமே! வெட்கமில்லை; நன்றி கெட்டவளே? உன்மீது எனக்குச் சந்தேகம் இருந்துகொண்டுதானடி இருந்தது. கற்பிழந்து வாழுவதைவிடக் கயிற்றில் தொங்கித் தற்கொலை செய்துகொள்வதுதானே!'' என்று கடிந்துகொண்டாள் பத்மா.

மணிமேகலைக்கு ஒன்றும் தோன்றவில்லை. சற்று நேரத்தில் சுயவுணர்வு பெற்றதும், "அக்கா...'' என்று ஆரம்பித்தாள்.

"போதுமடி. பேசாமல் உன் அறைக்குப் போ. உன்னைப்பற்றி ஊர்வேறு அறியவேண்டுமா!'' என்று சொல்லிக்கொண்டே சோர்ந்து உட்காரப் போனாள். அவளைத் தாங்கிப் பிடித்துப் படுக்கையில் கொண்டு கிடத்தினான் நடராஜன்.

அடக்கமே உருவான அழகு மங்கை மணிமேகலை பொங்கிவந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, தன் அறைக்குத் திரும்பினாள். பத்மா சொன்ன வார்த்தைகள் அவள் உள்ளத்தை வேலெனத் தாக்கின. மணந்துகொண்டவன் கொழும்புக்குச் சென்று மாதங்கள் பலவாயின. பணம் அனுப்பியிருந்தாலும் பெருமிதத்துடன் நடந்துகொள்வாள்; பெருமையாகவும் நடத்தப்படுவாள். அந்தோ பரிதாபம்! அடிமை வாழ்க்கை—அதில் இன்று கொடுமையின் உச்சக் கட்டம். கற்புக்கும் களங்கம் விளைவிக்கிற அளவு வேதனை...! தற்கொலை செய்துகொள்ளவே தீர்மானித்துவிட்டாள், அந்தத் தங்கக் குணம் படைத்த நங்கை.

* * *

காலைக் கதிரவனின் செங்கதிர்கள் நடராஜனின் வீட்டுக் கதவைத் தழுவு முன்பே மணிசேகரன் வந்து கதவைத் தட்டினான். எதிர்பாராத விதமாக மணிசேகரனைக் கண்ட நடராஜன் சிங்கத்தைக் கண்ட சிறுநரிபோல் அதிர்ச்சியடைந்தான். பத்மாவும் படுக்கையை விட்டு எழுந்து வரவேற்றாள். வந்ததும் வராததுமாக, மணிசேகரனின் கண்கள் மணிமேகலையைத் தேடின. ஆவலை அடக்க முடியாமல், "அண்ணி, மணிமேகலை எங்கே?'' என்று கேட்டான்.

"மணிமேகலை...மணிமேகலை இதோ உன் வீட்டுக்காரர் வந்திருக்கார்'' என்று அழைத்தாள். அதற்குள் மணிசேகரனே எழுந்துபோய் அறையின் கதவைத் திறந்தான். அங்கே மணிமேகலையைக் காணவில்லை! விரிந்து கிடந்த படுக்கையில் ஒரு கடிதம் மட்டுமே காணப்பட்டது.

மணிசேகரனின் மனம் குழப்பமடைந்தது. நடுங்கும் கரங்களுடன் அதை எடுத்துப் படித்தான். அதில்,

"அன்புள்ள அக்கா, என் கணவர் என்னை மறந்துவிட்டாரென நினைக்கிறேன். இல்லாவிட்டால் பணம் அனுப்பியிருப்பார் அல்லது ஒரு கடிதமாவது எழுதியிருப்பாரே! இந்நிலையில் நான் உங்களுக்கு ஒரு சுமையாக வாழ விரும்பவில்லை. உங்களுக்கு எவ்விதத்திலும் துரோகம் நினைத்ததில்லை. நான் நிரபராதி என்பதை நம்புங்கள். என்னைத் தேடவேண்டாம். என்றைக்காவது என் கணவர் வந்தால் அவருக்கு என் வணக்கத்தைச் சொல்லுங்கள்.

சாவைத் தழுவிக்கொள்ளப்போகும்
உங்கள் அன்புத் தங்கை,
மணிமேகலை.

கடிதத்தைப் படித்த மணிசேகரன் கனல் தெறிக்கும் கண்களுடன் திரும்பினான். எதிரே நின்றிருந்த நடராஜனையும் பத்மாவையும் சுட்டெரித்துவிடுவதுபோலிருந்தது அவனுடைய தோற்றம். "அடப் பாவிகளே! அநியாயமாகப் பெண்ணொருத்தியைக் கொன்றுவிட்டீர்களே! மாதாமாதம் பணம் அனுப்பியும் அடைக்கலமென விட்டுச் சென்ற அவளைத் தற்கொலை செய்துகொள்ளுமளவுக்குக் கொடுமைப் படுத்தி மோசம் செய்துவிட்டீர்களே! ஐயோ... மணிமேகலை" என்று கதறினான்.

சொற்பச் சம்பளம் பெறும் தன் கணவனுக்குப் படாடோபமாகச் செலவு செய்வதற்குப் பணம் கிடைத்து வந்த இரகசியம் அப்பொழுதுதான் பத்மாவிற்குத் தெரியவந்தது. வருகிற மணியார்டரையும், கடிதத்தையும் கடையிலேயே வைத்துப் பெற்றுக்கொண்டு வீட்டில் சொல்லாமலே ஆடம்பரசெலவு செய்து வந்த நடராஜனை எரித்து விடுவதைப்போலப் பார்த்தாள் பத்மா.

"ஐயோ! எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டீர்கள்? பாவி, நான் தங்கையென்றும் பாராமல் கொடுமைப் படுத்திவிட்டேன்? பொறுமையாக இருந்தவளையும், தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிவிட்டேனே! இரவு நான் பேசிய பேச்சைப் பொறுக்காமல் என் தங்கம் சாவதற்குத் துணிந்து விட்டாளே!" என்று கதறினாள்.

"தம்பி, என்னை மன்னித்துவிடு. இப்படி நேருமென்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் செய்த நம்பிக்கைத் துரோகத்துக்குப் பரிகாரமாக இந்த வீட்டை உனக்கே எழுதிவைத்து விடுகிறேன். மன்னித்துவிடு......தம்பி, மன்னித்துவிடு" என்று மணிசேகரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான் நடராஜன்.

"மன்னித்து என்ன செய்வது? வீட்டைப் பெற்றுத்தான் என்ன செய்வது? மாசில்லா மாணிக்கம்—மணிமேகலை

உயிருடன் வரப்போகிறாளா? தேடுகிறேன்......தேடுகிறேன்! அவளது பிணத்தையாவது பார்க்கக் கொடுத்து வைக்கமாட்டேனா!" என்று சாந்தமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான் மணிசேகரன். பத்மாவும் நடராஜனும் பின் தொடர்ந்தனர்.

வாசல்வரை வந்த மூவரும் கற்சிலைகளைப் போல அப்படியே நின்று விட்டனர். எதிரே மணிமேகலையும் அவளது சிநேகிதி விமலாவும் அன்ன நடை போட்டு அழகாக வந்துகொண்டிருந்தனர்.

வீட்டை அடைந்ததும், தன் கணவனைக் கண்டு, வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டாள் மணிமேகலை. "ஆ மணிமேகலை!" என்று அன்போடு கட்டித் தழுவிக்கொண்டாள் பத்மா. ஆற்றிலே விழுந்து தற்கொலை செய்துகொள்ளப்போன மணிமேகலையைத் தடுத்து நிறுத்தியதையும், மணிசேகரன் வந்த செய்தியை அறிந்து அப்படியே வீட்டிற்கு அழைத்து வந்ததையும் விளக்கிக் கூறினாள் விமலா. கடைக் கண்ணால் மணிமேகலையைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான் மணிசேகரன். நடராஜன்......? பத்திரம் எழுதுபவரின் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான், வீட்டை மணிசேகரன் பெயருக்கு எழுதிவைக்க!

பக்தன் பாரதி

குமரி அனந்தன், M.A.,

பாரதி வாழ்ந்த காலத்தில் அவனைப் பித்தன் என்றனர் பலர். அவனே தன்னைச் சித்தன் என்றான். தாய்நாட்டு விடுதலையிலும் தாய் நாட்டு மக்கள் நல்வாழ்விலும் பித்துக் கொண்டலைந்தான். அஞ்சாது சித்தனைப் போல் உண்மைகளைக் கூறினான். வருங்காலத்தைச் சில இடங்களில் படம் பிடித்துக் காட்டினான். பாரதி ஒரு பக்தனாகவும் வாழ்ந்தான்.

மதச் சண்டையிலே முனைந்து மக்கள் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தபோது மதங்கள் இறையருள் என்ற மாளிகைக்குச் செல்லும் வாயில்கள் பல என்று உணர்த்தினான். மதத்தினைச் சூழ்ந்து நின்று மாசூட்டும் மூடக்கொள்கைகளைச் சாடினான். தெய்வம் ஒன்றே என்பதுதான் பாரதியின் கொள்கை.

"ஆத்திரங் கொண்டே இவன்
சைவன்-
இவன் அரிபக்தன் என்று
பெருஞ் சண்டை..."

இடுபவர்களைப் பார்த்து,

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று
தேடி அலையும் அறிவிலிகாள்!"

என்று கூவியழைத்து சமரச சன்மார்க்க பாதைகளைப் பைந்தமிழில் காட்டுகிறான்.

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்-
நித்தம் திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே-
நின்று கும்பிடும் யேசு மதத்தார்
யாவரும் பணிந்திடும் தெய்வம்-
பொருள் யாவிலும் நின்றிடும்
தெய்வம் பாருக்குள்ளே தெய்வம்
ஒன்று இதில் பற்பல சண்டைகள்
வேண்டாம்."

பாரதி இவ்வாறு ஒரே தெய்வத்தைத்தான் கண்டான். அவ்விறையை வணங்கினான். இறையன்பில்

மூழ்கினான். பாமாலைப் சூட்டி பல வரங்களும் கேட்டான்.

காணி நிலம்-அதில் மாளிகை நீரூற்று, தென்னை மரங்கள்; நிலாவொளி; குயிலோசை,இளந் தென்றல்- இவைகளைப் பராசக்தியிடம் வரமாகக் கேட்டதோடு, நிற்கவில்லை பாரதி. பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணையும் கேட்டு, இருவர் கூட்டுக் களியிலே கவிதையும் கேட்டான். இதற்கும் ஒரு படி மேலாகவே சென்று 'அன்னை வடிவமாம்' பராசக்தியை அவர்களுக்குக் காவலாக அந்தக் காட்டுவெளியிலே நிற்கவும் சொல்கிறானே!

'எத்தனை சுயநலவாதி!' என்று இதனைப் படித்தவுடன் கூறிடத்தான் துடிக்கிறோம். துடிப்பை அடக்கித் தொடர்ந்து படித்தால்தான் தனது,

"பாட்டுத் திறத்தாலே-இவ்வை
யகத்தைப்
பாலித்திட வேணும்"

என்று பாரதி துடிப்பது தெரிந்து வியந்து நிற்கிறோம்.

சுடர்மிகும் அறிவை இம்மாநிலம் பயனுற வாழ்வதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணும் பாரதியின் பரந்த மனப்பான்மைதான் என்னே!

தான் வாழவும் பிறர் வீழவும் நினைக்கவில்லை பாரதி. தான், தன் சுற்றம் என்ற குறுகிய வட்டங்களை விட்டெறிந்து விட்டு மக்கள் இனம் என்ற பரந்த வானவெளியிலே பறக்கிறது பாரதியின் உள்ளம்.

"தேடிச் சோறு நிதந் தின்று-பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி-மனம்
வாடித் துன்பமிக உழன்று-பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து-நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி-கொடுங்
கூற்றுக் கிரையானபின் மாயும்-பல
வேடிக்கை மனிதரைப் போலே-நான்
வீழ்வேனென்று நினைத் தாயோ?"

பிறந்து தனக்கென வாழ்ந்து மறையும் கடுகுள்ளங் கொண்டோரை 'வேடிக்கை' மனிதரென்று அழைக்கும் கிண்டலைப் பாருங்கள். தன்னைப் பிறர் வாழ்வுக்கென்று அர்ப்பணித்துக் கொண்டவன் பாரதி. பிறர் நலம் பேணாப் பேதையர் வாழ்வா பாரதி வாழ்க்கை?

பக்தன் பாரதி பராசக்தியிடம்,

"நின்னைச் சில வரங்கள் கேட்பேன்
—அவை
நேரே இன்றெனக்குத் தருவாய்"

என்று பாமாலை நீட்டிச் சில வரங்கள் கேட்டான்.

தனக்குச் செத்தபிறகு சொர்க்க லோக வாழ்வு வேண்டும் என்ற வரமா? கவிதை மலர் தூவிக் காளியிடம் கைலாயக்கதவு திறக்கும் திறவுகோலைக் கேட்கிறான் பாரதி? இவற்றிலே அவனுக்கு நம்பிக்கை இல்லை. அவ்வாறு நம்பிச் சொல்கிறவர்களையும் அவன் சும்மா விடுவதில்லை!

"செத்த பிறகுச் சிவலோக வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி
யிருப்பார்
பித்த மனிதர், அவர் சொலுஞ்சரித்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா
சங்கம்!"

பாரதியின் சங்கநாதத்தின் முன் இந்தப் பித்த மனிதர்கள் செத்துவிட மாட்டார்களா?

சரி; பின் பாரதி கேட்கும் வரந்தான் என்ன? இறையருளால் அவன் பெற விரும்புவதுதான் என்ன?

"செல்வ மெட்டு மெய்தி-நின்றுற்
செம்மையேறி வாழ்வேன்"

இவ்வரத்தால் மற்றவருக்கு என்ன பயன்? 'வேடிக்கை' மனிதரைப் போலல்லவா கேட்கிறான்! இன்னுமோர் இடத்தில்,

"கனக்குஞ் செல்வம்; நூறு வயது"

வேண்டும் என்று வேண்டுகிறான். நூறு வயதுவரை வாழ்ந்து அத்தனைக் கனக்குஞ் செல்வத்தையும் கரைத்தும் செல்வம் எட்டையும் திக்கெல்லாம் பரப்பி, தன்னின்ப நிறைவிற்கு வழி கோலும் சுயநலந்தானா, பாரதியின் வேட்கை? இல்லை; இல்லவே இல்லை. கேளுங்கள்.

"இல்லை என்ற கொடுமை-
உலகில் இல்லையாக வைப்பேன்"

வறுமைப் பேயை, இல்லை யென்ற நோயை விரட்டிவிடுவான் பாரதி! அதற்காகத்தான் இவ்வாறு வரம் கேட்கிறான்.

"காலா உனை நான் சிறு புல்லென,
என்றனன்
காலருகே வாடா! சற்றே உனை
மிதிக்கிறேன்"

என்று துணிச்சலோடு உயிருண்ணும் கூற்றைப் பார்த்து ஆதி தாளத்தோடு சக்ரவாக இராகத்தில் பாடியவன், அதே துணிச்சலையும் உறுதியையும் இறையிடமும் காட்டி வரங் கேட்கிறான். முன்னையது பகைவனிடம் காட்டும் வீரம். பின்னையது, அன்னையிடம் கொண்ட பாசத்தால் எழுந்த பிடிவாதமான வேண்டுகோள்.

"-அடி உன்னைக் கோடி முறை
தொழுதேன்"

ஆமாம்; பாரதியால் இனி பொறுக்க முடியாது. கோடி முறை தொழுதாயிற்றே! அதுவும் தொழுதது பாரதி! பக்தன் பாரதிக்கு வரமளிக்க இன்னுமா தாமதம்?

"இந்நாள், இப்பொழுதெனக்கிவ்
வரத்தினை அருள்வாய்......"

இன்றே வரத்தைத் தர வேண்டும். அதுவும் எப்பொழுதோ தரக்கூடாது. இப்பொழுதே-இந்தக் கணமே தர வேண்டும்!

அது சரி; இன்னும் வரத்தைச் சொல்ல வில்லையே!

"...................." —அடி உன்னைக்
கோடிமுறை தொழுதேன்-இனி
வையகத் தலைமையெனக்
கருள்வாய்..."

கனக்குஞ் செல்வம் எல்லாந் தாண்டி வையகத் தலைமையே கேட்டு விட்டானே? என்ன துணிச்சல்! இந்த ஏழைப் புலவனுக்கு எதற்கு வையகத் தலைமை? வையகத் தலைமை கொடுத்தால் என்ன தான் செய்து விடுவான், பாரதி? அவன் திட்டங்கள்—உறுதி மொழிகள் என்ன? அவனே கூறுகிறான் கேட்போம்.

"மண்ணி லார்க்குந் துயறின்றிச்
செய்வேன்-
வறுமை யென்பதை
மண்மிசை மாய்ப்பேன்"

"வானம் மூன்று மழை தரச்செய்வேன்
மாறிலாத வளங்கள் கொடுப்பேன்"

"ஞான மோங்கி வளர்ந்திடச்
செய்வேன்"

மண்ணுலகில், மாதம் மும்மாரி பெய்யும்; ஞானம் ஓங்கும். துயரம் இருக்காது. வறுமை மாண்டு மறைந்து விடும். இது மட்டுமா?

"பொய்க்குங் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே
கொணர்வேன்......"

இத்தனையுமா தருவான் பாரதி! மக்கள் இனம் மகிழ்ச்சிக்கடலில் திளைத்திடுமே! இறையே! பக்தன் பாரதி கேட்கும் வையகத் தலைமையைக் கொடுத்து விடு.

—★—

அனுமான் பிராண்ட் சிகரி

நமது நாட்டில் விளையும் சிகரி கிழங்குகளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. நூற்றுக்கு நூறு உத்திரவாதமுள்ளது. விபரங்களுக்கு எழுதுங்கள்:

தயாரிப்பவர்கள் :

சரஸ்வதி காபி டிரேடிங் கம்பெனி,
318/320, தெப்பம் மேல் பஜார்,
விருதுநகர்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

நக்கீரன்

அழகான கிராமம் ஒன்று இருந்தது. அதையடுத்துக் காட்டுப்பகுதி. வேடுவர்கள் நிறைந்த இடம் தான் காட்டுப்பகுதி. அங்கு வெயில் எரிப்பதே தெரியாது. அத்துணை அடர்த்தியாக மரங்கள் வளர்ந்திருந்தன. ஆனாலும் துஷ்ட மிருகங்கள் கொஞ்சமும் கிடையாது.

கிராமத்தாரும் வேடுவரும் ரொம்பப் பழக்கமுள்ளவர்கள். கிராமத்தையடுத்திருந்த பகுதிகளில் தாம் வேடுவர்கள் இருந்தது. பண்ட மாற்று செய்து கொள்வார்கள்.

காட்டுப்பகுதியில் குதிரைகள் இருந்தன. மாடுகளும் கூட்டம் கூட்டமாகச் செல்லும். அழகிய மான்கள் தங்களை மறந்து, மகிழ்ச்சியில் இனத்தவருடன் ஒன்றுகூடிப் போகும்.

மான்களைப் பிடிப்பதில்தாம் வேடுவர்களுக்கு ஆவல். ஏனெனில் கிராமத்தார் நல்ல விலை கொடுப்பார்கள்.

மான்களிடம் மறையாத பழக்கம் உண்டு. எங்குமே ஒன்றாகத்தான் போகும். இனத்தவரை விட்டுப் பிரிந்ததே கிடையாது. அத்துணை ஒற்றுமை-

* * *

மான்குட்டி ஒன்று இருந்தது. ரொம்பவும் அழகாக இருக்கும். மற்றவைகள் யாவுமே அதனிடம் அன்பு கொண்டிருந்தன. மான்குட்டி மற்றவைகளைத் துரத்தும், ஆடும், விளையாடும்.

ஒருநாள் எல்லா மான்களும் வழக்கம்போல் கிளம்பின. யாவும் ஒன்றாகத்தான் புறப்பட்டன. மான் குட்டியும் அக்கூட்டத்தில் இருந்தது.

மான் குட்டிக்கு வெகு நாட்களாகவே அடக்கமுடியாத ஆசை உண்டு, காடுமுழுதும் சுற்றிப்பார்க்க விருப்பம். பிற இனத்தவருடன் பழக வேண்டும் என்ற ஆவல். ஆனாலும் மற்றவைகளோ குட்டியைத் தனித்தே விடுவதில்லை. வேடுவர்கள் பிடித்துப்போய் விடுவார்களே என்ற பீதி.

மான்கள் மேய்ந்து கொண்டிருந்தன. மான்குட்டி பார்த்தது. பழைய ஆசை மீண்டும் எழுந்தது. திரும்பித் திரும்பிப் பார்த்தது. மெதுவாகப் புறப்பட்டது. மான்கள் கவனிக்கவேஇல்லை. சிறிது தூரம்தான் சென்றிருக்கும்,மான் குட்டி. பிறகு ஒரே துள்ளல்தான்;பாய்ந்தோடியது.

ஒவ்வொரு பகுதியாகக் காட்டில் சுற்றிப்பாக்க விருப்பம் மான்குட்டிக்கு. அதுவும் தன்னிச்சையாக கிளம்பி விட்டதில் ரொம்பவும் மகிழ்ச்சி. அடர்ந்த மரங்களைப் பார்க்கும்.அவைகளின் மீது தழுவிக்கிடக்கும் காட்டுச் செடிகளைப் பார்க்கும். பூக்களை நோக்கும். 'சலசல' வென்று இறக்கைகளை அடித்துக் கொண்டுபறக்க முற்படும் பறவைகளைப் பார்க்கும். மிகவும் அதிசயம் கொண்டது.அதனின் மருண்டபார்வை அழகை மேம்படுத்தியது. மெதுவாக வந்துகொண்டிருந்தது. காட்டின் மற்றொரு பிரிவுக்கு வந்துவிட்டது.

* * *

குதிரைகள் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தன. அதைக் கண்டதும் மான்குட்டிக்கே மிகவும் அதிசயமாக இருந்தது. அதனைப் பார்த்து விட்டது, குதிரை ஒன்று. ஏதோ நினைத்துக் கொண்டது.

குதிரையைக் கண்டதும், மான் குட்டி மிகவும் பயந்து போய்விட்டது. மிரள மிரள விழித்தது. குதிரைக்கோ வருத்தம் ஆனது. மான் குட்டியைப் பார்த்தது. அன்புடன் கேட்டது.

"பயப்படாதே! தனித்து வந்து விட்டாயா? வழிதெரிய வில்லையா?" என்றது. ஏனெனில் காட்டின் ஒரு பகுதியில் தான் மான்கள் வசித்து வந்தன. அதைத்தாண்டிப் பிரிதொரு பிரிவுக்குச்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே!—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவருக்கும் தாழ்வே!"—பாரதி பாடல்.

செல்வதில்லை. அதனுல் வழிதவறி வந்திருக்கலாம் என்றே குதிரை சந்தேகம் கொண்டது.

ஆனுல், மான்குட்டியோ கேட்டவுடன் குதிரையின் கருத்தைப் புரிந்து கொண்டு சொன்னது.

"எனக்கு யாவும் தெரியும். சும்மா தான் வந்தேன்" என்றது.

குதிரைக்கு நம்பிக்கை இல்லை. சிறிது நேரம் யோசித்தது. மான்குட்டியிடமே கூறியது:

"வேண்டாம். உனக்கு ஒன்றுமே தெரியாது; தனிமையில் இருக்காதே. ஏமாந்து போய்விடுவாய். உன் கூட்டத்தாரிடம் கொண்டுவிடுவேன்" என்றது.

"என்னிடத்தில் நம்பிக்கை உண்டு. ஏமாந்து போகமாட்டேன்" என்றது மான்குட்டி துள்ளியவாறே விளையாடத் துவங்கி விட்டது.

இனத்தவருடன் குதிரையும் புறப்பட்டுப் போயிற்று.

* * *

நாட்கள் ஆகின. காட்டின் பெரும்பான்மையான இடங்கள் யாவையும் மான்குட்டி தெரிந்து கொண்டு விட்டது. வேடுவர்களின் குழல் ஒலி கேட்கும். காதுகளைத் தீட்டிக்கொள்ளும். அப்படியே நின்று விடும்.

குறிப்பிட்ட சுனைக்குத்தான் பொதுவாக யாவும் தண்ணீர் குடிக்க வரும். குறிப்பிட்ட நேரத்தைத் தெரிந்து கொண்டவர்கள் வேடுவர்கள். சிறு சிறு குழிகள் வெட்டி இருப்பார்கள். மேலே இலைகளைப்போட்டு மறைத்து விடுவார்கள். குதிரைகள் வரும். பள்ளங்களில் கால் தடுக்கி விழுந்துவிடும். மேற்புறம் வரவேமுடியாது. வேடுவர்களுக்குத் தெரியும். குழல்களை ஊதுவார்கள். மற்றவைகள் மிரண்டோடும்.

பசிக் களைப்பினுல் அடங்கிப்போய் விடும் குதிரைகளை மெதுவாகக் கயிற்றினுல் பிணைத்திடுவார்கள். கிராமத்துக்குக் கொண்டுபோவார்கள். பச்சிலைச்

சாற்றைத் தடவியதும் குதிரையின் கால்களில் காயங்கள் ஆறிப்போகும்.

* * *

ஒரு நாள் இருக்கும். தன்னை மறந்துதிரிந்துகொண்டிருந்த மான்குட்டி ஏதோ சப்தம் கேட்டதும் மிரண்டு போய் சமீபம் இருந்த புதரில் மறைந்து கொண்டது. வெளியே பார்த்தது.

வேடுவர்கள் வந்தார்கள். குழிகளைப் பறித்தார்கள். சிறு சிறு குச்சிகளை அதன்மேல் பரப்பினார்கள். இலைகளைப் போட்டார்கள். அதற்குள் ஒருவர் சொன்னார்:

"நாளைக்கு எப்படியும் நாலைந்து குதிரைகள் அகப்படும். கவலை யில்லை" என்றார். அதைக்கேட்ட மற்றொருவர் சொன்னார்:

"ஆமாமாம்! குதிரைகளுடன் மான்களையும் பிடித்துவிட வேண்டும். எதிர்ப்புறம் வலைகளை விரித்து விடுவோம். மான்குட்டி ஒன்று தனியாக இருக்கிறது. ரொம்பவும் அழகு.எனக்கு மிகவும் ஆசை. அதைப் பிடிப்பேன். நானே வளர்ப்பேன். அதன் கூட்டத்தைவிட்டு வந்துவிட்டது போன்று இருக்கிறது. மிகவும் தவிக்கிறது" என்றார்.

புதருக்குள் இருந்தமான்குட்டி யாவையும் கேட்டது. வேடுவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு விட்டது. எப்படியானாலும் குதிரைகளையும், தன் இனத்தவரான மான்களையும் காப்பாற்றிவிட வேண்டும் என்று நினைத்தது.

* * *

நேரம் ஆனது. வேடுவர்கள் யாவரும் போய்விட்டனர். புதரை விட்டு வெளி வந்த மான் குட்டி ஓட்டமாக ஓட ஆரம்பித்தது. ஏனெனில் குதிரைகள் வரும் பாதை அதற்கு நன்கு தெரியும். அங்கு போய் நின்று கொண்டது.

வழக்கம் போன்று குதிரைகள் வந்தன. மான் குட்டியைப் பார்த்தன. ஒரு நாள் அதனிடம் பேசிய குதிரை முன் வந்தது. அன்புடன் கேட்டது:

"நலமா?" என்றது.

மான் குட்டிக்கு மிகவும் மன வேதனை. நடந்தவைகள் யாவையும் எடுத்துச் சொன்னது. மேலும் தொடர்ந்தது:

"தண்ணீர் குடிக்க அந்த இடம் வேண்டாம். நானே நேரில் பார்த்தேன். மனிதர்களே மேலும் மோசம்; சுயநலம் கொண்டவர்கள். உங்களிடம் சொல்லி விட்டேன். என் சுற்றத்தாரையும் பிரிந்து வந்தேன். யாவும் தெரிந்து கொண்டேன். இப்போழுதே அவர்களிடம் போவேன். யாவும் சொல்வேன். நாம் ஏன் தனியாக வாழ வேண்டும். ஒற்றுமையுடன் இருப்போம். உங்களிடம் கூறுவதற்காகக் காத்திருந்தேன்" என்றது.

குதிரைகள் அதிசயித்துப் போயின. மான்குட்டியை எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. பழகிய குதிரை சொல்லிற்று:

"உலகை உணராத வயது ஆனாலும் எங்களைக் காப்பாற்றினாய். நமக்குள் பிரிவே வேண்டாம். தண்ணீர் குடிக்க பொதுவான இடத்துக்குத் தானே வர வேண்டி இருக்கிறது. நாம் என்றுமே நட்புடன் இருப்போம்... கூடி வாழும் எண்ணம் தான், கோடி நன்மையை அளித்தது. நம்முடைய இரண்டு இனங்களும் தப்புவித்தது" என்றது.

மான் குட்டி மகிழ்வுடன் தலையை ஆட்டியது.

* * *

மான் குட்டி தங்களை விட்டுப் பிரிந்ததிலிருந்து மான்களுக்கு ஒரே ஏக்கம்; அலைந்து தேடிப்பார்த்தன; கிடைக்கவில்லை. வேடுவர்கள் தான் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று எண்ணின. தினந்தோறும் மான் குட்டியைப் பற்றியே ஏங்கி வந்தன.

துள்ளிக் குதித்தவாறே தங்களிடம் வந்து சேர்ந்த மான் குட்டியைக் கண்டு அதிசயித்துப் போயின. மகிழ்ச்சி கொண்டன. மான் குட்டியோ தன்னைச் சூழ்ந்து கொண்டவைகளிடம் மீண்டும் ஆரம்ப முதல் யாவும் கூறியது.

"நான் உங்களை விட்டுப் பிரிந்தது தவறு தான். ஆனாலும் இப்போழுது காடு முழுவதும் தெரியும். வேடுவர்கள் நாளை வருவார்கள். ஏமாந்து போவார்கள். பிறரையும் காப்பாற்றினேன். நாமும் தப்புவித்தோம். இனிமேல் உங்களை விட்டுப் பிரியமாட்டேன். நாம் ஒன்றாகவே வாழ்வோம்."

மான்கள் பெருமைப்பட்டன. மான் குட்டியைப் போற்றின.

"பாட்டன்" பாரதி

கடலூர் ஹரிராமன்

பாரதி வாழ்க! பைந்தமிழ்க் கவிதை
சாரதி அன்னவன் செழுங்கவி பற்றி
முத்தமிழ்க் கவிஞர், வித்தகப் புலவோர்
மெத்தவே புகழ்ந்து மொழிந்தனர் பலப்பல
எனினும், யானும் இயம்பிட உரிமை
நனிமிக உண்டென நவில்வேன் ஏனெனில்
தாரகை போல்கவி தடவா நில்திகழ்
பாரதி யெந்தன் பாட்டன்! பாட்டனைப்
பற்றிப் புகழ்ந்துரை புரிந்திட்ட, ஈங்கு
மற்றவர் தனிலும் மிகுஉயர் உரிமை
பேரன் யானே பெற்றுள துணர்வீர்!
வீரன். சுதந்திரத் திரன், பாரதி
நாமம் வாழ்க நானில மிசையே
தேமதுத் தமிழ்போல் திகழ்ந்தே வாழ்க!
சூழ் இருள் தனிலும் துயர்தரும் அடிமை
பாழ்இருள் எங்கும் பரவிய போழ்தில்
சுடர்வான் வைகறை சொர்ணப் பரிதியாய்
அடர்ஒளிக் கவிதை அறிவொளி விரித்தான்;
பரங்கியர் ஆட்சியில் பதவிகள் பெற்றே
உறங்கியோர் தம்மை உணர்வுறச் செய்தான்;
யாப்பா கவிதை யாத்தான் மழலைப்
பாப்பாக் கள்மிகப் பயனுற வென்றே
ஏழையர் செல்வர் என்றிடும் பேதம்
வீழச் செய்திட விரைந்தெழுந் திட்டான்;
மென்மைப் பெண்டிரை, ஆண்மை- ஆண்களை
ஒன்றெனச் சொன்னான்; சரிநிகர் என்றான்
ஒன்றே சாதி என்றவன், பேதங்
கொன்றான் சமத்துவக் கவிஞனென் பாட்டன்!
அலைகடல் தாண்டி அகில மெங்கணும்
கலைமணங் கமழ கன்னித் தமிழ் தான்
பரவிட விழைந்து பாடிய பாரதி
இரவியாய் எழுந்தால்; எண் எழுத் தைத்தரும்
பள்ளித் தலம்இலா பைந்நகர் தனக்கே

கொள்ளிவைத் திடுஎனக் குமுறினன் ; மேலாம்,
கல்வியே உண்மைச் செல்வமென் றுரைத்தான்
சொல்லின் செல்வன்– சுடர்தமிழ்க் கவிஞன் ;
தனியொரு மனிதன் தகுஉண வின்றி
நளிபசி யதனல் நலிந்திட நேர்ந்தால்
புவியழித் திடுஎன பொதுமை நீதிக்
கவிதை வழங்கினன், கனித்தமிழ் தன்னில் ;
உண்மையே தெய்வம். ஓதிடும் மற்றெல்லாம்
மண்ணெனச் சொல்லி மாஇறை விளக்கம்
தந்தனன் ; அன்னவன் தாள்பணிந் திடுவோம் ;
வந்தனை புரிவோம் ; வணங்கிடு வோமே ;
மண்டபம் கட்டியும் மணிச்சிலை அமைத்தும்
தண்டமிழ்க் கவிஞன் திருபா ரதிதனைப்
போற்றல் தனிலும், புகழார் அன்னவன்
சாற்றிய அறவழி— சத்திய நெறிவழி
செல்வோம் ; பன்நலம் சூழும் ; வரும்பகை
வெல்வோம் ; வீரராய் வாழ்வோம் உலகில்
வாழ்கஎன் பாட்டன் பாரதி
காழ்புகழ் நாமம் காசினி மீதே !

தந்தி : குமரன் டெலிபோன் : { மில் : 93 / ஆபீஸ் : 583 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O., கோயமுத்தூர்.

நிறுவப்பட்ட கதிர்கள் ...	19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ...	5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும் 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்

எங்கள் நூலை
சென்னை ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

197703

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுகநாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

போன் : 203 தந்தி: "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்
அருப்புக்கோட்டை.

எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To திருநெல்வேலி (Via) விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி
2. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
3. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
4. விருதுநகர் To பெருநாழி
5. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
6. மதுரை To சாயல்குடி
7. மதுரை To அருப்புக்கோட்டை
8. மதுரை To நாகர்கோவில் (Via) சாத்தூர், கோவில்பட்டி திருநெல்வேலி, நாங்குநேரி,

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

Regd. No. 6928 "Registered as a Newspaper in Ceylon". PUTHUMAI

Edited and Published by K. T. Kosalram and Printed by J. Nadaraj. Manager. Mohan Ram Press, at 101, Purasawalkam High Road, Madras-10.